அறிவியல் புனைகதைகள்

ஜெயமோகன்

விசும்பு

விசும்பு

அறிவியல் புனைகதைகள்

ஜெயமோகன்

விசும்பு

அறிவியல் புனைகதைகள்

ஜெயமோகன்

பிறந்தது 1962, ஏப்ரல் 22ல். பள்ளி நாள்களில் ரத்னபாலா என்கிற சிறுவர் இதழில் முதல் கதையை எழுதினார். 1987ல் கணையாழியில் எழுதிய 'நதி' சிறுகதை பரவலாகக் கவனம் பெற்றது. 1988ல் எழுதப்பட்ட 'ரப்பர்' நாவல் அகிலன் நினைவுப்போட்டியின் பரிசைப் பெற்றது. இது தவிர கதா விருதும் சம்ஸ்கிருதி சம்மான் தேசிய விருதும் பெற்றுள்ளார். இவர் எழுதிய விஷ்ணுபுரம் தமிழ் இலக்கிய உலகில் பெரிய கவனத்தைப் பெற்றதோடு விவாதத்தையும் ஏற்படுத்தியது. இவரது படைப்புகள் தொடர்ந்து தமிழ் இலக்கிய உலகில் அதிர்வலைகளையும் புதிய சாத்தியங்களையும் ஏற்படுத்திய வண்ணம் உள்ளன. தமிழ் மற்றும் மலையாளத் திரைப்படத் துறைகளிலும் இவரது பங்களிப்பு தொடர்கிறது.

‘சமர்ப்பணம்

எழுத்தாளர் சுஜாதாவுக்கு..,

நமது அறிவியலும் நமது புனைகதையும் (இரண்டாம் பதிப்புக்கான முன்னுரை)

இந்தக் கதைகளை நான் ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்காகவே எழுதினேன் என்று சொல்லமுடியாது. கதைகள் வழக்கம்போல சம்பந்தமில்லாத ஏதோ தொடக்கப்புள்ளியில் இருந்து முளைத்து கிளைவிட்டு எழுந்தவைதான். ஆனால் இவற்றை எழுதும்போது பல காலமாகவே என் மனத்தில் இருந்த ஓர் எண்ணம் துணையாக அமைந்தது. அதாவது அறிவியல் என்று நாம் இன்று சொல்லிக் கொண்டிருப்பது ஐரோப்பிய அறிவியலை மட்டுமே. கிரேக்க ஞானமரபில் வேர்கொண்டு ஐரோப்பிய மறுமலர்ச்சிக் காலத்தில் பேருருவம் கொண்ட அறிவியல் அது. உலகமெங்கும் உள்ள அறிவியல் ஞானங்களை முழுக்க அது தன்னுடைய தர்க்கக் கட்டுமானத்துக்குள் கொண்டுவந்து இன்று உலகின் ஒட்டுமொத்த அறிதல்முறையாக மாறிவிட்டிருக்கிறது.

ஆனால் இது அல்லாத அறிவியல்கள் உலகில் இருந்திருக்கின்றன. சீனாவுக்கும் இந்தியாவுக்கும் தனித்தன்மை கொண்ட அறிவியல்கள் இருந்தன. அவை ஐரோப்பிய அறிவியல்களைப் போல நவீனகாலத்துக்காகப் புதுப்பிறவி கொள்ளவில்லை. இன்றைய தேவைகளைச் சந்திக்குமளவுக்கு வளர்ச்சியும் அடையவில்லை. ஆனால் அவற்றின் மூலங்கள் இன்றும் இருந்துகொண்டுதான் இருக்கின்றன. இந்திய அறிவியலைப் பொருத்தவரை மருத்துவம், யோகம் ஆகிய இரு தளங்களில் அது மேலை அறிவியலைத் தாண்டிய பல நுண்ணிய தளங்களைத் தொட்டிருக்கிறது.

சமீபமாக உளவியலாளர் சி.ஜி. யுங்கின் எழுத்துக்களை விரிவாக வாசிக்கும்போது அது மேலும் உறுதிப்படுகிறது. யுங் இந்த உண்மையை உணர்ந்திருந்தார். மேலை உளவியல் என்பது இந்திய யோகமுறையுடன் ஒப்பிடும்போது குழந்தை நிலையிலேயே இருக்கிறது என்று அவருக்குத் தெரிந்திருந்தது. தன் எழுத்துக்களில் மேலை அறிவியலின் தர்க்கத்தைக்கொண்டு அதைப் புரிந்துகொள்ள யுங் மிகத்தீவிரமாக முயற்சி செய்கிறார்.

அறிவியல் புனைவு குறித்தும் எனக்கான ஒரு புரிதல் உள்ளது. அறிவியல் புனைகதைகள் என்பவை ஒரு வழக்கமான திகில் கதை அல்லது துப்பறியும் கதையில் சில அறிவியல் கூறுகளைக் கலந்துகொள்வன என்ற அளவிலேயே தமிழில் நம்மால் இதுவரை புரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது. அறிவியல் என்றால் தொழில்நுட்பம் சார்ந்த புதிய தகவல்கள் அல்லது வியப்பூட்டும் ஊகங்கள் என்றும் நாம் எண்ணுகிறோம். ஆகவே நம் அறிவியல் கதைகள் எந்திரன்கள், வான்வெளிப் பயணம், வேற்றுக்கோள் உயிர்கள் ஆகியவை சார்ந்தே உள்ளன. இவையல்லாமல் அறிவியல் கதைகளை நம்மால் கற்பனை செய்ய இயலவில்லை.

என் நோக்கில் அறிவியல் கதை என்பது இருதளங்களில் செயல்படக்கூடியது. ஒன்று அறிவியலின் கேள்விகளுக்கு இலக்கியத்தின் வழிமுறையான கற்பனையைக்கொண்டு பதில் சொல்ல முயல்வது. இது ஒரு மேலோட்டமான தளம். இரண்டு, வாழ்க்கையின் அடிப்படைக் கேள்விகளுக்கு அறிவியலின் படிமங்களைப் பயன்படுத்திப் பதில் தேட முயல்வது. எப்படி புனைகதையானது வரலாற்றில் இருந்து படிமங்களை எடுத்துக்கொண்டு வரலாற்றுக்கதைகளை உருவாக்குகிறதோ அப்படி. காலம், மரணம், பிறப்பு மற்றும் இறப்பின்

பொருள், இருத்தலின் நோக்கம், மானுட உறவுகளின் சிக்கல்கள், மானுட உணர்ச்சிகள் என எவற்றையெல்லாம் வழக்கமாக இலக்கியம் ஆராய்கிறதோ அவற்றையே அறிவியல் புனைகதைகளும் அறிவியலின் படிமங்களைக்கொண்டு ஆராய்கின்றன.

இவ்விருவகைகளில் எழுதப்படும் அறிவியல் புனைகதைகளுக்கே இலக்கிய மதிப்பு இருக்க முடியும்.மற்றவை வெறும் வேடிக்கைகள் மட்டுமே. அப்படிப்பட்ட இலக்கியத்தரமான அறிவியல் புனைகதைகள் அறிவியலும் மானுட ஆழ்மனமும் சந்திக்கும் புள்ளியில் இருந்து உருவாகின்றன. நம்முடைய ஆழ்மனமானது நம் மரபில் இருந்து வந்துள்ள நம் அறிவியலுடனேயே அதிகமும் உரையாடுகிறது. அதில் இருந்தே அது வலுவான படிமங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆகவே நாம் எழுதும் அறிவியல் புனைகதைகள் நம்முடைய சொந்த அறிவியலை இன்னமும் நுணுகிக் கையாளக்கூடியவையாக இருக்கவேண்டும். எப்படி நம் இலக்கியம் நம் பண்பாட்டில் இருந்து உருவாகின்றதோ அப்படி நம் அறிவியல் புனைகதைகளும் நம் பண்பாட்டில் இருந்து உருவாக வேண்டும்.

அந்த நம்பிக்கையுடன் நான் நான்கு வருடங்கள் முன்பு இந்தக் கதைகளை எழுதினேன். இவை இந்திய அறிவியல்கதைகள். தமிழ் அறிவியல் கதைகள். இந்திய, தமிழ் எழுத்தாளனால் மட்டுமே எழுதப்படத்தக்கவை. இவை ஒரு முன்னுதாரண முயற்சிகள். இன்னமும் வீரியம் கொண்ட கதைகள் இந்தத் தளத்தில் மேலும் தமிழில் உருவாகி வரவேண்டும். இவ்வகை அறிவியல் புனைகதைகள் மேலைநாட்டு அறிவியலைஒட்டி அங்குள்ள அறிவியல் புனைகதைகளைச் சார்ந்து எழுதப்படும் கதைகளைவிட தமிழ் மனத்தை ஆழமாகப் பாதிக்கக்கூடியவை.

இந்த நம்பிக்கை கடந்த வருடங்களில் இந்நூல் மூலம் மிக மிக உறுதிப்பட்டது. இத்தொகுப்பில் உள்ள ‘உற்று நோக்கும் பறவை’, ‘ஐந்தாவது மருந்து’ போன்ற கதைகளைப் பற்றி இன்றுவரை தொடர்ச்சியான விவாதங்கள் பல தளங்களில் நடந்த படியே உள்ளன. தமிழில் வேறெந்த அறிவியல் புனைகதைகளையும் பற்றி இத்தனை கவனம் குவிக்கப்பட்டதில்லை. இவ்வளவு நீண்ட தொடர் விவாதம் நிகழ்ந்ததில்லை. காரணம், இவை பேசும் கேள்விகள் ஏற்கெனவே தமிழ் மனத்தை அலைக்கழித்துக் கொண்டிருப்பவை என்பதும் அக்கேள்விகளை மிகத் தீவிரமாகவே இக்கதைகள் எதிர்கொள்கின்றன என்பதும்தான். அறிவியல் புனைகதை என்பது மன மகிழ்வூட்டும் ஒரு வேடிக்கைப் புனைவுதான் என்ற தளத்தில் இருந்து இக்கதைகள் மூலம் தமிழிலக்கியம் முன்னகர்ந்திருக்கிறது.

முதலில் இக்கதைகளை வெளியிட்ட திண்ணை இணைய தளத்துக்கும் முதற்பதிப்பை நூலாக வெளியிட்ட எனி இண்டியன் பதிப்பகத்துக்கும் இப்போது மீண்டும் வெளியிடும் கிழக்கு பதிப்பகத்துக்கும் நன்றி.

ஜெயமோகன்

உள்ளே

1. ஐந்தாவது மருந்து

2. இங்கே, இங்கேயே...

3. விசும்பு

4. பூர்ணம்

5. பித்தம்

6. உற்றுநோக்கும் பறவை

7. நம்பிக்கையாளன்

8. நாக்கு

9. தமிழ் இலக்கிய வடிவங்கள்: நேற்று, இன்று, நாளை - ஓர் ஆய்வு குறிப்புகளுக்காக

1. ஐந்தாவது மருந்து

எயிட்ஸுக்கு மருந்து கண்டுபிடித்தவன் இருக்கும் ஊரில் கொக்கோ கோலா கிடைக்கவில்லை. வழியெங்கும் அடர்த்தியான தென்னந்தோப்புகளில் இளநீர்க் குலைகள்தான் தொங்கின. சரியான தாகம். பிரதாப், 'பேசாமலிரு. போய் நல்ல கிணற்றுத் தண்ணியே சாப்பிடலாம்' என்றான்.

ஊருக்கும் ஒரு மலையாள நெடி இருந்தது, பெயரில் தொடங்கி. அச்சன்குளத்துக்கு கார்கள் வருவதே அதிகமில்லை போலும். மாட்டு வண்டிப் பாதையில் இரு செம்மண் குழிகள் இணை ஓடைகள் போல உருவாகியிருந்தன. அடிக்கடி தென்பட்ட குளங்களில் எல்லாம் தாமரைகள். அபூர்வமாக நீலத் தாமரையைக் கூடப் பார்த்தேன்.

'ஒரு கிராக்கைப் பாக்க இத்தனை தூரம் வரணுமாண்ணு இருந்தது. ஆனா ஊரைப் பாக்கிறப்ப வரவேண்டிய ஊர்தாண்ணு படுது' என்றேன்.

'தளவாய் கிராக்கு மட்டுமில்லை. அவனோட நல்ல கட்டுரைகள் முக்கிய ஜேர்னல்களில வந்திருக்கு' என்றான் பிரதாப் மேனன்.

'எயிட்ஸுக்கு மருந்தா? அடுத்த மருத்துவ நோபல் வெற்றியாளனை இந்த கிராமத்தில் பாக்கப் போறமா? சினிமாக் கதை மாதிரில்லா இருக்கு?'

'பாக்கலாம்' என்றான் பிரதாப்.

அச்சன்குளம் வசதியான வேளாள வீடுகள் கொண்டது. அழி இறக்கிய இரண்டு தட்டு ஓட்டு வீடுகள். சிமிண்ட் கள முற்றங்கள். பெரிய வைக்கோல் போர்கள். களங்கள் தோறும் ஏதாவது பொருள்கள் உலர, பெண்கள் காவலிருந்தனர்.

ஆறுமுக பவனம் ஊரிலேயே பெரிய வீடு. களமுற்றத்தில் கார் சென்று நிற்க திண்ணை பெரிதாகியபடியே வந்தது. ஐம்பது பேர் வரிசையாகப் படுக்கலாம். முற்றத்தில் உளுந்து காயப்போட்டிருந்தது. திண்ணையிலிருந்த கிழவர் கண்மீது கை வைத்துப் பார்த்தார்.

'வணக்கம்!'

'வாங்க தம்பி... உக்காருங்க... ராஜப்பாவப் பாக்க வந்தியளா?'

'ஆமா. திருவனந்தபுரத்திலேருந்து வாறம்.'

'ஒக்காருங்க. பார்வதீ...'

ஒரு தடித்த அம்மாள் மோர் கொண்டுவந்தாள். டம்ளர்களில் அல்ல, பெரிய செம்பில். விட்டுக் குடிக்க சிறு பித்தளைப் போணிகள்.

'நீங்க அவனோட கூட்டுக்கரம்மாரா தம்பி?'

'ஆமா, அவன்கூடச் சேந்து படிச்சோம்.'

'கோட்டும் சூட்டுமா காரில வாறீங்க. இவனும் நல்லாத்தானே படிச்சான்? எப்பிடி இருக்கான் பாருங்க. பண்டாரம் பரதேசி மாதிரி. எப்பிடி இருக்கவேண்டிய பய...'

அதற்குள் மாடியிலிருந்து தளவாய் ராஜா இறங்கி வந்தான், 'வாடே வாடே' என்று சிரித்தபடி. நரைத் தாடி. காவி வேட்டி, துண்டு. 'வாடே, மேல போலாம்.'

'என்னடே சாமியாராயிட்டியா?'

'எங்க? ஆனா ஊரிலே இந்த வேசம் பெரிய சௌரியம். கிராக்குத் தனமா இருக்கலாம். கல்யாணம் காட்சிக்குப் போகாட்டிப் பிரச்னையில்லை. இதக் கட்டாம கிராமத்தில சுதந்தரமா இருக்க முடியாது. என்ன, அப்பப்ப சிலர் திருநீறு பூசிக்கணும்ணு வருவாவ. சரி வா.'

அவன் அறை ஒரு பெரிய ஆய்வகமும் ஒரு நூலகமும் குரங்குகளால் இரண்டறக் கலக்கப்பட்டதுபோல இருந்தது.

'எயிட்சுக்கு மருந்து கண்டுபிடிச்சுட்டேன்னு எழுதியிருந்தே...'

'ஆமா. அதப்பத்தி இன்னும் யாருட்டயும் சொல்லல. உங்ககிட்ட சில விஷயங்கள் பேசணும். பேசாட்டி எனக்குத் தல வெடிச்சுடும் போல இருந்தது... அதான் எழுதினேன்...'

'வெளையாடறியா?'

'ஒரு அசல் கண்டுபிடிப்பு இந்தியாவிலே நடக்கவே முடியாதுண்ணு நீ நம்பறதுதான் பிரச்னை. காரணம் இங்க நவீன மருத்துவம் வெறும் நுகர்பொருளாத்தான் இருக்கு. ஆராய்ச்சியே நடக்கலை. நவீன மருத்துவமே வெள்ளைக்காரனுக்கு உரியதுன்னு நாம நம்பறோம்...'

'அதான் உண்மை.'

'ஆனா நமக்குண்ணு அதைவிடப் பழசான ஒரு மருத்துவ மரபு இருக்கு... உதாரணமா சித்த மருத்துவம்...'

'இருக்கு. ஆனா இப்ப சொன்னியெ அதான் சரி. அது பழசு. அதில ஆராய்ச்சியே நடக்கலை. அறிவியல் ரீதியான அணுகுமுறையே கெடையாது. எல்லாருக்கும் பொதுவான எந்த நிரூபண முறையும் இல்லை. முக்காப் பங்கு வெறும் மோசடி. அதிலயும் இண்ணைக்கு சித்த மருத்துவம்ங்கிறது ஸ்டீராய்டுகளால ஆடற ஆட்டம். ஏகப்பட்ட உலோகங்கள் வேற. பாதி மருந்துகள் சிறுநீரகத்தச் சீரழிச்சுடும்' என்றான் பிரதாப்

'நான் மறுக்கல்லை. இப்ப அது என் வேலை இல்லை. இண்ணைக்கு நீ பாக்கிற சித்த மருத்துவம் உண்மைல அதிக பட்சம் பதினாறாம் நூற்றாண்டிலே உண்டாகி வந்தது. ஆனா அது உண்மைல குமரிக் கண்டத்தோட காலம் முதல் இருந்துட்டு வார ஒரு வைத்திய மரபு. உலகத்திலேயே பழைய மரபு இது. அந்தக் காலத்த வச்சுப் பாத்தா உலகத்திலேயே முன்னேறிய மரபும் இதுதான். ஆனா படிப்படியா அது அழிஞ்சுட்டு வந்தது. ஏன்னா வரலாற்ற எடுத்துப் பார்த்தா ஒண்ணு தெரியும், தமிழ் நாகரீகம் அழிய ஆரம்பிச்சபிறகுள்ள காலம்தான் நம் கவனத்துக்கே வந்திருக்கு. தொல்காப்பியமேகூட அழிஞ்சுபோன ஏராளமான நூல்களோட சாரத்தைச் சுருக்கி எதிர்காலத்துக்காக சேத்து வச்ச நூல்தான். எல்லாப் பாட்டும் 'என்மனார் புலவர்'னுதான் முடியுது. தமிழ் வைத்தியமுறையும் அழிய ஆரம்பிச்ச காலம்தான் நாம அறியக்கூடிய தொல்பழங்காலம். அதுக்கு முன்னால பல ஆயிரம் நூல்கள் இருந்திருக்கு...'

தளவாய் தொடர்ந்தான். '...மழை விட்ட பிறகு தூவானம் மாதிரி சில ஏட்டுச் சுவடிகள் கிடைக்க அதை வச்சு அந்தக் காலத்தில உருவாக்கின ஒரு மருத்துவமுறைதான் சித்த மருத்துவம். நாம இப்பப் பாக்கிற சித்த வைத்தியம், அத நவீன மருத்துவ முறைப்படி பதினெட்டாம் நூற்றாண்டில சிலர் மாற்றி அமைச்சது...'

'அரைகுறை அறிவு அறியாமையவிட ஆபத்தானது...'

'ஆமா. கண்டிப்பா. எனக்குத் தற்செயலா எங்க தாத்தாவொட அண்ணா வச்சிருந்த சுவடிகள் சிலது மச்சிலே கிடைச்சது. அதப் படிக்க ஆரம்பிச்ச பிறகுதான் எனக்குக் கிறுக்கு

பிடிச்சுதுண்ணு அம்மை சொல்வா. அது சரிதான். ஒரு நூலுக்கும் இன்னொரு நூலுக்கும் நடுவிலே கிடைக்காமப் போன ஆயிரம் நூல் இருக்கு. அது என் கற்பனையத் தூண்டிவிடுது. விடவே முடியலை. தூக்கமே இல்லைண்ணு வச்சுக்கோ.'

'நீ உன் வாழ்க்கையை வீணடிக்கிறே. அவ்வளவுதான் சொல்வேன்' என்றான் பிரதாப்.

'எல்லாருமே ஏதாவது ஒரு விதத்திலே வீணடிச்சுட்டுதான் இருக்கோம்ங்கிறது என் எண்ணம்' என்று தளவாய் சிரித்தான். 'இண்ணைக்குள்ள சித்த வைத்தியத்தோட முக்கியப் பிரச்னை அது அலோப்பதி முறைகளை மறைமுகமா ஏத்துக்கிட்டு அதுக்கேத்தாப்பிலே மாத்தப்பட்டிருங்கிறதுதான். இரண்டு முறைகளுக்கும் அடிப்படையே வேற. நேர் மாறுண்ணுகூடச் சொல்லலாம். அலோப்பதி, நோய்க்குக் காரணத்தை மனித உடலுக்கு வெளியே தேடுது. கிருமிகள், பூச்சிகள் இந்தமாதிரி. சித்த மருத்துவத்தப் பொருத்தவரை நோய்ங்கிறது மனித உடலிலேயே இருக்கு. மனித உடல் அதோட சமநிலையை இழக்கிறதுதான் நோய். அதாவது நோய்க்கு எதிரா உடலைத் தயாரிக்கிறதுதான் சித்த மருத்துவம், கிருமியக் கொல்றது இல்லை. நோயில்லாதபடி வாழ்க்கையை அமைச்சுக்கறதப் பத்தித்தான் அது பேசுது...'

'நான் சித்த வைத்தியத்த இப்ப நியாயப்படுத்த மாட்டேன்' என்று அவன் தொடர்ந்தான். 'இண்ணைக்கு நவீன மருத்துவத்தில்தான் புது ஆராய்ச்சிகள் இருக்கு. மத்த அறிவியல் கண்டுபிடிப்புகளை பயன்படுத்தறதும் அங்கதான் அதிகம். உலகம் முழுக்க பொதுவான நிரூபண முறைகள் அவங்களுக்கு இருக்கு. ஆனா ஆராய்ச்சிக்குக் கண்டிப்பா சித்த வைத்தியம் மாதிரியான மாற்று வழிகளைப் பயன்படுத்திப் பாக்கணும். நான் செஞ்சது அதுதான்.'

'உன் மருந்து சித்த மருந்தா?'

'அப்டிச் சொல்ல முடியாது. என் கொள்கை அங்கேருந்து முளைச்சது, அவ்வளவுதான்' என்றான் தளவாய்.

'எய்ட்ஸுக்கு மருந்துண்ணு இதுவரை அம்பது சித்த வைத்தியனுங்க அறிவிச்சாச்சு. எல்லாமே போலி' என்றான் பிரதாப்.

'அவங்கள்லாம் பண்ணின தப்பு ஒண்ணுதான். சித்த வைத்தியச் சுவடிகளிலே எய்ட்ஸ் மாதிரியான ஒரு நோயோட இலக்கணம் இருக்கு. அதுக்கான மருந்தை இவங்க அப்டியே சொல்றாங்க. அதெல்லாம் பிரயோசனப் படறதில்லை.'

'ஏன்?'

'ஏன்னா நோய் அதுதான். கிருமி வேற' என்றான் தளவாய். 'பரிணாமக் கொள்கைப்படி ஒவ்வொரு உயிரும் அது சார்ந்து வாழக்கூடிய சூழலுக்கு ஏற்ப மாறிட்டே இருக்கு. இப்ப மனித உடல் ரொம்ப மாறிட்டது. பலவகையான மருந்துகளை நாம பயன்படுத்தறோம். அதுக்கேற்ப அந்த வைரஸ் தன் மொத்த அமைப்பையும் மாத்தி இன்னொண்ணா மாறிட்டே இருக்கு. இப்ப உள்ள ஹெச்.ஐ.வி கிருமி அப்டிப் புதிசா உருவாகி வந்தது... அதோட மரபணு அமைப்பே வேற. அதுக்குப் புது மருந்துதான் வேணும். சித்த மருத்துவத்தில் தாவர மருந்துகளை அஜீவம்னு சொல்றாங்க. பறவைகள் மிருகங்களிலேருந்து எடுக்கிற மருந்துகள் ஜீவம். மத்த ரசாயனங்களும் உப்புகளும் உலோகங்களும் ரசாயனம். மூணு மருந்துமே இதுக்குப் பயன்படாது...'

'குழப்பாமச் சொல்லு. உன்னோட மருந்தோட கொள்கை என்ன?'

'அதை ஒரு கதையாத்தான் சொல்லணும்' என்று அவன் ஆரம்பித்தான். 'தென்காசீல ஒரு ராஜ குடும்பம் இருந்தது கேட்டிருக்கியா? பாண்டிய வம்சத்தோட ஒரு கிளை அது. அவங்க குடும்பமே மர்மமான ஒரு நோயால அழிஞ்சு போச்சுண்ணு சரித்திரத் தகவல் இருக்கு. இது நடந்து ஐநூறு வருஷம் இருக்கும். அப்ப அந்த நோயால கிட்டத்தட்ட அம்பதாயிரம் பேர்

செத்திருக்காங்க. அண்ணைக்கு இது பெரிய எண்ணிக்கை இல்ல. அம்மை நோயால லட்சக்கணக்கான பேர் செத்திட்டிருந்த காலம் அது. தென்காசி ராஜகுடும்பம் மட்டுமில்ல, அவங்களுக்கு சிகிழ்ச்சை செய்த வைத்தியங்க எல்லாருமே செத்துட்டாங்க. அவங்களில ஒரு வைத்தியர் எழுதி வச்ச நோய்க்குறிப்புகள் அதிருஷ்டவசமாக் கிடைச்சிருக்கு. அந்தச் சுவடிகள் எங்க தாத்தா கைக்கு வந்து இப்ப என் கையிலே இருக்கு. நோயின் லட்சணங்களைக் கேட்டா அசந்துடுவீங்க. காரணமில்லாத காய்ச்சல், எடை குறையிறது, நோய் எதிர்ப்பு சக்தி இல்லாம ஆகி காசம் முதலான நோய்கள் தாக்கி மெல்ல மெல்ல உசிர் போயிடுது.'

'எயிட்ஸா? உண்மையான ஆதாரமா இது?' என்றான் பிரதாப் பரபரப்புடன்.

'அசல் சுவடியே இருக்கு. நீ பரிசோதனை செய்யலாம்' என்றான் தளவாய். 'ராஜ குடும்பத்திலே ஒரு இளவரசனுக்கு நோய் வந்திட்டது. அவன் மனம் வெறுத்து குற்றாலம் காட்டுக்குள்ளார போனான். தற்கொலை செய்றதுக்காகத்தான். அங்க அதிகாலைல தேனருவீல குளிச்சிட்டிருந்த ஒரு சித்தரைக் கண்டான். காலில விழுந்து அவன் அழுதப்ப மனமிரங்கிய சித்தர் அவனோட ஊருக்கு வந்தார். அவர் பேர் மாம்பழச் சித்தர். பெரும்பாலும் மாம்பழத்தையே உணவாச் சாப்பிடுவார்ணு கதை. அவர் முதலிலே நோயாளிகளை ஆராய்ச்சி பண்ணினார். அப்ப இருந்த எந்த மருந்துமே அந்த நோயை ஒண்ணும் பண்ண முடியலை. அவரால நோயை அடையாளம் காணவே முடியலை. வாதம், பித்தம், கபம் அப்டீங்கிற மூணு ஆதார சக்திகளிலே உண்டாகிற சமநிலைக் குலைவினாலேதான் நோய்கள் வருதுங்கிறதுதான் இந்திய வைத்திய முறைகளிலே பொதுவா இருக்கிற சித்தாந்தம். புராதன தரிசன மரபான சாங்கியத்திலேருந்து வந்த பார்வை அது. ஆனா இந்த மர்ம நோய் கண்ட நோயாளிகளிலே சிலருக்கு வாதம் கோபிச்சிட்டிருந்தது. சிலருக்கு பித்தம் தாறுமாறா இருந்தது. சிலருக்கு கபம் உச்சம். என்ன காரணம்னே அவரால சொல்ல முடியல. மூன்று ஆதார சக்திகளையும் இயக்கக் கூடியது உடலில் இருக்கக்கூடிய மூலாதார அக்னி. அந்தத் தீ வலுவிழந்து அணையிறதுதான் இந்த நோய்ண்ணு கண்டுபிடிச்சார். சித்த வைத்தியத்தோட மொழியிலே இருக்கே ஒழிய அந்தக் கணிப்பு சரிதான்.'

'ஆமாம்' என்றான் பிரதாப். எனக்கு அவன் அப்படிச் சொன்னது ஆச்சரியமாக இருந்தது.

'எப்படி?' என்றேன்.

'நோய் எதிர்ப்பு சக்தீங்கிறது என்ன? உயிர் வாழணும்னு உயிர்களுக்கு இருக்கிற அடிப்படையான துடிப்பு. செல்களிலே அதுக்கான இச்சை இருக்கு. அது இல்லண்ணா உயிர்ச் சக்தி அழிஞ்சு போயிட்டுதுண்ணுதானே அர்த்தம்?' என்றான் பிரதாப்.

'சித்தர் பழைய ஆதாரங்களைத் தேடிப் பிடிச்சுப் பரிசீலிச்சார். அப்ப அந்த ஆதாரங்களெல்லாம் சித்தர்கள்ங்கிற நாடோடி அறிஞர்கள் மத்தியிலே வாய்மொழி மரபா இருந்திருக்கணும். அப்ப அவருக்கு ஒரு விஷயம் தெரிஞ்சது. ஆயிரம் வருஷம் முன்னாடி இதே நோய் பாண்டிய ராஜ குடும்பத்தத் தாக்கியிருக்கு. அப்ப போகர் இருந்தார். இவர் எந்த போகர், எத்தனையாம் போகர்ணு தெரியலை. ஆனா அவர் பேரும் போகர். அவர் ஒரு மருந்து கண்டுபிடிச்சு நோயை விரட்டினார்... கருங்குரங்கோட ரத்தம், சிறுநீர் ரெண்டயும் கலந்து அவர் ஒரு மருந்து செஞ்சார். அதுதான் சித்த வைத்தியத்தில முதல் ஜீவ மருந்து. அதுவரைக்கும் சித்தமருத்துவம் அஜீவ மருந்துகளை மட்டும்தான் பயன்படுத்திட்டிருந்தது. அது ஒரு பெரிய புரட்சியோட தொடக்கம்...'

'அந்த மருந்து இப்ப இருக்கா?' என்றேன்.

'இப்ப சித்த மருத்துவம் ஏராளமான ஜீவ மருந்துகளைப் பயன்படுத்துது. சிட்டுக்குருவி லேகியம் உங்களுக்கெல்லாம் நல்லாத் தெரிஞ்சதுதான். ஆனா ஜீவ மருந்துகளால இந்த நோயை ஒண்ணுமே செய்ய முடியல்ல. அதனாலே மாம்பழச் சித்தர் ரெண்டு வருஷம் ஆராய்ச்சி செய்து ஒரு மருந்து கண்டுபிடிச்சார். ஈயத்தையும் தங்கத்தையும் கலந்து ஒரு புது

மருந்துக் கலவை. சித்த மருத்துவத்திலே ரசாயனங்களை பயன்படுத்தறது அதுதான் முதல் தடவை. இது இரண்டாவது பெரும் புரட்சி...’

தளவாய் தொடர்ந்தான். ‘உலோகங்களையும் ரசாயனங்களையும் சித்த மருத்துவத்தில் பஸ்பம் பண்ணியும், ஸ்புடம் போட்டும், பாஷாணமா ஆக்கியும் பல வகையில இப்ப பயன்படுத்தறாங்க. அதுக்குத் தொடக்கம் மாம்பழச் சித்தர்தான். அந்த நோய் அவர் செஞ்ச பஞ்ச பாஷாணத்தாலே குணமாயிட்டது. அவரோட சீடர்கள் அந்த ரசாயன வைத்தியத்தை சித்த வைத்தியத்துக்குள்ள தனி மரபா வளர்த்துப் பரப்பினாங்க.’

‘இப்ப அந்த மருந்துகளினால பயன் இருக்கா?’ என்றேன்

‘பலவிதமான நோய்களுக்கு அந்த மருந்துங்க இப்பவும் பயன்படுது. ஆனா எய்ட்ஸுக்கு அதனால பயன் இல்லை.’

‘ஏன்?’

‘நவீன மருத்துவம் நோயைக் கிருமிகளோட தாக்குதலா பாக்குது. அந்தக் கோணத்திலே யோசிச்சுப் பாருங்க.’

‘அப்ப எய்ட்ஸ் கிருமி சரித்திர ஆரம்ப காலம் முதல் இருக்கா?’

‘இருந்திருக்கணும். அது மனுஷ உடலிலே சாதாரணமா இருக்கக் கூடிய ஏதோ வைரஸ்தான். இப்பக்கூட அதன் வேறு வகை வடிவம் ஆப்ரிக்கக் குரங்குகளிலே இருக்கிறதாக் கண்டுபிடிச்சிருக்காங்க. அந்தக் குரங்குகளை இந்த வைரஸ் ஒண்ணும் செய்யறதில்லை. ஆப்ரிக்காவிலேதான் மனிதன் குரங்குக்கு சமானமான ஏதோ உயிரிலேருந்து பரிணாமம் அடைஞ்சு வந்தான்னு சொல்றாங்க. இந்த வைரஸ் அப்பவே நம்ம உடம்போட சேந்து இருந்திட்டிருக்கு. அத நம் உடம்பிலேருந்து பிரிக்க முடியாது. அதன் முதல் தாக்குதல் எப்ப? ஏன் அது நோயா ஆச்சு? நான் நினைக்கிறேன், எப்ப மனிதன் கலாசாரம் அடைஞ்சானோ, எப்ப குரங்கு அல்லாம ஆனானோ அப்பத்தான். சமைச்சு சாப்பிட ஆரம்பிச்சப்பவா? சீசன் பாக்காம உடலுறவு கொள்ள ஆரம்பிச்சப்பவா? குடும்பமா ஆனப்பவா? தெரியலை. ஆனா குரங்குகளுக்கு இந்த வைரஸால அபாயமே இல்ல. அது தாக்குறது மனுஷனைத்தான்.’

‘இல்லாட்டி மனுஷக் கலாசாரத்தைத்தான்’ என்றான் பிரதாப்.

‘ஆமா. மனுஷக் கலாசாரம் இந்த வைரஸை எதுத்துப் போராடிட்டிருக்கு. மனுஷன் முதலில் பச்சிலைகள் மூலம் மருத்துவம் செய்ய ஆரம்பிச்சப்ப இந்த வைரஸ் பலமிழந்தது. ஆனா அது மெதுவா தன் உயிரியல் அடிப்படைகளை மாத்தி அமைச்சுக்கிட்டு மறுபடி தாக்கியிருக்கு. அப்பத்தான் போகர் ஜீவ மருந்துகளைக் கண்டுபிடிச்சார். அது இந்த வைரஸைக் கட்டுப்படுத்திட்டது. ஆனா மெல்ல ஜீவ மருந்துகளுக்கும் எதிரா அது தன்னை மாத்திக்கிட்டது. அப்பத்தான் மாம்பழச் சித்தர் ரசாயன மருந்தைக் கண்டுபிடிச்சார். அந்த மருந்து இந்த வைரஸைக் கட்டுப்படுத்திட்டது. அதன் பிறகு ரசாயன மருந்துகளைத் தாண்டி இப்ப புது வடிவிலே பல மடங்கு சக்தியோட திரும்ப வந்திருக்கு. இப்ப உள்ள எந்த மருந்தும் அதைக் கட்டுபடுத்தாது...’

‘ஒரு நிமிஷம் தளவாய். நீ எல்லாத்தயும் சித்த வைத்தியத்தோட நிறுத்திட்டே. இது உலகளாவிய ஒரு பிரச்னை’ என்றேன்.

‘இதோ பார், உலகத்திலேயே பழைய வைத்திய முறை சித்த வைத்தியம்தான். இங்கேயிருந்துதான் இந்த மருந்துகள் சீனாவுக்கும் ஆப்ரிக்காவுக்கும் அரேபியாவுக்கும், ஐரோப்பாவுக்கும் போயிருக்கு. அந்த நாட்டு மக்கள் எல்லாருமே தமிழ்நாட்டைத் தேடிவந்த காலம் ஐநூறு வருஷம் முன்னாடிகூட இருந்திருக்கு. காலகட்டத்த வச்சு ஒப்பிட்டுப் பாத்தா சித்த வைத்தியம் தாத்தா மாதிரி. மத்த வைத்திய முறைகள் பேரப் பிள்ளைகள் இல்லாட்டி கொள்ளுப் பேரனுங்க. எல்லாமே இங்கேருந்து போய் வளந்ததுதான். அப்பிடி

இல்லைண்ணாக்கூட ஒண்ணு பாத்தாத் தெரியும். மருத்துவ முறைகள் அதிசீக்கிரமா உலகம் முழுக்க பரவிடுது. ஏறத்தாழ எல்லா இடத்திலேயும் புது மருந்துகள் ஒரே காலத்திலேதான் உபயோகத்துக்கு வருது...'

தளவாய் தொடர்ந்தான். 'இண்ணைக்கு நவீன மருத்துவம் பயன்படுத்தற மருந்துகள்கூட மூணு வகைதான். பெனிசிலின் மாதிரி தாவர மருந்துகள்லாம் அஜீவம். வாக்சின்கள் எல்லாம் ஜீவம். மத்ததெல்லாம் ரசாயனங்கள். மூணுமே எய்ட்ஸைக் குணப்படுத்தாது. ஏன்னா இந்த வைரஸ் மூணையுமே தாண்டிப் போகக்கூடிய உயிரியல் அமைப்பை வளத்து எடுத்திட்டிருக்கு...'

'அப்ப?'

'நாலாவது மருந்தைத்தான் பரிசோதனை பண்ணிப் பாக்கணும்' என்றான் தளவாய்.

'என்ன அது?'

'யோசிச்சுப் பார். பூமியிலே என்னென்ன இருக்கு? தாவரம், பிற உயிர்கள், ரசாயனங்கள். அப்புறம்? ஆமா, கதிர்கள்... பல நூறு நுண்கதிர்கள்... இப்பவே நாம கதிர்வீச்சை கான்சருக்கெல்லாம் மருந்தாப் பயன்படுத்தறோம்...'

'நீ என்ன பண்ணினே? கதிர் வீச்சினாலே லாபத்தவிட நஷ்டம்தான் அதிகம். அதைக் கட்டுப்படுத்தவே முடியாது...' என்றான் பிரதாப்.

'ஏற்கனவே கதிரியக்கம் சித்த வைத்தியத்திலே இருக்கு. சித்த வைத்தியர்கள்கிட்ட ரசக்கட்டு அப்டீன்னு ஒரு உத்தி இருக்கு. பாதரசத்த திடமான கட்டியா ஆக்கறாங்க. அதாவது அதன் மூலக்கூறு அமைப்பையே மாத்திடறாங்க. அது மென்மையான கதிரியக்கத்தை உருவாக்குது. நான் அந்த வழிகளைப் பயன்படுத்தி பழைய ஜீவ, அஜீவ, ரசாயன மருந்துகளிலே மென்மையான கதிர்வீச்சைச் செலுத்தினேன். இந்த மருந்து கிடைச்சது' என்று அவன் ஒரு சீசாவைக் காட்டினான். 'கட்டப்பட்ட ரசத்தின் அடியில் ஆறுமாசம் வைச்ச ஒரு ஜீவ ரசாயனக் கலவை இது. இது உடம்பிலே உள்ள செல்களுக்கு மிக மிகக் குறைவான கதிரியக்க சக்தியைக் குடுத்திடுது. கதிரியக்கத்துக்கான சக்தியை அது நம்ம உடல் வெப்பத்திலேருந்து எடுத்துக்கிடும். அந்தக் கதிரியக்கம் நம்ம உடல் செல்களை பாதிக்காது. பாக்டீரியாவைக்கூட ஒண்ணும் செய்யாது. வைரஸ்களை மட்டும்தான் அழிக்கும்...'

'இதால பயன் இருக்கா?'

'காட்டறேன். ஓமனக்குட்டியையும் தாமஸையும் ஞாபகமிருக்கா?'

'ஆமா. எய்ட்ஸ் நோயாளிகள். என் ஆஸ்பத்திரியிலேருந்து விட்டுட்டு போனவங்க.'

'இங்கதான் இருக்காங்க' என்ற தளவாய் கீழே எட்டிப் பார்த்தான். 'வரச் சொல்லியிருந்தேன். வந்திருக்காங்க.' சிறு சாளரம் வழியாக எட்டிப் பார்த்து 'மேலே வாங்க' என்றான்.

மட்கிய குச்சி போல படுக்கையில் எழ முடியாமல் கிடந்த இருவரும் ஆரோக்கியமான உடலுடன் சிரித்தபடி வந்து நின்றதைக் கண்டு பிரதாப் பிரமித்துவிட்டான்.

'எப்படி இருக்கே ஓமனா?'

'நல்லா இருக்கேன் சார். இங்க இன்னும் ஒரு மாசம் இருந்தாப் போயிடலாம்னு சார் சொல்றார்.'

'இவங்களை நீ நல்லா சோதனை பண்ணிப் பாக்கலாம்... இப்ப இவங்ககிட்டே எய்ட்ஸ் வைரஸ் இல்லை' என்றான் தளவாய்.

பிரதாப் அவர்களையே வெறித்துப் பார்த்தபடி வெகுநேரம் சொல்லிழந்து அமர்ந்திருந்தான். சட்டென்று எழுந்து தளவாயை ஆரத் தழுவிக்கொண்டான். 'டேய்... பித்துக்குளி மாதிரி

இருந்துட்டு... டேய்... நீ பெரிய ஆளுடா... ...'

'நம்ம நாட்டுக்கு அடுத்த நோபல் பரிசுய்யா!' என்றபடி நானும் தளவாயைக் கட்டிக்கொண்டேன்.

'ஆனா இந்த மருந்தோட மறுபக்கம் ஒண்ணு இருக்கு...' என்றான் தளவாய் விடுவித்தபடி.

'என்ன?'

'இந்த வைரஸ் முதலிலே தாக்கிய பிறகு பல ஆயிரம் வருஷம் தாவர மருந்துகளோட கட்டுக்குள்ள இருந்திருக்கு. ஆனா ஜீவ மருந்து கண்டுபிடிச்ச பிறகு ஆயிரம் வருஷத்திலே மறுபடி தாக்கியிருக்கு. உலோக ரசாயன மருந்துகளை ஐநூறு வருஷங்களிலே தாண்டி வந்திருக்கு. அதாவது அதன் பரிணாம வேகம் அதிகமாயிட்டே இருக்கு. இப்ப மனுஷங்க மருந்துகளை உபயோகிக்கிறது ரொம்ப அதிகம். மனுஷங்க உலகம் முழுக்கச் சுத்திட்டே இருக்காங்க. அப்ப அது சீக்கிரமா அடுத்த கட்ட பரிணாம வளர்ச்சியை அடைஞ்சுடும். அதாவது அடுத்த தாக்குதல் நூறு வருஷத்துக்குள்ள இருக்கலாம்...'

என் மனம் சில்லிட்டது

'அப்ப கதிரியக்க மருந்தையும் இந்த வைரஸ் தாண்டிடும். பூமியிலே வேற என்ன இருக்கு மருந்தாக? எதுவுமில்லை! அஞ்சாவது மருந்தை மனிதன் கண்டுபிடிப்பான்னு என்ன உத்தரவாதம் இருக்கு? இந்த வைரஸ் அப்ப மனிதகுலத்தையே அழிச்சிடுமா?' என்றான் தளவாய்.

'என்னடா உளறுறே?'

'இல்லடா. தத்துவார்த்தமா யோசிச்சுப்பாரு. மனுஷ இனமே இயற்கையை எதுத்துப் போராடி வளந்ததுதான். நம்ம கலாசாரமே இயற்கைக்கு எதிரானதுதான். காடுகளை அழிச்சிட்டோம். தண்ணீரை வீணடிச்சிட்டோம். இப்ப இயற்கை நம்மைத் திருப்பி அடிக்குதா என்ன? நம்ம இடுப்பில கயிறு கட்டி மறுநுனியைக் கைல பிடிச்சுட்டு, போறவரைக்கும் போ அப்டீண்ணு விட்டிருக்கா? கயிறு முடிஞ்சதும் என்ன ஆகும்?'

'என்னடா ஆச்சு உனக்கு? அற்புதமான மருந்தைக் கண்டுபிடிச்சுட்டு...'

'இல்லடா. இப்ப என் மருந்து பல லட்சம் பேரைக் காப்பாத்தும். ஆனா இதே மருந்துதான் நூறு வருஷம் கழிச்சுப் பல கோடி பேர் சாகவும் காரணமா அமையும். மாம்பழச் சித்தர் கண்டுபிடிச்ச மருந்துதான் இண்ணைக்குள்ள எயிட்ஸ் கிருமிய உருவாக்கிச்சு. நான் எந்த மாதிரி பயங்கரமான கிருமிய உருவாக்கப் போறேன்?'

நாங்களும் கிட்டத்தட்ட வாயடைத்துப் போனோம்.

'மருந்து கண்டுபிடிக்கிறதுக்குப் பதில் நாம ஏன் இயற்கையோட சமரசம் பண்ணிக்கக் கூடாது? இந்த எய்ட்ஸோட ஒத்துப்போய் வாழ முயற்சி செய்யலாமே? இயற்கையான முறையில் இதைத் தவிர்த்துட்டு வாழலாமே? இந்த வைரஸ் நம்மை விடாது. ஏதோ வடிவிலே நம்மகூட இருக்கும். அதை எதுக்க எதுக்க அது விசுவரூபம்தான் எடுக்குது! ஏன் அதை அப்டியே விட்டுடக் கூடாது? அது நம்மைக் கட்டுப்படுத்தற ஒரு இயற்கைச் சக்தீண்ணு ஏன் நினைக்கக் கூடாது? நமக்கும் ஏதாவது ஒரு கட்டுப்பாடு வேணும். இப்பப் போற போக்கிலே நாம் சீக்கிரமே பூமியையும் அழிச்சு நாமும் மடிவோம்...' தளவாய் சொன்னான். 'ஐந்தாவது மருந்து ஒண்ணு இருக்குண்ணா அது நிரந்தரமான மருந்தாத்தான் இருக்க முடியும்...'

'நீ இந்த மருந்தை இப்ப வெளியிடு. மத்த பிரச்னைகளை மெல்லப் பேசிக்கலாம்' என்றான் பிரதாப்.

'இல்லடா. நான் நூறு வருஷம் கழிச்சு மனுஷ குலமே அழியக் காரணமா இருக்க விரும்பலை.

இந்த விஷயத்துக்கு ஒரு தெளிவான விடை கிடைக்காம நான் இந்த மருந்தை வெளியிட மாட்டேன்' என்றான் தளவாய்.

எங்களுக்கும் பதில் கிடைக்கவில்லை. வருத்தமாகவே கிளம்பி வந்தோம்.

சோலைச் சித்தரைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். தளவாயைத்தான் காலப்போக்கில் அப்படி அழைக்க ஆரம்பித்துவிட்டார்கள். அவர் வீட்டைவிட்டு பக்கத்துச் சோலைக்குக் குடிவந்து இப்போது எட்டு வருடங்கள் ஆகின்றன.

2. இங்கே, இங்கேயே...

இப்போது இது ஒரு பொது மனப்பான்மை' என்றார் டாக்டர் பத்மநாபன் ஆங்கிலத்தில். அவருக்கு தமிழே வாயில் வரவில்லை. 'எல்லாருக்குமே விண்வெளி மனிதர்கள் பற்றி ஏதாவது சொல்ல இருக்கிறது. பறக்கும் தட்டுகள், தலையில் ஆண்டனா கொண்ட தவளைக்கண் மனிதர்கள். விசித்திரமான வெளிச்சங்கள். ஐம்பது வருடம் முன்பு ஹாலிவுட் படங்கள் உருவாக்கிய அத்துமீறிய கற்பனைகளைப் படிப்படியாக செய்தித்தாள்கள் உண்மையாக முன்வைத்து விட்டன. மக்களில் பாதிப் பேர் இப்போது இக்கதைகளை உண்மைச் செய்திகள் என்று நம்புகிறார்கள். அறிவியல் உண்மைகளை மக்களிடம் கொண்டுசெல்லும் வேலைக்குப் பதில் இம்மாதிரி அறிவியல் மூடநம்பிக்கைகளைக் களைவதே இன்று விஞ்ஞானிகளுக்குப் பெரிய வேலையாகி விட்டிருக்கிறது... நான் சோர்ந்துவிட்டேன்...'

'இது அப்படியல்ல. நீங்கள் கண்ணால் பார்த்தால் நம்புவீர்கள்...' என்றார் நாராயணன்.

பத்மநாபன் சிறிய மனிதர். சாக்பீஸ் போல வெள்ளையான உடல். அதி வெண்மையான தலைமயிர். மீசையும் புருவமும்கூட வெண்ணிறம்தான். விண்வெளி ஆய்வில் அவருக்கு நாற்பது வருட அனுபவம். உலகப்புகழ், 'கிட்டத்தட்ட' நோபல் பரிசு ஆகியவை இருந்தன.

'நான் ஆராய்ச்சிக்காக வரவில்லை. நீ என் பழைய நண்பன். எனக்கு ஏதாவது மலைப்பிரதேசத்தில் நாலைந்து நாள் ஓய்வெடுக்கவேண்டும் என்று பட்டது. அப்போதுதான் உன் கடிதம்...'

'நீங்கள் அதைப் பார்க்கலாம். மலை உச்சி வரை ஏறுவதை ஒரு பயிற்சியாகவும் கொள்ளலாமே.'

'பார்ப்பதில் ஒன்றுமில்லை. ஆனால் ஒரு தோட்ட விவசாயி என்ற நிலையில் நீ இம்மாதிரி அபத்தமான விஷயங்களில் ஈடுபடாமல் உருப்படியாகப் பூச்சிகளைப் பற்றியோ, புதிய விவசாய முறைகளைப் பற்றியோ ஏதாவது ஆராய்ச்சி செய்திருந்தால் எவ்வளவோ நல்லதாக இருந்திருக்கும். ஆனால் உனக்குப் பொழுதுபோனால் சரி. இந்த ஆளில்லா மலைப்பகுதியில் இம்மாதிரி சிறு பரபரப்புகள் இல்லாமல் வாழ்வதும் கடினம்தான்...'

'நாளைக் காலையில் நாம் மலை ஏறுகிறோம். தொரப்பனை வரச் சொல்லியிருக்கிறேன்...'

'தொரப்பனா?'

'இந்த மலையில் உள்ள இடும்பர் என்ற பழங்குடி இனத்தைச் சேர்ந்தவன். அவர்களில் ஒருவனின் துணை இல்லாமல் மலையில் வழி கண்டுபிடித்துப் போவது கஷ்டம்.'

'உன் பங்களா அழகானது. நீ ஒரு குட்டி மலை அதிபன் மாதிரி இருக்கிறாய்.'

'நன்றி' என்றார் நாராயணன். 'தேயிலை விலை விழுந்தபிறகு நான் நாடிழந்த மன்னனாக ஆகிக்கொண்டிருக்கிறேன்.'

'இந்தப் பறக்கும் தட்டு கதையைப் பிரபலப்படுத்தி மலையுச்சியை ஒரு சுற்றுலாத் தலமாகச் செய்துவிடு. பணம் கொட்டும். பலர் இப்போது அதைத்தானே செய்கிறார்கள்...'

டாக்டர் பத்மநாபன் இரவெல்லாம் விண்வெளி விந்தைகளின் பேரால் நடக்கும்

மோசடிகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார். 'மக்களுக்கு பூமிமீது நம்பிக்கை போய்விட்டது. இங்கேயே நம் வாழ்க்கைச் சிக்கல்களுக்கு ஒரு தீர்வு கிடைக்குமென அவர்கள் நம்பவில்லை. வானத்திலிருந்து யாரோ வரவேண்டியிருக்கிறது. கடவுளை விஞ்ஞானிகள் ஒழித்துக் கட்டிவிட்டார்கள். சென்ற நூற்றாண்டு விஷயங்களான சோதிடம், ஆரூடம் எல்லாமே காலியாகிவிட்டன. ஆகவே விஞ்ஞானிகளை வைத்தே புது மூடநம்பிக்கைகளைக் கட்டிக் கொள்கிறார்கள்... தலைக்குமேல் ஒரு காலியிடம் இருப்பதாக நம்ப யாருமே தயாராக இல்லை. ஆகவே புதிய தேவதைகள், புதிய சாத்தான்கள்...'

'அப்படியானால் விண்வெளியில் நம்மைத் தவிர வேறு யாருமே இருக்க நியாயமில்லை என்கிறீர்களா?'

'தர்க்கபூர்வமாக யோசித்தால், இருக்கலாம். ஆனால் இன்றுவரை ஒரு ஆதாரம்கூடக் கிடைக்கவில்லை. ஒரே ஒரு சிறு ஆதாரம்கூட. அதி நுட்பத் தொலைநோக்கிகள் ஐம்பது வருடங்களாக வானை அணு அணுவாகக் கவனிக்கின்றன. பிரபஞ்சத்தின் எல்லா மூலைக்கும் இடைவிடாது ரேடியோ செய்திகள் அனுப்பப்படுகின்றன. விண் ஊர்திகள் நமது சூரிய மண்டலத்தையும் பால்வழியையும் பல லட்சம் புகைப்படங்களை எடுத்து அனுப்பிவிட்டன. செவ்வாயின் துணைக்கோள்களில் ஆளில்லா ஊர்திகள் இறங்கிவிட்டன. இதுவரை கவனத்தைக் கவரும்படியான ஒரு சிறு தடயம்கூடக் கிடைக்கவில்லை. கிடைக்காதவரை இல்லை என்று கொள்வதே அறிவியலின் நியதி. ஆகவே பிரபஞ்சத்தில் நம்மைத்தவிர யாருமில்லை...'

'அப்படி உறுதியாகச் சொல்ல முடியாது. நீங்கள் இதைப் பார்த்தால்...'

'நான் நிறையப் பார்த்தாகிவிட்டது' என்றார் டாக்டர் பொறுமை இழந்து. 'நீ சொல்ல வரும் கதை என்ன? ஏதோ விண்ணுலக ஊர்தி இங்கே இறங்கியது. அதன் சக்கரங்களின் தடம் மலை உச்சியில் இருக்கிறது இல்லையா?'

'ஆம். அதாவது...'

'நீ எரிக் வான் டானிகென் எழுதிய 'கடவுள்களின் ரதம்' – கதையைப் பலமுறை படித்திருப்பாய் என்று நினைக்கிறேன். விண்வெளி மனிதர்கள் ஏன் இங்கே வரவேண்டும்? வந்தபிறகு எதையாவது விட்டுச் சென்றார்களா? எடுத்துச் சென்றார்களா? அதை யாராவது பார்த்தார்களா? எல்லாம் பிரமை. அறிவியல் அறிவியல்தான். அதைக் கதைகளுடன் கலக்கக் கூடாது.'*

மறுநாள் தொரப்பன் வந்துசேர்ந்தான். வாய்நிறைய வெற்றிலைச் சாறு வழியும் குள்ளமான கரிய மனிதன். உறுதியான தசைகள். தலைமயிரைப் பின்னால் நீட்டி வளர்த்து நீவிப் பின்னிழுத்து குடுமியாக முடிந்திருந்தான். மூக்கில் இரும்பு வளையம்.

'ஏம்பா அதிகாலையிலே வார நேரமா இது?'

'சாமி காட்ல பனி ராஸ்தி சாமி.'

'நல்லவர்கள்தான். ஆனால் எந்த ஒழுங்குக்கும் கட்டுப்பட மாட்டார்கள்' என்றார் நாராயணன். 'காடு சுற்றும் வேலைதவிர ஒன்றுக்குமே உதவமாட்டார்கள்...'

'அதற்குக் காரணம் அவர்களுடைய உதவாத கற்பனைகள்தான். தெய்வங்களும் பேய்களுமாக. யதார்த்த உணர்வு ஆதிவாசிகள் இடையே மிக மிகக் குறைவு. போகலாமா?'

'நான் தயார். டேய் அய்யாவோட பையை எடுத்துக்க.' நாராயணன் சொன்னார். 'நல்ல செங்குத்தான மலை. மேலே போகச் சிறிய வழி மட்டும்தான் உண்டு. அது இவர்களுக்கு மட்டும்தான் தெரியும்...'

பையுடன் தொரப்பன் முன்னே சென்றான். அவர்கள் பின்தொடர்ந்தார்கள். அடர்வற்ற

காட்டுக்கு அப்பால் மலை தெரிந்தபோது டாக்டர் சற்றுப் பிரமித்தார். அதைப்போன்ற ஒரு செங்குத்தான மலையை அவர் கண்டதேயில்லை.

'இதன் பேர் என்ன?'

'வெள்ளைக்காரன் போட்ட பேர் டெவில்ஸ் டோம். இவர்கள் மொழியில் கல்லன்மலை.'

'கல்லன்மலை என்றால் என்ன பொருள்?'

'இவர்கள் சாமி ஒன்று மலைமேல் இருக்கிறது. கல்லன்சாமி.'

'நீங்க அடிக்கடி போறதுண்டா?' என்றார் டாக்டர் தொரப்பனிடம்.

'சாமி?'

'எப்பல்லாம் கல்லன்சாமியக் கும்பிடுவீங்க?'

'சாமி அது சித்திரை ஆறாம் தேதியல்லோ. அன்னு மாட்டும்தானே ஆணாப் பிறந்தவங்க மலையேறி சாமி கும்பிட்டு பலி போடுயது சாமி.'

'பெண்ணாப் பிறந்தவங்க?'

'வரக்கூடாதல்லோ சாமி. கல்லன்சாமி வந்து பிடிச்சு மானத்திலே ஏற்றிக் கொண்டுபோகுமல்லோ.'

'இதில் எப்படி ஏறுவது?'

'மரம் இருக்கு சாமி' என்றான் தொரப்பன்.

மலை உண்மையில் ஒரு பெரும்பாறை. அதன் விரிசல்களில் முளைத்த மரங்களின் வேர்களை மிதித்து, தொற்றி ஏறவேண்டியிருந்தது. டாக்டர் சற்றுச் சிரமப்பட்டார்.

'இது ஓர் எரிமலைக்குழம்புப் பாறையாக இருக்கலாம்' என்றார் டாக்டர். 'நல்ல கரும்பாறை. தென் தமிழ்நாட்டில் பல மலைகளில் இம்மாதிரி உறுதியான பாறைகள்தான் இருக்கின்றன.'

'மேலே உச்சி வரை இதே கன்னங்கரிய பாறைதான். யானைச்சருமம் மாதிரி.'

மேலே ஏறிச்சென்றபோது வெயில் நன்றாக விரிந்து விட்டிருந்தது. நான்கு பக்கமும் வானம் கவிழ்த்த கிண்ணம் போல இறங்க ஒளி கண்ணைக் கூசியது. ஆனால் உடலைத் தழுவிய குளிர்ந்த காற்று இதமாக இருந்தது.

'இங்கே நின்றால் நூறு கிலோமீட்டர் தூரம்வரை பார்க்க முடியும். உண்மையில் மேற்கு மலைத்தொடர்களில் இதுதான் உயரமான சிகரம். கடல்மட்டக் கணக்குப்படிதான் வேறு மலைகளைச் சொல்கிறார்கள்' என்றார் நாராயணன். 'உச்சிக்குப் போகலாமே...'

'கண்டிப்பாக!' என்றார் டாக்டர்.

'சாமி, நம்ம கல்லன்சாமி...' என்று தொரப்பன் சுட்டிக் காட்டினான். மலைச்சரிவில் ஒரு மரத்தடியில் கரிய கல் ஒன்று இன்னொரு சப்பைக் கருங்கல்மீது வைக்கப்பட்டிருந்தது.

'சரி, நீ போய்க் கும்பிட்டுட்டு வா' என்றார் நாராயணன். 'வாருங்கள் டாக்டர்.'

மலைநுனியில் கிட்டத்தட்ட நான்கு ஏக்கர் பரப்புதான் இருந்தது. 'இதோ... இதுதான் நான் சொன்னது' என்றார் நாராயணன்.

சீராக வெட்டப்பட்ட ஓர் ஓடை. எட்டடி அகலம். மூன்றடி ஆழம்.

'ஓடை.'

'இல்லை. அதோ பாருங்கள்...'

இருபதடி தள்ளி அதேபோன்ற இன்னொரு ஓடை இணையாக இருந்தது.

‘இதைத்தான் ஒரு விண்வெளி ஊர்தியின் சக்கரங்கள் பதிந்த தடம் என்கிறீர்களா?’ என்றார் டாக்டர்.

அந்தத் தடம் நீண்டு சென்று, செங்குத்தாக வெட்டி இறங்கிய மலைச்சரிவில் பாய்ந்து, வானை முட்டியது.

‘பூச்சிமருந்து தெளிக்கும் ஹெலிகாப்டரிலிருந்து முதன்முதலாக இதைப் பார்த்தபோது அசந்து போய்விட்டேன். ஒரு டயர்த் தடம் போலவே...’

‘பிரமைதான்.’

‘ஏன் அப்படி இருக்கக் கூடாது? எப்படி இங்கே, இந்த உச்சியில், இப்படி ஒரு தடம் வரமுடியும்? சாத்தியமேயில்லை.’

‘பல வாய்ப்புகள். ஒன்று இந்தப் பழங்குடிகள் செதுக்கி இருக்கலாம்.’

‘இவர்களிடம் அப்படி ஒரு கதையே இல்லை. இவர்கள் எங்குமே அப்படி ஒரு சடங்கைச் செய்வதுமில்லை.’

‘இயற்கையாகக்கூட வந்திருக்கலாம். பாறை பலவிதமான கனிமங்களின் கலவை. ஏதோ ஒரு கனிமம் காலப்போக்கில் மழையிலோ வெயிலிலோ கரைந்திருக்கலாம்.’

‘இத்தனை கச்சிதமாகவா?’

‘இதைவிடக் கச்சிதமான வடிவங்களெல்லாம் இயற்கையில் கண்டடையப்பட்டுள்ளன. பலகோடி பாறைத் தடங்கள் உள்ளன. ஒன்றிரண்டு இப்படியும் இருக்கலாம். ஆனால் அதைவிட ஏதோ புராதன மனித இனம் ஏதோ ஒரு தேவைக்காகச் செதுக்கிய ஒன்று என்றுதான் எடுத்துக்கொள்ளவேண்டும். அதுதான் சிறந்த ஊகம்.’

‘டாக்டர், இது ஒரு விண்ணூர்தியின் சக்கரத்தடம் என்ற ஊகத்தை நீங்கள் ஏன் பிடிவாதமாக மறுக்கவேண்டும்?’

‘ஏனென்றால் அதில் இருப்பது நம் விருப்பம் அல்லது கற்பனை மட்டுமே. இதுவரை ஒரு தடயம்கூடக் கிடைக்காத நிலையில் அப்படி ஒரு முடிவுக்கு நாம் எளிதில் வந்துவிடக்கூடாது. மேலும் முக்கியமான ஒரு சிக்கல் இருக்கிறது...’

‘என்ன?’

‘இந்தத் தடம் மூன்றடி ஆழம் இருக்கிறது. இது சிறு உரசல் தடமோ கீறலோ அல்ல. இப்படி பாறையில் ஆழப் பதியவேண்டும் என்றால் அந்த ஊர்தி மிகமிக எடை கொண்ட ஒன்று. அப்படிப்பட்ட கனமான ஊர்தி விண்வெளி வேகத்தில் பறக்கவேண்டும் என்றால் அது எந்தவகை உலோகத்தால் ஆனதாக இருக்கவேண்டும்? அவ்வுலோகத்தின் அடர்த்தி நாம் அறிந்த எந்த உலோகத்தைவிடவும் பலமடங்கு அதிகமாக இருக்கும் இல்லயா? அப்படிப்பட்ட அடர்த்தியான தனிமம்தான் பாறையில் இப்படி அழுத்தமாகப் பதியும். சேற்றில் இரும்பு பதிவதுபோல...’

‘ஆம்.’

‘அப்படிப்பட்ட எந்தத் தனிமமும் இன்றுவரை விண்வெளியிலிருந்து கண்டெடுக்கப்பட்டது இல்லை. பல்லாயிரம் விண்கற்களைச் சோதித்துவிட்டோம். கோள்களில் இருந்தும் துணைக்கோள்களிலிருந்தும் மாதிரித் தனிமங்கள் சேகரித்திருக்கிறோம். வால்நட்சத்திரங்களில் இருந்துகூட தனிமங்களைச் சேகரித்து ஆராய்ந்திருக்கிறோம். அப்படி ஒரு அதீத அடர்த்தி கொண்ட தனிமம் இருக்கக்கூடும் என்பதற்கான வாய்ப்பே தென்படவில்லை...’

‘எங்காவது இருக்கலாமே... விண்வெளியில் எங்காவது...’

‘இல்லை. மூலக்கூறுகளின் கட்டுமானம் குறித்து இதுவரை நாம் அறிந்த எல்லா அறிவுமே அப்படி ஒரு தனிமம் இருப்பதற்கான வாய்ப்பை நிராகரிக்கின்றன. ஒரு குறிப்பிட்ட கால, இடப் பரிமாணத்தில் மூலக்கூறுகள் செறிவுகொள்வதற்கு ஓர் உச்ச எல்லை கண்டிப்பாக இருக்கிறது. அது முடிவிலியாக இருக்க முடியாது. ஏனெனில் அது பொருண்மை. ஆகவே செறிவுக்கு ஓர் உச்ச எண் இருக்கவேண்டும். இன்று நம்மால் ஓரளவு வகுத்துக் கொள்ளக்கூடியதுதான் அது. ஒருவேளை அது பிரபஞ்சத்தின் ஆதார விதிகளில் ஒன்றாக இருக்கலாம்... ஆகவே இது சாத்தியமே இல்லை. வேண்டுமானால் நீ இதை வைத்து ஓர் அறிவியல் புனைகதை எழுதிப் பார்க்கலாம். அதற்குமேல் இதற்கு மதிப்பில்லை. மன்னித்துக்கொள்...’

நாராயணன், ‘பரவாயில்லை. எனக்கு ஒரு சந்தேகம் இருந்தது. அதை தீர்த்துக்கொண்டதும் நல்லதுதான்’ என்றார்.

‘தண்ணீர் எங்கே?’

ஓய்வெடுத்தபிறகு இருவரும் கிளம்பினார்கள். ‘டேய் தொரப்பா!’

‘சாமி!’

‘என்னடா பண்ணினாய் இவ்வளவு நேரம்?’

‘சாமி கும்பிட்டேன் சாமி...’

‘வா, போலாம்.’

‘போலாம் சாமி...’ தொரப்பன் தயங்கினான். ‘சாமி, கல்லன்சாமியைக் கும்பிட்டுட்டுப் போங்க சாமீ!’

‘நேரமாச்சுடா. இப்ப வெயில் உச்சிக்கு வந்துடும்’ என்றார் நாராயணன்.

‘என்ன சொல்கிறான்?’

‘கல்லன்சாமியைக் கும்பிட அழைக்கிறான். இவர்களுக்குக் காடெல்லாம் சாமிதான். கல் மண் மரம் எல்லாமே சாமி...’

அவர்கள் தொரப்பனை அழைத்துகொண்டு இறங்கிச் சென்றார்கள். வெயில் உச்சியை நோக்கிச் செல்கையில் கதிர் பட்டபோது கல்லன்சாமியாக நிறுத்தப்பட்டிருந்த கரிய கல் மெல்லிய உள்ளொளி கொள்ள ஆரம்பித்தது. மரகதப்பச்சையும் நீலமும் கலந்த ஆழம் சுடர்கொள்ள அதன் விளிம்புகள் மிகமிகக் கூர்மையாக மின்னின.

3. விசும்பு

எனக்கு இரண்டு எஜமானர்கள். ஏசு சொன்னார், ஒருவன் இரு எஜமானர்களிடம் பணிபுரியமுடியாதென்று. அதே ஏசுதான் சீசருக்கு உரியது சீசருக்கு, தெய்வத்துக்குரியது தெய்வத்துக்கு என்றும் சொன்னார். நான் இரண்டாம் கொள்கையைப் பின்பற்றினேன். ஆட்டிப்படைத்த சீசரின் பெயர் டாக்டர் நஞ்சுண்ட ராவ். மௌனமாக உயிரை வாங்கிய தெய்வம் அவர் அப்பா டாக்டர் கருணாகர ராவ்.

என் மூக்கு இன்று கடைந்த மோரையும் நேற்று கடைந்த மோரையும் அடையாளம் காணும். முளைக்கீரைக் கூட்டையும் அரைக்கீரைக் கூட்டையும் பிரித்தறியும். ஆனால் பறவை எச்சம் என் மூக்குக்கு எட்டாது. சுசீந்திரம் வலது மண்டபத்தில் டன் கணக்கான வவ்வால் எச்சம் மத்தியில் நின்று என் மாமா மூக்கைப் பொத்திய போது, 'நாத்தமா? அனுமாருக்குச் சாத்தற வெண்ணெய் மக்கிப்போச்சு போல' என்று சொல்லி பித்துக்குளிப் பட்டம் வாங்கியவன். நான் வேலை பார்க்கும் இடம் அப்படி. வந்தவை, செல்பவை, வாழ்பவை என எப்படியும் ஓர் ஐம்பதாயிரம் பறவைகள் உள்ள இடம் அது.

கருணாகர ராவ் தொழில்முறை டாக்டர். பாதியில் விட்டுவிட்டுப் பறவை ஆய்வாளரானார். அவரது அப்பா திருவிதாங்கூர் திவானாக இருந்தபோது ஏலமலைப் பகுதியில் கடலோரமாகக் கிடைத்த அறுநூறு ஏக்கர் நிலத்தை அப்படியே பறவை ஆய்வகமாக மாற்றிவிட்டார். எங்கள் ஆய்வகத்துக்குள் மொத்தம் மூன்று பெரிய குளங்கள் இருந்தன. அடர்ந்த காடும் புதர்க் காடுகளும் இருந்தன. காடு சரிந்திறங்கிச் சேரும் புற்கள் மண்டிய கடற்கரைக்குச் சென்று, நாற்றமாக நாறி, கடல் அலைகளில் இணையும். இம்மாதிரி நிலப்பகுதிதான் பறவை வாழ்விடத்துக்கு மிகமிகச் சிறந்த இடம். இதை எஸ்டுவரி [estuary] என்பார்கள். பறவை வளர்ப்புக் கூண்டுகள் ஏழாயிரம். வலை போட்ட குளங்கள் ஐந்து. முப்பது வேலையாட்கள். நான் மானேஜர். ஆனால் கருணாகர ராவ், அவருக்குக் காலையில் எனிமாகூட நான்தான் கொடுக்கவேண்டும் என்று சொல்வார்.

நஞ்சுண்ட ராவ் பிறந்ததே அவர் அம்மா 'மறைந்த' பார்வதிபாய் பறவைகளைப் பார்க்கக் காத்திருந்தபோது, மரத்தின் மீதிருந்த மாடத்தில் காக்காக்கள் மத்தியில்தான் என்பார்கள். அவருக்கு வேறு உலகமே இல்லை. எல்லாப் பறவையியலாளர்களையும் கவர்ந்த, கிராக்குகளை மேலும் கிராக்குகள் ஆக்கிய, விஷயம்தான் நஞ்சுண்ட ராவையும் கவர்ந்து இழுத்து, இருபது வருடங்களாக உள்ளே வைத்திருந்தது. பறவைகள் வலசை போகும் ரகசியம். எங்கள் கேரள நிலப்பகுதிக்கு வலசை வரும் நீண்ட தூரப் பறவைகள் மொத்தம் 44. பல பெயர்கள் எனக்கு சினிமா நடிகர்களைவிடப் பழக்கம். மாஸ்க்ட் பூபி என்றால் ஏதோ வில்லன் என்று எண்ணவேண்டாம். இது லேசான பசும் வெண்மை நிறம்கொண்ட, வாத்து போல உடல்கொண்ட, வலசைப் பறவை. சிறகின் பின்பக்கம் கரிய தீட்டல். கடலில் வாழும். எச்சமிடவும் கிராகிரா என்று சத்தம் போடவும் மட்டும் கரைக்கு வரும் என்று நினைக்கிறேன். வெள்ளை கறுப்பு ஸ்டார்க்குகள், நீல வால் டால்கள், மங்கோலிய சேண்ட் ப்ளோவர்கள், கரியவால் காட்விட்டுகள், டெரக்குகள் என்று பல வகை வலசைப் பறவைகள்.

அப்பா ராவுக்கு பறவைகள் வழிபடு தெய்வங்கள் மட்டுமே. சேவை செய்வதோடு சரி. ஆய்வு போன்ற உபத்திரவங்கள் இல்லை. முப்பது வருடம் முன்பு அவர், முக்கியமானதென

இப்போதும் அவர் நம்பும், ஓர் ஆய்வை செய்து அது பொருட்படுத்தப்படாத துக்கத்தில் இருந்தார். ஒரு வாரத்துக்குள் பிராயமுள்ள கோழிக்குஞ்சுகள் ஒரு மணி நேரத்தில் சராசரியாக எத்தனை முறை கியா கியா சொல்கின்றன என்ற அவரது ஆய்வு '3859 தடவை' நூலாக அவராலேயே பிரசுரிக்கப்பட்டு, கொல்லையில் கட்டுக் கட்டாக உள்ளது.

நஞ்சுண்ட ராவின் மனைவி ஆணா பெண்ணா என நான் இன்னும் தீர்மானிக்கவில்லை. மீசை உண்டு. சோடாபுட்டிக் கண்ணாடி. நாகரத்னம் என்ற பேர், கட்டைக்குரல், ஜீன்ஸ்-ஷர்ட் உடை என்று எல்லாம் சேர்ந்து என்னை குழப்பி அவளை நான் அடிக்கடி சார் என்று கூப்பிட்டுப் பிரச்னைக்குள்ளாவேன். அவள் ஏதோ மீன் சம்பந்தமான ஆராய்ச்சியாளர். விழிஞ்ஞும், தூத்துக்குடி இன்னபிற பகுதிகளிலிருந்து அடிக்கடி ஃபோன் செய்வாள். மாதம் இருமுறை வந்து அவள் ஒரு மூலையில் மீன்களைப் பற்றிய தலையணைகளையும் இவர் ஒரு பக்கம் பறவைகளைப் பற்றியும் படித்துக் கொண்டிருப்பார்கள். இக்காரணத்தால்தான் என நினைகிறேன், அவர்களுக்குக் குழந்தைகள் இல்லை.

எனக்கும் பறவையியலுக்கும் சம்பந்தமில்லை. நான் படித்தது தமிழ் எம்.ஏ. இந்த அத்துவானக் காட்டில் வேறு வேலை கிடைக்கவில்லை. 'உள்ளான், காடை என்பதெல்லாம் அதனதன் எச்சத்தால் காணப்படும்' என்று புது சூத்திரங்கள் வகுத்துக் கொண்டு சாத்தியமானவரை மகிழ்ச்சியாக இருக்கிறேன்.

இந்தச் சூழலில்தான் நஞ்சுண்ட ராவ் ஒரு சித்திரை பத்தாம் நாள் தன் மகத்தான கண்டுபிடிப்பு முடிவுக்கு வந்துவிட்டிருப்பதை என்னிடம் சொன்னார். அதற்குமுன் உலக அளவில் ஏறத்தாழ எல்லா பறவையியலாளர்களுக்கும் சொல்லியிருந்தார்.

கிழ ராவ் அந்த ஆய்வை ஆரம்பத்திலேயே பொருட்படுத்தவில்லை. 'பறவைகள் வலசை போவதை மனிதன் அறிந்துகொள்ள முடியுமா? புராதன காலம் முதல் மனிதன் அதைப்பற்றிக் கனவுகள் கண்டிருக்கிறான். கவிதைகள் பாடியிருக்கிறான். பறவைகள் எப்படிச் சரியான திசை கண்டுபிடிக்கின்றன? அதற்கு மொத்த வானத்தையே நீ அறிய வேண்டும். வானம் என்றால் விசும்பு. மேலே விரிந்து கிடக்கும் வெளி. அங்கே உலவும் காற்றுகள், ஒளி, எல்லாம். உன்னால் முடியுமா? நம்மாழ்வார், 'பொன்னுலகாளீரோ புவனமுழுதாளீரோ நன்னயப் புள்ளினங்காள்!' என்று வியந்தார். புவனங்களையெல்லாம் ஆள்வது பறவை. விசும்பின் துளி அது' என்றார்.

'இது அறிவியல். உங்கள் பக்திக் காளைச்சாணம் அல்ல' என்றார் மகன்.

என் சிற்றறிவுக்கு, பறவைகள் வலசைபோகும் ரகசியத்தை பொதுமொழியில் நஞ்சுண்ட ராவ் சொன்னார். பறவைகள் வலசை போகும்போது எப்படிச் சரியாகத் திசையறிகின்றன? சைபீரியாவிலிருந்து சைபீரிய நாரை நேராக வந்து எங்கள் குளத்தில் இறங்கிவிடுகிறது. பூமிக்குமேலே மிக உயரத்தில் அவை பறக்கின்றன. இரவிலும், திசையடையாளங்கள் இல்லாத கடல்வெளிமேலும் பறக்கின்றன. எப்படி என்பது இன்றைய அறிவியலின் பெரிய புதிர்களுள் ஒன்று. நட்சத்திரங்களை வைத்து அடையாளம் காண்கின்றன என்றும், காற்று வீசும் திசைகளின் அடிப்படையில் வந்துவிடுகின்றன என்றும், பூமியின் காந்தப்புலத்தை ஏதோ ஒரு புலனால் தொட்டறிவதன் மூலம் திசையறிகின்றன என்றும் பல கொள்கைகள் உண்டு. பறவைகளுக்கும் நுண்கதிர்களுக்கும் உள்ள தொடர்பு குறித்து நிறைய ஆராய்ச்சிகள் வந்துவிட்டன. வலசைக்கு ஆர்ட்டிக் டென் போன்ற சில பறவைகள் புற ஊதாக் கதிர்களை பயன்படுத்துவதும் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து டாக்டர் நஞ்சுண்ட ராவுக்கும் ஆரம்பம் முதலே சில ஊகங்கள் இருந்தன.

'சிட்டுக்குருவிகள் செல்ஃபோனின் நுண்ணலைகளால் பாதிக்கப்படுவதைப்பற்றி இப்போது நிறையக் கட்டுரைகள் வருகின்றன...' என்றேன்.

'ஆம், பரவாயில்லை, நீ கூடப் படிக்கிறாய்' என்றார் டாக்டர் நஞ்சுண்ட ராவ்

வலசைப் பறவைகளின் காதுக்குப் பின்னால் மூளையின் ஓர் அபூர்வ அமைப்பு உள்ளது என்றார் நஞ்சுண்ட ராவ். அது என்ன என்று நரம்பியல் நிபுணர்கள்தான் சொல்லவேண்டும். அதன் மூலம் அவை குற்றலை புற ஊதாக் கதிர்களை வாங்கும் சக்தி கொண்டிருக்கின்றன. பூமியைப் பலவிதமான புற ஊதா, அகச் சிவப்புக் கதிர்கள் சூழ்ந்திருக்கின்றன. பூமியின் ஒவ்வொரு இடத்துக்கும் அவற்றின் அதிர்வுகள் மாறுபடுகின்றன. அவ்வதிர்வுகள் மூலம் இப்பறவைகள் பூமியைப்பற்றி ஒரு மன வரைபடத்தையே உருவாக்கிக்கொண்டுள்ளன. அதாவது வௌவால்கள் கேளா ஒலியலைகள் (மீயொலி) மூலம் பார்ப்பது போல அவை பூமியைப்பற்றி வேறு ஒரு பார்வையையும் அடைகின்றன. பூமியைச் சுற்றியுள்ள புற ஊதா நெடுஞ்சாலைகளில்தான் அவை பறக்கின்றன. தூரத்தால், தூசிப்புகை மற்றும் மேகங்களால் தடுக்கப்படாத ஒரு பாதை வரைபடம் அது.

டாக்டர் நஞ்சுண்ட ராவ் அதைத் தன் சோதனைச்சாலையில் பலவிதமான கதிர்களைக் கொண்டு இருபது வருடங்களாக ஆய்வு செய்தார். பறவைகள் அறியும் அதே அலைவரிசையை அவர் வரையறை செய்துவிட்டார். அதே அலைவரிசையை அனுப்பி ஒரு கறுப்புவால் காட்விட்டைச் சென்னைக்குப் போகச் செய்தார். ஒரு டன்லின் பறவையை ராஜஸ்தானிலிருந்து வரவழைத்தார். இனி அதை உலகளாவிய முறையில் நிரூபிக்க வேண்டும். அதற்கான மாபெரும் செயல்திட்டம் ஒன்றை டாக்டர் நஞ்சுண்ட ராவ் வகுத்துவிட்டிருந்தார். அதன்படி சீனாவுக்கு மேற்கே மங்கோலியாவிலிருந்து இங்கே அக்டோபர் இறுதியில் கிளம்பி நவம்பர் முதல் வாரத்துக்குள் வலசை வரும் மங்கோலிய சேண்ட் ப்ளோவர் [Mongolian Sand Plover] பறவை தேர்வு செய்யப்பட்டது. பறவையியல் பெயர் Charadrius mongolus.

டாக்டர் கருணாகர ராவின் கணக்குப்படி ப்ளோவர் இனத்தில் மட்டும் 67 வகைகள். புத்தகங்களில் இருப்பதைவிட ஆறு வகைகள் கூட என்கிறார். 'ஏறத்தாழ முந்நூறு வகைப் பறவைகள் பூமியின் வடபகுதியிலிருந்து தெற்குநோக்கி பூமத்தியரேகை நாடுகளுக்கு வருகின்றன. நீண்டகாலமாக இந்த வலசைப் போக்கு நிகழ்வதனால் அவற்றுக்கும் காற்றின் திசை மாற்றங்களுக்கும் இடையே ஓர் ஒத்திசைவு ஏற்பட்டுள்ளது. அந்தத் தகவல்கள் அவற்றின் உள்ளுணர்வாக மாறி மூளையிலும் மரபணுக்களிலும் பதிந்தும் விட்டன. இவை அவற்றின் உயிர்வாழ்க்கைக்கு அவசியமான விஷயங்கள், அவ்வளவுதான்' என்றார் டாக்டர் நஞ்சுண்ட ராவ்.

திட்டப்படி டாக்டர் நஞ்சுண்ட ராவ் குழுவினர் மங்கோலியாவுக்கு நேராகச் சென்று நூற்றுக்கணக்கான சேண்ட் ப்ளோவர் பறவைகளைப் பிடித்து அவற்றுக்கு ஒரு மின்னணுத் தொப்பி அணிவிக்கிறார்கள். அது பறவைகள் அறியும் புற ஊதாக் கதிர்களை முற்றாகத் தடுத்துவிடும். இவர்கள் அனுப்பும் வேறு கதிர்களை புற ஊதாக் குற்றலைகளாக மாற்றி அவற்றுக்கு அளிக்கும். அதன் வழியாக பறவைகளுக்கு இவர்கள் விரும்பும் தகவல்களை அளிப்பார்கள். 'ஒரு சேண்ட் ப்ளோவர் பறவைக் கூட்டத்தைத் திசைமாற்றி அப்படியே எகிப்துக்குக் கொண்டுபோவதுதான் திட்டம்' என்றார் டாக்டர் நஞ்சுண்ட ராவ்.

'போடா டேய்' என்றார் டாக்டர் கருணாகர ராவ். அவரது தலை தனியாக ஆடியது. 'பறவை என்ன விமானம் போல எந்திரமா? அது பெருவெளியின் ஒரு துளி. நீ இப்போது கண்டுபிடித்திருப்பது பறவைகளின் ஓர் இயல்பை மட்டும்தான். இது சம்பந்தமான மற்ற விஷயங்களைக் காண மறுத்ததால்தான் அது உன் கண்ணுக்குப் பட்டது. பறவைகள் வலசை போவதே இதனால்தான் என்று நீ இன்று சொல்வாய். நீ விட்டுவிட்ட விஷயங்களைக் கண்டுபிடித்து உனக்குப் பிறகு வருபவர்கள் உன்னை மறுப்பார்கள். அப்படியே அது போனபடியே இருக்கும். உங்களால் ஒரு பூச்சியைக்கூட முழுக்க அறிந்துவிட முடியாது. அறிவியல் என்றால் வானத்தை முழம்போடும் கலை. நீ கண்டுபிடித்த விஷயத்தினால் ஏதாவது நடைமுறைப் பயன் இருந்தால் அதைச்சொல். அதை விட்டுவிட்டு பறவையின் ரகசியத்தைக் கண்டுபிடித்துவிட்டதாய் புலம்பாதே.'

‘ஏன் பயன் இல்லை? இனிமேல் பறவைகளை நாம் நம் விருப்பப்படிக் கட்டுப்படுத்தலாம். விரும்பும் இடத்துக்கு அனுப்பலாம். அதன் பயன்கள் ஏராளம்...’

‘டேய், பறவை என்பது வானம். அது பூமிக்கு ஒருநாளும் கட்டுப்பட்டதல்ல.’

‘நீங்கள் உங்கள் காளைச்சாணத்தை உங்களுடனே வைத்துக் கொள்ளுங்கள்’ என்றார் டாக்டர் நஞ்சுண்ட ராவ்.

‘உன் அறிதல்முறை பதினெட்டாம் நூற்றாண்டில் ஃப்ரான்சிஸ் பேக்கன் உருவாக்கியது. எதையும் உடைத்து, பிரித்து ஆராய்வது அது. அதைத்தான் நீ அறிவியல் என்கிறாய். அதை வைத்து இந்தப் பிரபஞ்சத்தின் துளிகளையே அறிய முடியும். முழுமையை நிராகரித்தால்தான் துளிகள் நம் கண்ணிலேயே படும். பிரபஞ்சம் என்பது ஒரு முழுமை. அதை முழுமையுடன் அறிய முயற்சி செய்’ என்றார் கருணாகர ராவ். ‘யோசித்துப் பார்டா முட்டாள். விண்ணில் கோடிக்கணக்கில் பறவைகள். ஒரு பறவைக்கும் மற்ற பறவைகளுக்கும் இடையேயான உறவு என்ன? விசும்பின் மற்ற பறவைகளுக்கும் அப்பறவைக் கூட்டத்துக்குமான உறவென்ன? பூமியில் உள்ள மற்ற உயிரினங்களுக்கும் பறவைகளுக்குமான உறவென்ன? உன்னால் அந்தப் பிரம்மாண்டமான ரகசியத்தை எப்படிப் புரிந்துகொள்ள முடியும்? அங்கே சைபீரியப் பறவைகள் கிளம்பும்போது இங்கே அவற்றுக்கு உணவாகும் பூச்சிகளும் மீன்களும் முட்டைபோட ஆரம்பித்துவிடுகின்றன... புழுக்கள் பல்கிப் பெருகுகின்றன. பிரபஞ்சம் ஒரு முழுமை. பூமி அதன் துளியான ஒரு முழுமை. இதை மறக்காதே...’

‘ஓம், ஈசோவாஸ்யம் இதம் சர்வம். நமோ நமஹ! போதுமா? ஆளை விடுங்கள்’ என்று டாக்டர் நஞ்சுண்ட ராவ் கிளம்பிவிட்டர்.

மஞ்சூரியாவிலிருந்து டாக்டரின் ஃபோன் வந்தது. பறவைகளுக்கு குல்லா போடும்வேலை மும்முரமாக நடக்கிறது என்றார். ஆயிரக்கணக்கான பறவைகளைப் பிடித்து குல்லா போட்டுவிட்டதாக அவர் உற்சாகமாகச் சொன்னபோது எனக்கு ஏனோ சற்று வயிற்றைக் கலக்கியது. டாக்டரின் தொடர்பு வலையைச் சேர்ந்த சீனப் பறவையியலாளர்கள் அதில் உற்சாகமாக ஈடுபட்டார்கள். அது பறவையியலில் ஒரு பெரிய புரட்சியை உண்டுபண்ணப்போகிறது என்றார் டாக்டர்.

டாக்டர் நஞ்சுண்ட ராவின் மனைவிக்குத் தகவலே சொல்லவில்லை போலிருக்கிறது. அந்த அம்மாள் மூன்றாம் நாள் என்னைக் கூப்பிட்டு டாக்டர் இருக்கிறாரா என்று கேட்டாள். இல்லை என்றேன். காரணம் சொன்னபோது அவளும் ‘காளைச்சாணம்’ என்றுதான் சொன்னாள். பறவை எச்சக் குவியலில் வாழ்பவனுக்கு காளைச்சாணம் என்பது தூய நறுமணப் பொருள்தான் என்று எண்ணிக்கொண்டேன். அதிலும் வலசைப் பருவத்தில் நான் மிதித்து நடப்பது சைபீரிய, மங்கோலிய எச்சம்.

பறவைகள் கிளம்பிவிட்ட செய்தியை டாக்டர் என் தொலைபேசியில் வெடித்துச் சொன்னார். சீனப் பறவையியலாளர் ஏதோ ஒரு ஹோ தலைமையில் ஒரு குழு ரேடியோ அலைகள் மூலம் அதன் புற ஊதாக் கதிர் செய்தித் தொடர்பை வழி நடத்தியது. மறுநாள் டாக்டர் நஞ்சுண்ட ராவ் என் தொலைபேசியில் பயங்கரமாக ஆர்ப்பரித்தார். தகவல்கள் சொல்லி தன் தந்தையை பாதிப்படையச் செய்வதுதான் அவரது நோக்கம் என்று எனக்குப் புரியாமலில்லை. பறவைகள் திசை மாறிவிட்டன என்றார் டாக்டர் நஞ்சுண்ட ராவ். டாக்டர் கருணாகர ராவ் அதில் அதிக ஆர்வம் காட்டாததுபோல முகத்தை வைத்துக்கொண்டாலும் எல்லாச் செய்திகளையும் கேட்டறிந்தார்.

பறவைகள் சீனாவிட்டு திசைமாறி ஆஃப்கன் எல்லைக்குள் சென்றன. எனக்குப் பயமாக இருந்தது. இந்தப் பறவைகளை எனக்குத் தெரியும். சிறிய அழகான குருவிபோன்ற பறவைகள். கரிய கூரிய அலகு; மணிக்கண்கள். சிலவற்றுக்கு நல்ல செங்காவி நிற முதுகு. சிலவற்றுக்கு இளஞ்சிவப்பு. அடிவயிறு வெள்ளை. எகிப்தில் போய் இறங்கி அது என்ன செய்யப்போகிறது?

நைல் நதிக்கரையில் எங்கள் குளத்தைத் தேடி முழிக்கப்போகிறது.

டாக்டர் கருணாகர ராவ் என்ன சொன்னார் என்று டாக்டர் நஞ்சுண்ட ராவ் கேட்டார். அவர் தகவல்களை வெறுமே கேட்டுக்கொண்டார் என்றேன். கூண்டில் வாழ்ந்த ஒரு தீக்கோழிக்கு மலச்சிக்கல். அதில் அவர் முழுமையாக ஈடுபட்டதனால் அவருக்கே கடும் மலச்சிக்கல் என்ற உண்மையைச் சொல்லவில்லை.

பத்தாம் நாள் பறவைகள் கடும் வெயிலில் தளராமல் அரேபியப் பாலைவனத்தைத் தாண்டிச்சென்றன. இருபது நாட்கள் அவை பறந்தன. கெய்ரோவில் இறங்கிய அவை அங்கே ஒரு வயலில் கீக் கீக் என்று தடுமாறிச் சுற்றிவந்தபோது டாக்டர் நஞ்சுண்ட ராவ் என்னைக் கூப்பிட்டார். 'டேய் அந்தக் கிழத்தை கெட்டியாகப் பிடித்துக்கொள். அதன் வாயைத் திற. அரைக் கிலோ சீனியை அதற்குள் கொட்டு. பிறகு சொல்லு, இன்று மானுட அறிவியலில் ஒரு திருப்புமுனை நாள் என்று' என்றார்.

மறுநாள் மீண்டும் ஃபோன். 'கிழம் என்ன சொல்கிறது? இது உலக சாதனை என்று அவரிடம் சொல்... உலக சாதனை!' என்று வீறிட்டார்.

நான் சொல்ல ஒரு தகவல் வைத்திருந்தேன். 'டாக்டர் இங்கே ஒரு புதிய பறவை வந்து இறங்கியிருக்கிறது.'

'புதிய பறவையா?'

'ஆமாம். இதுவரை வராத பறவை. வெளிநாட்டுப் பறவை.'

'எப்படி இருக்கிறது?'

'சின்ன பறவை. அகலமான அலகு. கொண்டை இருக்கிறது. வாலும் நீளம். பறந்து பூச்சிகளைப் பிடித்து சாப்பிடுகிறது.'

'கால் எப்படி?'

'பலவீனமான, சின்ன கால்...'

'ஏதோ ஃப்ளை கேச்சர். மின்னஞ்சலில் படம் அனுப்பு.'

நான் அப்போதே புகைப்படம் எடுத்து அனுப்பினேன்.

உடனே டாக்டர் நஞ்சுண்ட ராவ் போனில் கூவினார். 'அது ஸ்வைன்சன்ஸ் ஃப்ளைகேச்சர்.' டாக்டர் அதன் பறவையியல் பெயரைக் கெட்டவார்த்தையைச் சொல்வதுபோலச் சொன்னார். [Swainson's Flycatcher / Myiarchus s. swainsoni]

'அது எங்கே அங்கே வந்தது? அது தென்னமெரிக்கப் பறவை. தெற்குத் தென்னமெரிக்காவிலிருந்து வடக்குத் தென்னமெரிக்கா போகவேண்டியது...'

'தெரியவில்லையே டாக்டர். ஆனால் அது மாலத்தீவுக்கும் கேரளாவுக்கும் வேடந்தாங்கலுக்குமெல்லாம் நிறைய வந்திருக்கிறது. இதைப்பற்றி உங்களுக்கு மொத்தம் எண்பது மின்னஞ்சல் வந்திருக்கிறது...'

'முட்டாள்!' என்றபடி டாக்டர் நஞ்சுண்ட ராவ் ஃபோனை வைத்தார். யாரைச் சொன்னார் என்று புரியவில்லை.

மறுநாள் டாக்டர் நஞ்சுண்ட ராவ் ஃபோன் செய்வதாகச் சொன்னார். செய்யவில்லை. அவர் மனைவியின் மின்னஞ்சல் வந்தது. அதை அவருக்கு அனுப்பி வைத்தேன். அவளுக்கும் ஏதோ பிரச்னை. மலேசியக் கடற்கரையில் ஒரு புதுவகை மீன், குஞ்சு பொரிக்கக் கூட்டம் கூட்டமாக வந்திருக்கிறதாம். இது ஓர் அபூர்வச் சம்பவமாம். உலக மீன் ஆய்வாளர்கள் அத்தனைப் பேரும் அங்கே கூடியிருக்கிறார்கள். இந்தம்மாவும் போயாக வேண்டும். வர நாளாகுமாம்.

எனக்கு ஏனோ ஒரு மனநிறைவு ஏற்பட்டது. ‘என்னை யாரென்று எண்ணி எண்ணி நீ பார்க்கிறாய்...’ என்று பாடியபடி தீவனத்தை அள்ளினேன்.

தீக்கோழிக்கு மலச்சிக்கல் சரியாகிவிட்டது என்று டாக்டர் கருணாகர ராவ் வாசனையுடன் வந்து சொன்னார்.

4. பூர்ணம்

மௌனச்சாமியார் மடத்தின் ஓய்வறையில்தான் டாக்டர் வினோத் பட்டாச்சாரியாவைச் சந்தித்தேன். அவர் என் நேர் எதிர் அறை. கதவைத் திறந்தால் அவரது கதவு. ஒருமுறை திறந்தபோது இருவரும் முகத்தோடு முகம் சந்தித்து திகைத்து நின்றோம். 'ஹாய்!' என்றார். அது உயர்குடிகள் 'யாரடா நீ புழுவே?' என்று கேட்கும் முறை என நான் அறிவேன். நான் தொழில்முறைப் பத்திரிகையாளன்.

'என் பெயர் கணேஷ் குமார். பத்திரிகையாளன்' என்றேன்.

'நான் பத்திரிகைகளை வெறுக்கிறேன்' என்று கதவை மூடப் போனார்.

'இங்கே பாருங்கள் புரஃபசர்...' என்று நான் தொடங்கினேன்.

'நான் புரஃபசர் இல்லை!' என்று சாத்திவிட்டார்.

பேராசிரியர்கள், அறிவியலாளர்கள் தங்களைத் தேவர்குலமாக எண்ணிக் கொண்டிருப்பதை நான் பலமுறை கண்டதுண்டு. சிவனாகவும் விஷ்ணுவாகவும் தங்களை எண்ணிக்கொண்டிருக்கும் சினிமாக்காரர்களைக் கண்ட எனக்கு அது பெரிதாகப் படவில்லை.

ஆனால் அவரே இரவு என் கதவைத் தட்டினார். 'ஹாய்!' என்றார். இம்முறை பதற்றமாக.

'ஹலோ!'

'உள்ளே வரலாமா?'

'கண்டிப்பாக. வாருங்கள்...'

வந்ததும் சோபாவில் அமர்ந்து முகத்தை வழித்துவிட்டுக் கொண்டார். தலைமயிரை நீவினார்.

'நீங்கள் புரஃபசர்...' என்றேன்

'நான் புரஃபசர் இல்லை. என் பெயர் டாக்டர் வினோத் பட்டாச்சாரியா...'

'ஆமாம். உங்கள் பேட்டியை ஹிந்துவில் படித்திருக்கிறேன்... பொறியியலில்...'

'ஹிந்து என்னைப்பற்றி ஏதும் வெளியிட்டதில்லை...' என்றார் அவர். 'மேலும் என் துறை நரம்பியல்.'

'மன்னிக்கவும். எனக்குக் கொஞ்சம் ஞாபகமறதி...'

'பரவாயில்லை. உன்னிடம் மது ஏதாவது இருக்குமா?'

'ஆசிரம வளாகத்தில் அனுமதி இல்லை. நான் ரகசியமாக ஒரு புட்டி ரம் வைத்திருக்கிறேன். உங்களுக்கு ரம் பிடிக்குமா?'

'பிடிக்காது. ஆனால் இப்போது எனக்கு ஏதாவது மது வேண்டும்...கொண்டா!'

'நானே ஒரு துணைக்காக காத்துக்கொண்டிருந்தேன். கதவை சாத்தலாம் அல்லவா? நல்லவேளை உங்கள் அறை நேர் எதிரே இருக்கிறது. தள்ளாடி எங்காவது விழாமல் நேராகப் போய் படுத்துவிடலாம்.' நான் புட்டியை எடுத்து வைத்தேன். புட்டி இப்போது மிக

ஆபத்தான பொருள். பிரதமர் ராம்சிங் அறிவியல் சாதனங்களின் உதவியுடன் அவசரநிலை பிறப்பித்து ஆட்சி செய்யும் நாட்டில் சுவர்களுக்குக்கூட வேவு பார்க்கும் கண்கள் முளைத்துவிட்டன என்ற வழக்கமான பாட்டு எங்கும் ஒலித்தது. முதலில் சிலநாள் எல்லாம் சரியாகத்தான் இருந்தது. ரயில்கள் சரியான நேரத்துக்கு ஓடின. வேலைநிறுத்தங்கள், மறியல்கள், கூக்குரல்கள் ஏதுமில்லை. பத்திரிகைகள் முழுக்க வளர்ச்சித் திட்டங்கள். நாடு நாலுகால் பாய்ச்சலில் எதிர்காலம் நோக்கிச் செல்வதாகச் சொல்லப்பட்டதைப் பெரும்பாலானவர்கள் நம்பினர். ஆனால் மெல்ல மெல்ல ஓர் அமைதியின்மை தட்டுப்பட ஆரம்பித்தது. தலைவர்கள் கைது செய்யப்பட்டுக் காணாமலானார்கள். பத்திரிகைகள், அரசாங்கத் துண்டுப் பிரசுரங்கள்போல் ஆயின. எங்கள் பத்திரிகையே அரசியலையும் சினிமாவையும் துறந்து ஆன்மிகத்தை நோக்கித் திரும்பியது. மௌனச் சாமியாரை நான் பேட்டி எடுக்க முனைந்ததே இதன் மூலம்தான்.

நான் குளிர்சாதனப் பெட்டியைத் திறந்து தண்ணீரை எடுப்பதற்குள் டாக்டர் புட்டியைத் திறந்து அண்ணாந்து வாயில் கொட்டிக்கொண்டார்.

‘அய்யோ!’ என்று பதறினேன்.

டாக்டர் ஆவி மிகுந்த ஏப்பம் விட்டு உடலை ஈரநாய் போல் உலுக்கிக்கொண்டார்.

‘இருங்கள் இருங்கள், ஊறுகாய் தருகிறேன்...’ என்று எடுத்து வைத்தேன்.

நக்கியபடி முகம் சுளித்து, ‘காரம்’ என்றார்.

‘என்ன டாக்டர் இது? இதெல்லாம் கொஞ்சம் அதிகம். ரம் அப்படியே சாராயம்...’

டாக்டர் என்னைப் பொருட்படுத்தாமல் சோபாவில் மல்லாந்து படுத்தார். மெல்ல உடல் வேர்த்து, தளர்ந்து, படிந்தார்.

‘ராம்சிங் நாடாளுமன்றப் பெரும்பான்மையை பெற்றமுறை சரியானதுதான் என்று நினைக்கிறீர்களா?’ என்றேன்.

‘எனக்கு அரசியல் ஆர்வமில்லை’ என்றார் டாக்டர்.

‘ஆமாமாம். ஆர்வமில்லாமலிருப்பது பாதுகாப்பும்கூட’ என்றேன். ‘டாக்டர் நீங்கள் மனநோய் ஆய்வுதானே செய்கிறீர்கள்?’

‘மனநோயாளிகளையெல்லாம் மடையன்கள்தான் ஆய்வுசெய்வார்கள்’ என்றார் டாக்டர். ‘நான் மூளை ஆராய்ச்சியாளன்.’

‘நான் அறிந்ததெல்லாம் பொரித்த ஆட்டுமூளை.’

சிரிக்காமல் ஏப்பம் விட்டார். இன்னொரு ஏப்பம் சோடா வாயு மாதிரி குபுக்கென வந்தது. அவர் குதிரைமீது ஆரோகணித்துவிட்டது தெரிந்தது.

இது என்ன வகையான குடிமுறை என எனக்குப் புரியவில்லை. சியர்ஸ் இல்லை, பேச்சு இல்லை. குறைந்தபட்சம் நாலுவாய் உளறல்கூட இல்லை.

‘நான் உடனே சாமியாரைச் சந்திக்கவேண்டும்’ என்றார் வாயில் வழிந்த நீரைத் துடைத்தபடி.

‘அது எளிய விஷயமல்ல. ஒரு நாளைக்கு முந்நூறு பேர்தான் அனுமதிக்கப்படுகிறார்கள்.’

‘எனக்கு அதைப் பற்றித் தெரியாது. எத்தனை மடையர்கள் வேண்டுமானாலும் அவரைச் சந்திக்கட்டும். நாளை நான் சந்திக்கவேண்டும்...’

மனிதர்கள் என்ற சொல்லைத்தான் மடையர்கள் என்று அவர் குறிப்பிடுகிறார் என அப்போதுதான் புரிந்தது. ‘இங்கே என் நண்பருக்குத் தெரிந்த சாமியார் ஒருவர் இருக்கிறார். அவர் வழியாக முயற்சி செய்யலாம் என்று நினைத்திருக்கிறேன்...’ என்றேன். ‘எங்கள் ஞாயிறு

மலரில் இந்த மௌனச்சாமியாரைப் பற்றி ஒரு கட்டுரை எழுதப்போகிறோம்...'

'இவரை நான் சந்திக்கவேண்டும். மிக மிக முக்கியமான பிரச்னை.' டாக்டர் சட்டென்று அதிக உயிர் பெற்றார். 'அவசரம். மிக மிக அவசரம்!'

'ஏன்?'

'நான் மிகப்பெரிய ஒரு சிக்கலில் இருக்கிறேன்.'

'என்ன சிக்கல்?'

டாக்டர் எழுந்து அமர்ந்து, 'அறிவுத்திறன் என்றால் என்ன?' என்றார்.

'இதென்ன கேள்வி?' என்றேன். உண்மையில் அந்தரங்கமாக, பத்திரிகையாளர்களுக்கு மட்டுமே உள்ள ஒரு குணாதிசயம் அது என்று நான் எண்ணிவந்தேன்.

'சொல்லு. அப்போதுதான் நான் விளக்க முடியும்...'

'தகவல்களை நினைவில் அடுக்கும் திறன், அவற்றைத் தொகுத்தும் பகுத்தும் அறியும் திறன், முடிவுகளை உருவாக்கும் திறன், அந்தத் தளத்திலிருந்து மேலும் முன்னகரும் கற்பனைத்திறன் ஆகியவற்றின் ஒட்டுமொத்தம்' என்றேன்.

டாக்டர் பிரமித்துவிட்டார். 'பத்திரிகையாளர்கள் புத்தகமெல்லாம் படிப்பார்கள் என்று நான் எண்ணியதே இல்லை' என்றார்.

'நாங்கள் செய்திக் காகிதத்தைத்தானே தினமும் சாப்பிடுகிறோம்' என்றேன்.

டாக்டர் கவனமில்லாமல், 'நல்ல விஷயம்' என்றார். 'அறிவுத்திறன் என்பது மூளையின் இயக்கத்திறன்தான். நீ சொன்ன நான்கும்தான் மூளையின் வேலைகளில் முக்கியமானவை. மூளை என்பது ஒரு நரம்பு முடிச்சு. நரம்புகள் மூலம் அங்கே தகவல்கள் சென்று சேர்கின்றன. அவை அங்கே உடல் மின்சாரத்தாலும் ரசாயன மாற்றத்தாலும் பதிவு செய்யப்படுகின்றன. நியூரான்கள் என்பவை மூளையின் அடிப்படைத் தகவல்பதிவு அலகுகள். உடல் மின்சாரம் அத்தகவல்களை ஒன்றோடொன்று தொடர்புபடுத்தி சிந்தனையை நிகழ்த்துகிறது. உண்மையில் நம் மூளையின் மிகச் சிறிய பகுதியைக்கூட நாம் பயன்படுத்தவில்லை என்பது உனக்குத் தெரியுமா?'

'ஆம். ரிச்சர்ட் ரீஸ்டாக் என்பவரின் நூலில் படித்தேன். 'மூளைக்கு தனி மனம் உண்டு' என்ற நூல். மாமேதைகூட மூளையின் சாத்தியங்களில் கால்பகுதியைத்தான் பயன்படுத்துகிறார் என்று...'

'அவர் வெகுஜன எழுத்தாளர்...'

நான் சீண்டப்பட்டேன். 'ஆலிவர் சாக்ஸ் புத்தகம் ஒன்றையும் படித்திருக்கிறேன். நான்கு நரம்பு நோயாளிகளின் பிரச்னை அறிக்கைகள்...'

'அவர் ஆராய்ச்சியாளர்தான். நீ பெயர்களை அடுக்கவேண்டாம்' என்றார் டாக்டர் ஏப்பமாக. 'மூளை ஓர் அபாரமான இயந்திரம். முதனிலை கணிப்பொறிகள்கூட அதன்முன் தூசு. ஒரு முகத்தை நீ அடையாளம் காணும்போது உன்மூளையின் எத்தனை லட்சம் பதிவுகள் ஒரு கணத்தில் பரிசீலிக்கப்படுகின்றன என்று தெரியுமா? நம் மூளை ராஷ்ட்ரபதி பவன் மாதிரி. நாம் அதன் வராந்தாக்களில் வாழ்கிறோம். சிலர் மட்டும் ஒரு அறையைக் கூடுதலாகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள்.'

'ஐன்ஸ்டீன் கூடவா?'

'அவர் பிரபஞ்சவியல் மேதை. ஆனால் உயிரியல் அறியாதவர். அவரால் தாஸ்தாயேவ்ஸ்கி போல ஒரு நாவலை எழுதிவிட முடியாது.'

‘ஆம். அது மனித சாத்தியமே இல்லை’ என்றேன்.

‘சாத்தியம்தான்’ என்றார் டாக்டர். ‘முப்பது வருடங்களாக நான் மூளையின் திறனை அதிகரிக்கும் மருந்துகள் பற்றி ஆராய்ச்சி செய்துவருகிறேன்.’

‘அப்படி அதிகரிக்க முடியுமா என்ன?’

‘கண்டிப்பாக. இப்போதே பல்வேறு மூளைத்தூண்டிகள் [Cognitive Enhancers] கிடைக்கின்றன. ஹைடர்ஜைன், பிராஸ்டைம், அனிராசெட்டேம், மினாப்ரிய்ன் (Hydergine, Piracetam, Aniracetam, Minaprine) எல்லாம் அதிக நினைவாற்றலுக்காகவும் அதிக நேரம் கவனம் நிற்பதற்காகவும் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவை எப்படி இயங்குகின்றன? உடலோ மூளையோ அபாயக் கட்டங்களில் திடீரென அதிக உக்கிரத்துடன் செயல்பட்டாகவேண்டிய தேவை உள்ளது. அப்போது அத்திறனை உருவாக்கும் உயிர் ரசாயனங்கள் நம் உடலில் ஊறுகின்றன. அப்போது தேவையான பகுதிகள் அல்லாமல் பிற பகுதிகளின் இயக்கம் தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு அதிக ரத்தமும் மின்னூட்டமும் செலுத்தப்படுகிறது...’

‘ஆம்.’

‘அதைத்தான் என் மருந்து முழுமையாகச் செய்கிறது. அந்த ரசாயனங்களைச் செயற்கையாகச் செலுத்துகிறேன். 1980ல் ரிச்சர்ட் வுர்ட்மான் (Richard Wurtman) என்பவர் டைரோசினை [Tyrosine] ஏதாவது தூண்டியுடன் சேர்த்து மூளைக்குச் செலுத்தினால் மூளையில் மின்னூட்டத்தை நிகழ்த்தும் டோபாமின், நோர்பைன்ப்ரைன், எபின்ப்ரைன்* (Dopamine, Norepinephrine, Epinephrine) போன்ற பொருள்கள் அதிக அளவில் உருவாகின்றன என்று கண்டுபிடித்தார். என் ஆய்வு பலமடங்கு செறிவுபடுத்தப்பட்ட டைரோசினும் ஒரு சீன மூலிகையும் சேர்ந்தது... மன்னித்துக்கொள். இதைவிட நான் உனக்கு விளக்க முடியாது...’

‘மா ஹ்வாங் (Mahuang)தானே அந்த மூலிகை?’

‘நீ அபாயகரமான பத்திரிகையாளன். ஆனால் மூளைக்குள் ஓர் ஐஸோடோப்பும் வைக்கவேண்டும்; உபரி மின்சாரத்துக்காக.’

‘பரவாயில்லை, உங்கள் மருந்தைப் பரிசோதனை செய்தீர்களா?’

‘என் மருந்து மூளையின் மின்னூட்டத்தை பல மடங்கு தீவிரப்படுத்துகிறது. புலன்களின் பதிவுகள் இருபது மடங்கு அதிகரிக்கும். பதிவுகளுக்கு இடையேயான தொடர்புகள் இருபதின் மடங்குகளில் அதிகரித்தபடி செல்லும். மூளையின் எல்லாச் சாத்தியங்களும் பயன்படுத்தப்படும். அந்த மூளை தூங்கவேண்டியதில்லை. அதற்கு மறதியும் இருக்காது.’

‘அதற்கு ஆழ்மனம், நனவிலி [unconscious] உண்டா?’

‘மறதி இல்லையேல் எப்படி நனவிலி உருவாகும்? மறந்த விஷயங்களின் பெருந்தொகுப்புதானே அது?’ டாக்டர் தன் சுருதிக்கு வந்துவிட்டிருந்தார். ‘இதோ பார், நீ பஸ்ஸில் எண்பது கிலோமீட்டர் வேகத்தில் போகிறாய். சாலையோரம் ஒரு பிணம் கிடப்பதை ஒரு கணம் மட்டும் பார்க்கிறாய். முப்பது வருடம் கழிந்து ஒரு கனவில் அக்காட்சி வருகிறது. அந்தப் பிணத்தின் ஒவ்வொரு தகவலும்- அதனருகே கிடந்த ரூபாய் நோட்டில் இருந்த படம்கூட- தெரிகிறது. எப்படி? மூளையில் அவை உள்ளன. அவற்றையெல்லாம் வைத்துக்கொண்டு உன் அன்றாட வாழ்க்கையை நீ நடத்தமுடியாது. ஆகவே உன் மனம் அவற்றை அடியில் தள்ளுகிறது. ஆழ்மனம் உருவாகிறது. ஆனால் என் மருந்து மூளையின் சிந்தனைத் திறனை இருபதின் மடங்குகளில் பல்லாயிரம் தடவை அதிகரிப்பதனால் மேல்மனமே நனவிலி போல உக்கிரமான விரிவுடன் இருக்கும். அதாவது அந்த மனிதன் எப்போதுமே நனவிலிமனம் கொண்டிருப்பான். உக்கிரமான கனவிலோ உச்சக்கட்ட தியான நிலையிலோ இருப்பதைப்போல!’

எனக்கு பீதி ஏற்பட்டது. ‘டாக்டர் நீங்கள் இந்த மருந்தை இன்னும் யாரிடமும் சோதனை செய்து பார்க்கவில்லை அல்லவா?’

‘செய்தேனே’ என்று என்னை அதிரவைத்தார்.

‘யாருக்கு?’ எனக்குக் குடல் குலுங்கியது. ‘உங்களுக்கேயா?’

‘எனக்குச் செய்தால் அதன் விளைவுகளை நான் எப்படி பரிசோதிப்பது? என் கூர்க்கா, ஜங் பகதூருக்கு.’

‘டாக்டர் இது டேனியல் கேயிஸ் எழுதிய ‘ஃப்ளவர்ஸ் ஃபார் அல்ஜீர்னான்’ கதை போல இருக்கிறது.’

‘யார் அந்த முட்டாள்?’

‘ஒன்றுமில்லை. ஜங் பகதூர் என்ன ஆனார்? கல்கத்தா நூலகத்தை முழுக்க விழுங்கிவிட்டாரா?’

‘இல்லை. அவனை நான் ஒரு காட்டுக்குள் கொண்டுபோய் தங்கவைத்தேன். இயற்கையின் நடுவே. எல்லா அறிவையும் அவனே நேரடியாக அறியமுடியும்’ என்றார் டாக்டர். ‘அவன் அறிவுத்திறனை என்னால் ஒரு கட்டத்துக்குமேல் சோதனை செய்யவே முடியவில்லை. மொழித்திறன் உச்சத்துக்குப் போனபோது அவனால் பறவைகளுடன் பேச முடிந்தது. ஆயிரம் பூச்சிகளின் சேர்ந்த ஒலியை பிரித்துக்கேட்டு தனித்தனியாகப் புரிந்துகொள்ள முடிந்தது’ என்றார் டாக்டர். ‘விஸ்கி மீதி இருக்கிறதா?’ என்றார்.

‘விஸ்கி இல்லை. நீங்கள் சாப்பிட்டது ரம். ஆனால் அது மிச்சம் இல்லை’ என்றேன்.

‘அவன் காட்டின் பல்லாயிரம் கோடித் தகவல்களை ஒரே சமயம் உள்வாங்கி காட்டின் அளவுக்கே முழுமையுடன் அவற்றைத் தன்னுள் நிரப்புவதைக் கண்டேன். நான் கேட்ட கேள்விகளுக்கான அவனது பதில்களில் இன்னும் ஆயிரம் வருடம் நம் அறிவுத் துறைகள் யோசிக்கவேண்டிய விஷயங்கள் இருந்தன.’

விபரீதம் நோக்கி கதை போவதை உள்ளுணர்வு சொன்னது. இன்னொரு பிராங்கன்ஸ்டைன். அறிவியல் திறந்துவிட்ட புதுப் பூதம்.

‘அவனை ஒரு முழு மனிதனாக ஆக்க நான் முயன்றேன்.அவனது மூளையின் எல்லாப் பகுதிகளும் முழுமையாக செயல்படச் செய்தேன். உனக்குத் தெரியும், இது ஒரு மாபெரும் மானுடக் கனவு. மனிதனுக்கு இயற்கை போட்ட எல்லா எல்லைகளையும் தாண்டும் ஓர் அதிமானுடனுக்காக எப்போதுமே மானுட இனம் கனவு கண்டு வருகிறது. மனிதனின் பரிணாம வளர்ச்சி அந்தத் திசை நோக்கி அவனை இட்டுச்செல்கிறது என்று சொல்கிறார்கள். சாக்ரட்டீஸ் முதல் நீட்சே வரை, வியாசன் முதல் அரவிந்தர்வரை அதைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள்...’

‘டாக்டர், இயற்கைக்கு இப்படி சவால் விடலாமா?’

‘மனிதனின் பரிணாமமே இயற்கைக்கு விடப்பட்ட நிரந்தரச் சவால்தானே?’ என்றார் டாக்டர். ‘ஆதிமனிதன் எப்போது முதுகை நிமிர்த்தி எழுந்து நின்றானோ அப்போதே இயற்கையை எதிர்த்துப் போராட ஆரம்பித்துவிட்டான். மனிதக் கலாசாரம் என்பதே இயற்கையை எதிர்ப்பதுதான். அதிமனிதன் இயற்கையை முழுமையாக வென்றவன்.’

‘ஜங் பகதூர் இப்போது எங்கே?’

டாக்டர் வெகுநேரம் பேசாமலிருந்தார். பிறகு, ‘அவன் தப்பித்துப் போய்விட்டான்’ என்றார்.

‘பிராங்கன்ஸ்டைன்!’ என்றேன்.

‘அவன்தான் இந்த மௌனச்சாமியார்’ என்றார் டாக்டர்.

நான் பல கணங்கள் மனமில்லாமல் அமர்ந்திருந்தேன்.

‘நேற்றுத்தான் இவரைப் பற்றிய ஒரு கட்டுரையைப் படித்தேன். படத்தையும் பார்த்தேன்’ என்றார் டாக்டர்.

‘இவரது மூளை இயங்குவதாகவே தெரியவில்லையே. இவர் ஒரு மந்தபுத்தி ஆசாமி என்கிறார்கள். சிலர் இவரை அவதார புருஷர் என்று சொல்லிப் பணம் பண்ணுகிறார்கள். எங்கள் இதழின் கட்டுரையே இந்தக் கோணத்தில்தான்.’

‘மூளை தன் இயக்கத்தை நிறுத்திக்கொண்டிருக்கலாம். மூளையின் ஏதாவது ஒரு பகுதி முழுமையடையாமல் இருக்கும்வரைதானே அது செயல்படவேண்டும்? சிந்தனை என்பதே அலைகள்தானே? முழுக்க நிரம்பிய பாத்திரத்துக்குள் ஏது அலைகள்?’

‘முழு மனிதன்!’ என்றேன். ‘அதாவது அவனுக்கு மனித இயல்பே இல்லை.’

‘ஆம்’ என்றார் டாக்டர்.

அதிமனிதன் அதிகாரமே உருவானவன் என்றார் நீட்சே; ஞானமே உருவானவன் என்றார் அரவிந்தர். இதோ அவன் வெண்டைக்காய் போல இருக்கிறான். எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

மறுநாள் அனுமதி கிடைத்துவிட்டது. தெரிந்த ஆள் உதவினார். பெரிய கூடத்தில் காத்திருந்தவர்களை இருபது இருபது பேராக உள்ளே அனுப்பினார்கள். உள்ளே என்பது உண்மையில் வெளியே. அங்கே ஒரு பெரிய தோட்டம். அல்லது குட்டிக் காடு. பாறைமீது ஒரு மனிதர் கோவணம் மட்டும் அணிந்து பேசாமல் அமர்ந்திருந்தார். முகத்தில் புன்னகைக்கான சதையமைப்பு இல்லை. ஆனால் புன்னகைப்பது போலிருந்தது. பக்கத்தில் சில மயில்கள் மேய்ந்தன.

அவர் அருகே போனதுமே என் சந்தேகங்கள் இல்லாமலாயின. நான் ஒன்றுமே யோசிக்கவில்லை என்பதை மறுவாசல் வழியாக வெளிவந்ததும் அறிந்தேன். மிக நெகிழ்ந்திருந்தேன். கண்ணீர் வருமளவுக்கு. என்ன நடந்தது?

ரமண மகரிஷியைச் சந்தித்தது பற்றி பால் பிராண்டன் எழுதியது நினைவுக்கு வந்தது. ஒரு மனிதன் சும்மா உட்கார்ந்திருக்கிறான். அவனைப் பார்த்தவர்கள் பரவசம் அடைகிறார்கள்; கண்ணீர் விடுகிறார்கள்; ஆழமான மனநகர்வு கொள்கிறார்கள். ஏன் என அவர்களுக்குத் தெரிவதுமில்லை.

‘நீங்கள் என்ன நினைத்தீர்கள்?’ என்றேன் டாக்டரிடம்.

‘ஓம்! அது பூரணம். இதுவும் பூரணம். பூரணத்திலுருந்து பூரணம் பிறக்கிறது. ‘பூரணத்திலிருந்து பூரணம் பிறந்த பின்பும் பூரணமே எஞ்சி நிற்கிறது!’ என்ற ரிக்வேத வரி’ என்றார் டாக்டர். ‘நீ?’

‘ஒரு மெல்லிய அதிர்ச்சி. பிறகு ஒரு பரவசம்.’

‘ஏன் தெரியுமா?’

‘ஏன்?’

‘அவர்மீது அணில்கள் ஏறிச்சென்றன; அதனால்தான்.’

‘ஆம்!’ என்றேன் வியப்புடன்.

‘அவர் அங்கே இருப்பதை எந்தப் பறவையும் பொருட்படுத்தவில்லை. ஒரு மனிதர் மரம்போல, பாறைபோல, அந்தச் சூழலின் ஒரு பகுதியாக இருந்தார். மனம் என்ற அலை இல்லாத

மனிதன். உன்னைப் பரவசப்படுத்தியது அதுதான். இயற்கைக் காட்சி ஒன்றைக் கண்டு நீ அடையும் பரவசம் போன்றதே அதுவும். இயற்கையைப் பார்க்கும்போது அதை நீ பிரித்தறியவில்லைதான். ஆனால் ஓயாத அலைகளினாலான உன் மனம் அதை அறிந்துவிட்டது. கடல் தன் கரையைக் கண்டுகொள்வதுபோல.' டாக்டர் சொன்னார், 'உனக்குத்தான் நன்றி சொல்லவேண்டும். நான் வருகிறேன்.'

'ஏதோ பிரச்னை என்றீர்கள்?' என்று கேட்டேன்.

'ஆமாம். அதன் விடை கிடைத்துவிட்டது.'

'என்ன விடை?'

'இயற்கை ஒரு மாபெரும் சமன்பாடு. எல்லா முரண்பாடுகளையும் எல்லா மீறல்களையும் அது இடைவிடாது சமன் செய்தபடியே இருக்கிறது. அதைமீறி எந்தச் சக்தியும் இருக்க முடியாது. இயற்கை அதை அழித்துவிடும். இந்த மனிதரின்முன் என் மனம் பணிந்தது. இவர் ஓர் விதிவிலக்குதான். ஆனால் நாம் அனைவருக்குள்ளும் நம்மை இந்த நிலை நோக்கி இழுக்கும் சக்தியாக இயற்கை இருக்கிறது. இவர்முன் நிற்கும்போது அதை நான் அடையாளம் கண்டேன். ஆம், இயற்கை அவனை ஒருபோதும் விடாது.'

'யாரை?'

'ராம்சிங்கை. அவர் இவரது தம்பி. இவருக்குப் பிறகு அவனைப் பரிசோதனைக்கு ஆளாக்கினேன். இவரைப் போலன்றி அவனில் ஒரு மையத்தை மட்டும் உக்கிரப்படுத்தினேன்.'

'டாக்டர்!' என்றேன். 'எந்த மையம்?'

'மூளையின் முகப்பு. தொகுத்துக் கொள்ளும் பகுதி. அதாவது அதிகாரம்; தன் முனைப்பு; அதன் விளைவான குரூரம்...' என்றார் டாக்டர். 5

[5. பித்தம்]

உள்வளவு அங்கணத் திண்ணையில் அமர்ந்து நல்லகுத்தாலிங்கம் பிள்ளை கஞ்சி குடித்துக்கொண்டிருந்தபோது நாகலட்சுமி அவசரமாக வாசலில் இருந்து உள்ளே வந்து, 'அந்த அகமுடிவான் வந்திருக்கான். சொல்லியாச்சு, ஒத்த ஒரு காசு அவனுக்குக் குடுக்கப்பிடாது. குடுத்ததே போரும். இனி அவன் காசும் கொண்டு போனான்னு சொன்னா எனக்க சுபாவம் மாறும் பாத்துக்கிடுங்க' என்றாள்.

பயத்தம்பருப்பு சேர்த்து சமைத்து சூடாக நெய்விட்ட சம்பா அரிசிக்கஞ்சி. துணைக்குத் தேங்காயெண்ணை விட்டு மயக்கி இளந்தேங்காய் நசுக்கிப்போட்ட சக்கை அவியல். தொட்டுக்கொள்ள மரச்சீனிப் பப்படம், கண்ணிமாங்காய் ஊறுகாய். மனம் கனிந்து சாப்பிட்டுக்கொண்டிருந்த நேரம். நல்லகுத்தாலிங்கம் பிள்ளை எரிச்சலுடன், 'நாற முண்ட சோலியப் பாத்துப்போறியா?' என்றார்.

'நான் சொன்னா சொன்னதுக்க குறவு...' என்று அவள் ஆரம்பித்தாள்.

'எந்திரிச்சேண்ணா கொடலு வாயில வந்துபோடும் நாயே!' என்றார் அவர்.

கைகழுவி குறுஏப்பத்துடன் வாசலுக்கு நடந்தார். பாலராமபுரம் ஈரிழைத் துவர்த்தால் அக்குள் முதுகு கழுத்து எல்லாம் நன்றாகத் துடைத்துக்கொண்டார். கார்த்திகை மாதம். ஆனால் முன்னிரவில் புழுக்கம்தான்.

அரங்கில் பண்டாரம் அமர்ந்திருந்தார். பிறையில் எரிந்த புன்னைக்காய் எண்ணெய் விளக்கின் வெளிச்சத்தில் கரிய பண்டாரத்தின் வெண்ணிற விபூதிப்பட்டைகள்தான் துலக்கமாகத் தெரிந்தன.

'முருகா ஞானபண்டிதா!' என்று கூவியபடி வந்து, குளிர்ந்த கல் திண்ணையில் சரிந்தார் பிள்ளை. பண்டாரமும் சிவகுமாரனை எண்ணிக் கூப்பாடு போட்டார்.

பண்டாரம் மாலைநேர ஜெபதபங்களையும் தியானத்தையும் முடித்துவிட்டு வந்திருக்கிறார் என்று தெரிந்தது. உடலில் இருந்து களப குங்கும குந்திரிக்க மணங்களும் பலவித மலர் மணங்களும் கலந்து அடித்தன. சடை முடிக்கட்டில் அரளிப்பூ செருகப்பட்டிருந்தது. காதில் தெற்றிப்பூக்கள். நல்ல கரிய நெடிய உடல். முற்றிய காய்ச்சில் கிழங்கு போலத் திரண்ட தசைக்கோளங்கள். பண்டாரத்துக்கு வயது அறுபது என்றால் ஆயுர்வேத வைத்தியன்கூட நம்ப மாட்டான். இப்போதும் தினமும் பனையோலை காக்கோட்டையில் முந்நூறு நடை தண்ணீர் மொண்டு பிள்ளையார்கோயில் நந்தவனத்தை நனைப்பார். இருவேளைதான் சாப்பாடு. வீட்டுக்கு ஒருவர் ஒரு நாளைக்கான அரிசியும் பருப்பும் கொடுத்துவிடுவார்கள். காய்கறிகளைப் பண்டாரமே நட்டு வளர்த்து வைத்திருந்தார்.

பண்டாரமே பேசட்டும் என்று பிள்ளை காத்திருந்தார். பண்டாரம் அப்படி சுற்றிவளைத்துப் பேசக்கூடியவரல்ல. நேரடியாகப் பேசவும் தயங்குவார். முற்றத்தில் வைக்கோல் குவியலில் இருந்து பனிபட்ட புதுமணம் வந்தது. தொழுவத்துச் செவலைகளின் மணிக்குலுக்கமும் குளம்புமாற்றமும் ஒலித்தன.

பண்டாரம் மெல்ல முடிவுக்கு வந்து, அசைந்து அமர்ந்து, 'எம்பெருமானே முருகா...' என்று

முனகி, கைகளைப் புத்தகம் போல விரித்துப் படித்து மூடி '... ஒரு இருநூறு இருந்தா சோலிய முடிச்சுப்போடலாம்...' என்றார். 'இந்தத் தடவை தப்பாது. முள்ளுமுனைகூடத் தப்பு நடக்க முடியாது... இதோட சங்கதி திறந்து கிட்டும்... உறப்பாக்கும்' என்றார்.

'இதைத்தான்வே போன தடவையும் சொன்னீரு... ஆடி முடிஞ்சு இப்ப எத்தனை மாசம் ஆவுது? ஆவணியும் புரட்டாசியும் தலைதூக்காமக் கெடந்தீரு... ஐப்பசியில மறுபடியும் தொடங்கியாச்சு... என்கிட்ட இனி எடுக்க பைசா இல்ல... வேற ஆரயாம் பாரும்வே...'

'இல்ல... நான் சொல்லுறது என்னாண்ணா...'

'இனிமே நான் இந்த ரெசவாதம் மந்திரம் ஒரு எளவுக்கும் இல்ல. நீரு செம்பைத் தங்கமாக்குனாலும் செரி தாடகைமலையை வைரக்கல்லாக்கினாலும் செரி, எனக்கு ஒரு புல்லும் இல்ல. போவும்வே.'

'அப்படிச் சொல்லப்பிடாது. இது மந்திரமோ மாயமோ இல்ல. சாஸ்திரமாக்கும். அச்சொட்டான சாஸ்திரம். சாஸ்திரம்னா அதுக்கொரு கணக்கு இருக்கும். கணக்கு தப்பினா விடையும் தப்பும்... ஆனா கண்டிப்பா செரியான விடை உண்டு. செரியாக் கணக்கு போட்டோம்னா அது வராம இருக்காது...'

'இது எத்தனை தடவை ஓய் கணக்கு தப்புதது? நீரு இதைத் தொடங்கி வருசம் இருபதாவுதுல்லா? உம்ம சென்மம் பாழாப் போச்சுல்லா?'

'போனதடவை நான் ரெசாயனம் காய்ச்சின பானையை கணக்காக்காம விட்டேன். அது இரும்பு. இரும்புக்கு அதுக்கான ரெச குணம் உண்டு. அது ரெசாயனம் வற்றி வாறப்ப எடைபட்டுப் போட்டுது. அதை நான் ஊகிக்கல்ல. எந்த உலோகமானாலும் அது இந்த ரெசாயனச் சேர்மானத்தில சேந்துகிடும். சேராத ஒரு பாத்திரம் வேணும்...'

'மண்பானை அதுக்க வேகத்துக்கு நிக்காதுண்ணு சொன்னீரு...'

'நிக்காது. பீங்கானும் நிக்காது. ஆனா கண்ணாடி நிக்கும்...' பண்டாரம் உற்சாகமாகச் சொன்னார். 'கண்ணாடியை நான் நல்லா நாப்பது பக்கமும் பாத்துப் படிச்சாச்சு. அது ஒரு ரெசாயனத்திலயும் எடபடாது. அதாக்கும் இந்த வேலைக்குள்ள செரியான பாத்திரம்... உம்மாணை, கந்தவேளாணை, இது கடைசீ தடவை. இதில கண்டிப்பா பலிக்கும்...'

பிள்ளை சற்றே சபலப்பட்டார். ஆனால் இருநூறு ரூபாய் பெரிய தொகை. இரு ஜோடி உழவு மாடு வாங்கலாம். 'இல்லவே பண்டாரம். நம்மாலே இனிமே கட்டாது. ஆளைவிடும்.'

'அப்டிச் சொல்லப்பிடாது. இது கண்டிப்பா பலிக்குத சூத்திரமாக்கும். இந்தத் தடவை எல்லாம் செரியா அமைஞ்சிருக்கு...'

சட்டென்று பிள்ளைக்கு எரிந்து ஏறியது. 'ஏம்வே... எனக்கு வாயில என்னமோ வருது... வே பண்டாரம் இது நீரு எனக்க கிட்ட இப்டிச் சொல்லத் தொடங்கி வருசம் இருபதாவுது. இதுவரை உம்ம ரெசாயனம் கலக்குததுக்காக நான் சிலவாக்கின ரூபா இருந்தா எட்டு கோட்டை வெதைப்பாடு வாங்கியிருக்கலாம். ஒரு பிரயோசனம் உண்டாவே? இல்ல கேக்கேன். கிடந்து யோசிச்சா சிலப்போ எனக்கு சிரிப்பாக்கும் வாறது. உமக்கா எனக்கா ஆருக்கு பைத்தியம்ணு தெரியல்ல...'

'ரெண்டாளுக்கும்தான் வட்டு... இதில என்ன சிந்திக்க இருக்கு?' என்றது உள்ளறை இருட்டு.

'நீ போடி கூதற நாயே!' என்றார் பிள்ளை.

பண்டாரம் தலை குனிந்து அமர்ந்திருந்தார்.

'நீரு சொன்னப்போ நான் கொஞ்சம் ஆசைப்பட்டது உள்ளதுதான். அது அந்தக்காலம். இப்ப எனக்கு உம்ம ரெசாயனத்தில எள்ளுக்கு இடைகூட நம்பிக்கை இல்ல. போனதடவை உம்ம

முகதாட்சணியம் பாத்தாக்கும் நான் ரூபா தந்தது. இதை எங்கியாம் நிப்பாட்டணும். நான் உறச்சாச்சு. இனி இந்த விஷயமா ஒரு நயாபைசா நீர் எனக்க கிட்டே பாக்க வேண்டாம்…'

'முருகனா நினைச்சுக் கும்பிட்டுக் கேக்கேன். இது உறப்பான சோதனையாக்கும். எல்லாக் கணக்கும் இப்ப செரியா வந்தாச்சு. ஒரு குறை இல்ல. இத்தனை நாள் காத்திருந்திட்டு இப்ப நிப்பாட்டினா… நான் காலுபிடிச்சுக் கேக்கேன்…'

'என்னவே பண்டாரம் காலுபிடிக்கேரு?' என்றபடி மாதேவன் பாட்டா படியேறி கல்முற்றத்துக்கு வந்தார். 'ரெசாயனம் காய்ச்சப் பணம் கேப்பான்… வேற என்ன?'

'கடசீ சோதனைங்கியாரு…'

'அவன் இருபது வரிசமா கடைசீ சோதனைதான் செய்யுதான்… கர்மபலன்! வேற என்னத்த சொல்ல…' பாட்டா உட்கார்ந்தார். 'உனக்க வீட்டுக் கல்திண்ணைக்க குளுத்தி வேற எங்கயும் இல்லடே குத்தாலம். இம்பிடு சுக்குவெந்நீ இருக்காட்டி மருமோளே?'

'கொண்டாறேன்…' என்றது இருட்டு.

'இது எல்லாம் செரியா அமைஞ்ச சோதனை. நான் ஒண்ணு விடாமப் பாத்தாச்சு. எல்லாம் செரியா இருக்கு… என்னை கைவிடப்பிடாது…' என்றார் பண்டாரம் கம்மிய குரலில்.

'லே குத்தாலம், இது ஒருமாதிரி பைத்தியமாக்கும் கேட்டுக்கோ. உனக்ககிட்டே நான் இதை அம்பது தடவை சொல்லியாச்சு. இதுபோல பல கிறுக்கும் மனுஷனுக்கு வரும். பேய் மாதிரி பிடிச்சு ஆட்டிப்போடும். சொத்தும் சுகமும் சுற்றமும் சூழ்ந்ததும் எல்லாம் அந்த ஓட்டத்தில அடிச்சுக்கிட்டுப் போயிரும்… எனக்க நரைச்ச மீசை அனுபவத்திலே நான் இம்மாதிரி எம்பிடு பேரைக் கண்டிருப்பேன்…' என்றார் பாட்டா.

பண்டாரம் மெல்ல 'முருகா!' என்றார். 'திருமூலரும் போகரும் பொய் சொல்லமாட்டாங்கண்ணு நான் நினைக்குதேன் அய்யா' என்றார்.

'அவங்க சொன்னதே வேற' என்றார் பாட்டா. 'சித்தபுருஷங்க மனுஷப்பயகிட்டே பெண்ணாசையையும் மண்ணாசையையும் பொன்னாசையையும் விட்டுடத்தான் சொன்னாங்களே ஒழிய வச்சுக் கொண்டாடச் சொல்லல்ல. வேய் பண்டாரம், சித்தர் பாட்டுகளிலே எந்த விஷயமாவது நேரடியாச் சொல்லியிருக்காவே? எல்லாம் பூடகமா ஒண்ணுக்கு ஒம்பது பொருள் ஒளிச்சுத்தானேவே சொல்லியிருக்கு? இது மட்டும் எப்டிவே நேரடியா சொல்லியிருப்பாங்க?'

சைக்கிள் ஒலி கேட்டது. பிள்ளையின் மகன் கோலப்பன் சைக்கிளைத் தூக்கி முற்றத்தில் ஏற்றி உருட்டிவந்து சாய்ப்பில் நிறுத்தி சங்கிலி போட்டுப் பூட்டினான்.

'என்னவே மக்கா சினிமாவா?' என்றார் பாட்டா.

'சினிமாவுக்குப் போனா சந்தோசப்படுவேனே… இவன் அந்தக் குலமுடிவான் நாயக்கரு கூட்டத்துக்கு ஒப்பம் சேந்துல்லா ஊரூரா அலயுதான்… ஏம்லே பத்தூருக்குப் போயி படியளக்க சாமிய நாறப்பேச்சு பேசியாச்சா? இனி சோறு எறங்குமா?' என்றார் பிள்ளை.

கோலப்பன் தந்தையிடம் பேசுவதைத் தவிர்க்க விரும்பினான்.

பாட்டா, 'இல்ல மக்கா, சொல்லுதேண்ணு நினைக்காதே… உனக்க பீ நான் அள்ளியிருக்கேன் பாத்துக்க. சாமி இல்லேண்ணு சொல்லி அலையுதது செரியில்ல கேட்டுக்கோ. ஒண்ணு கெடக்க ஒண்ணு ஆனா ஆரு பழி? நீ ஒத்தைக்கு ஒரு பிள்ள. வேண்டின பூசொத்து இருக்கு…'

'நீரு சும்மா கெடயும் பாட்டா… நீரெல்லாம் சாமி பூதம்ணு சொல்லியாக்கும் கிந்த மாதிரி ஆளுக கெடந்து சீரழியுதானுக. பாத்தேரா, எப்டி இருக்காண்ணு? முப்பது வருஷமா செம்பை தங்கமாக்குதாரு… இதையெல்லாம் இப்டியே விட்டுவைச்சா பிறவு எப்டி தமிழ்நாடு

உருப்படும்... இவனுகளையெல்லாம் திருத்தணுமானா ஒரு அய்யா போதாது நூறு அய்யா வந்தாகணும்...' என்றபடி கோலப்பன் அமர்ந்தான்.

'மக்கா கஞ்சி குடிக்கியாலே?' என்றது அறை.

'நான் சாப்பிட்டாச்சு.'

'எங்கேண்ணு நான் கேக்கல்ல. வல்ல சாம்பான் புலையன் வீட்டிலயும் கேறி இருந்து வெட்டி விழுங்கியிருப்பான்...' என்றார் பிள்ளை.

'சாம்பான் காய்ச்சின சாராயம் குடிக்கலாமில்லா?' என்றான் கோலப்பன் முற்றத்துத் தென்னைமரத்திடம். பிள்ளை உடனே அடங்கி இல்லாமலானார்.

பண்டாரம், 'ரெசவாதத்தை பொன்வித்தைண்ணாக்கும் சித்தர்கள் சொல்லுதது. பொன்னு ஒரு தனி உலோகம் இல்ல. அதில ரெண்டு மூலம் இருக்கு. அக்கினி ஒண்ணு. சந்திரன் இன்னொண்ணு. அக்கினி அம்சமுள்ள வஸ்துக்கள் பலதும் பூமியில் உண்டு. சந்திர அம்சமுள்ள லோகமும் ரெசமும் பலது பூமியிலே உண்டு. செம்பு அக்கினி. பாதரெசம் நிலா. ரெண்டையும் செரியானபடி ஒண்ணாக் கலந்தா தங்கம் உண்டாகும். அது ரெண்டும் நிண்ணு கலக்க மண்ணு வேணும். அது இரும்பு இல்லாட்டி வேற என்னமாம்...'

'இப்பம் நீரு சொன்னேரே இது சாஸ்திரத்திலே உள்ளதாக்கும். ஆனா இது ரெசவாதம் இல்ல, மனுஷவாதம். தங்கம்னா என்ன? யோகத்திலே அமர்ந்த மனசைத்தான் அப்டிச் சொல்லுதாங்க. நீரு கேட்டேருண்ணா இப்பம் நான் ஒரு அம்பது திருமூலர் பாட்டாவது உதாரணமாச் சொல்லுவேன். வேய் சிவப்பு நெறமுள்ள செம்பு ராஜச கொணம். வெள்ள நிறமுள்ள பாதரெசம் சத்வ கொணம். ரெண்டும் இருக்க எடம் தாற கறுத்த இரும்பும் மண்ணும் தமோ குணம். மூணும் ஒண்ணாச் சேருத ஒத்த மையத்தில செம்பொன்னாட்டு ஆத்மா தொலங்கும். சும்மாவா எம்பெருமானை செம்பொன் மேனியனண்ட்டு சொல்லியிருக்கு? வேய் சாஸ்திரங்களில சொல்லியிருக்க அம்பிடும் ரெசவித்தை இல்லவே; பிரம்ம வித்தை. நீரு கதையறியாம கெடந்து துள்ளுதீரு, பத்து முப்பதுவருஷமா...'

'எப்டி வேணுமானாலும் வியாக்கியானம் செய்யலாம். நான் கண்ட சத்தியம் எனக்கு...' என்றார் பண்டாரம். 'எம்பெருமான் குமரன் எனக்குக் கனிஞ்சு ஒரு திருட்டாந்தம் காட்டியிருக்காரு...'

'திருட்டாந்தமா? என்னது?'

'இது நான் அதிகம் பேருகிட்டே சொன்ன காரியம் இல்ல' என்றார் பண்டாரம் தயங்கி. 'அப்ப நான் பதினெட்டு வயசு சின்னப்பய. நல்ல வாலிப முறுக்கு. கையிலே காசு ஓட்டம். அதுக்குண்டான எல்லா வெளையாட்டும் உண்டு. நமக்கு ஒரு தொடுப்பு. அவளுக்கு அப்ப நாப்பது வயசு பக்கத்தில இருக்கும். அவளுக்க செட்டியாரு, பரம்பரையா பட்டு ஏவாரம் செய்றவரு. நான் பாக்கிறப்ப வியாபாரம் நொடிச்சு திண்ணையில உக்காந்திட்டாரு. அவ பட்டும் துணியும் வீட்டில வைச்சு விப்பா. நம்ம குட்டி ஒருத்திக்குத் துணி எடுக்கப்போயி தொடுப்பு உண்டாகிப்போச்சு. அப்ப செட்டியாரு ராப்பகலா என்னமோ காய்ச்சிட்டு இருப்பாரு. இல்லாட்டி புஸ்தகம் வாசிப்பாரு. ஒரு நாள் என்னது அதூண்ணு கேட்டேன். அப்பத்தான் இதைப்பத்திக் கேள்விப்பட்டது. அவரு ஒரு பண்டாரத்துக்கிட்டே ரெசவாத ரகசியம் படிச்சிருக்காரு. சும்மா செய்து பாத்தவரு முழுமூச்சா எறங்கி எல்லாத்தையும் தொலைச்சாரு. ஆனா கண்டுபிடிக்காம விடமாட்டேண்ணு நிண்ணாரு. எனக்கு அவரைக் கண்டா சிரிப்பு. இப்ப நீங்க சிரிக்கிறீங்களே இதுமாதிரி.'

பண்டாரம் தொடர்ந்தார். 'ஒருநாள் அவ ஆளனுப்பினா. செட்டியாரு செத்துப்போயிட்டாரு. ரெசம் காய்ச்சிட்டு இருக்கிறப்ப பாஷாணப்புகை கௌம்பி விஷமேறிச் செத்தாரு. நாந்தான் முன்ன நிண்ணு எல்லாத்தையும் செய்தேன். செட்டியாரைத் தூக்கி சிதையிலே வைக்கிறப்ப

செட்டிச்சி அவரு வைச்சிருந்த சட்டிபானை புஸ்தகம் எல்லாத்தையும் தூக்கி அதில வைண்ணா. குடும்பத்தப் பிடிச்ச மூதேவி அதோட ஒழியட்டும்ணா. செரீண்ணு நான்தான் தூக்கிவைச்சேன். மண்சட்டியில நீலமா நவச்சாரம் மாதிரி நாத்தமடிச்சிட்டு என்னமோ ஒட்டியிருந்தது. தீ எரியிறப்ப நீலமா சுவாலை கௌம்பிச்சு. மூணாம் நாள் எலும்பு பொறுக்கிறப்ப நானும் நிண்ணேன். குடிமகன் எலும்பை எடுக்கிறப்ப அந்தச் சட்டியைப் பாத்தேன். வெடிச்சுக் கிடந்தது. உள்ள மஞ்சளா பளபளண்ணு நல்ல புதுப்பொன்னு...'

'முருகா!' என்றார் பிள்ளை.

'எனக்குச் சந்தேகம். சட்டியை எடுத்துக் கொண்டுவந்து நல்லாப் பாத்தேன். நீலப்பூச்சு அப்டியே தங்கமாகியிருக்கு. நல்ல சுத்தத் தங்கம். ஆசாரியை வரவழைச்சு சோதிச்சுப் பாத்தேன். தங்கமேதான். எனக்கு அப்டியே சுழட்டிக்கிட்டு வருது. செட்டியாருக்க புஸ்தகம் குறிமானம் எல்லாத்தையும் எரிச்சாச்சு. என்ன செய்றது? விடவும் மனசில்ல. அவளைப்போட்டுக் குடைஞ்சேன். அவரு கடைசியா வாங்கின சாமான்களை விசாரிச்சு வாங்கினேன். அந்த நீல ரெசாயனத்துக்க மணம் மட்டும்தான் எனக்கு ஆதாரம். அண்ணைக்குத் தொடங்கின ரெசவித்தை. சொத்து போச்சு. பண்டாரமா நாடு சுத்திப் பல ஊரும் பல குருவும் கண்டு பல புஸ்தகம் படிச்சு இண்ணைக்கு இங்க வந்து சேந்திருக்கேன். இப்ப எனக்கு நல்லாத் தெரியும் நான் ரொம்பக் கிட்டக்க வந்தாச்சு. சொல்லப்போனா அந்த ரகசியத்தத் தொட்டாச்சு. என் அகமனசுக்குத் தெரியுது... ஆனா என்னால உங்களைச் சொல்லி நம்பவைக்க முடியாது. நான் செய்ஞ்சு காட்டுதேன்...'

'நீரு மயித்துவேரு!' என்றான் கோலப்பன். 'வேய் பண்டாரம், சயன்ஸுண்ணு ஒண்ணு இருக்குவே. கேட்டிருக்கேரா? தங்கம் ஒரு எலிமென்ட். செம்பு இன்னொரு எலிமென்ட். இரும்பு வேற ஒரு எலிமென்ட். எலிமெண்டுண்ணா என்ன தெரியுமா? அடிப்படையில இயற்கையில இருக்க மாறாத பொருள். ஒரு எலிமெண்டை இன்னொண்ணுகூடக் கலக்கலாம்; இன்னொண்ணா மாத்த முடியாது...'

'எல்லா எலிமெண்டும் அணுக்களால ஆனதுதான். அணுன்னா என்ன? பலவிதமான சூட்சுமமான பொருளுக ஒண்ணாச்சேந்து ஒரு அணு ஆவுது. அதை பார்ட்டிக்கிள்கியாங்க சயன்ஸிலே. செம்புக்கும் தங்கத்துக்கும் பார்ட்டிகிள் எண்ணிக்கையிலதான் வித்தியாசம். அந்த எண்ணிக்கைய மாத்த முடிஞ்சா செம்பைத் தங்கமாக்கலாம்' பண்டாரம் சொன்னார்.

கோலப்பன் உள்ளூர அயர்ந்துவிட்டான். அதுவே அவனைச் சீண்டியது. 'எப்டிவே பார்ட்டிக்கிள் எண்ணிக்கையைக் கூட்டுவேரு? ஒண்ணொண்ணா உடைச்சு உள்ள போடுவேரா?'

'உடைக்கலாம். பார்ட்டிகிள் எலிமெண்டை விட்டு வெளியே போகும், உள்ளேயும் போகும்... அதுக்குத்தான் ரேடியேஷன்னு பேரு. தோரியம் எப்டி தம்பி ரேடியம் ஆகுது? ரேடியம் எப்பிடி பொலேனியம் ஆகுது? அதுமாதிரித்தான்...' என்றார் பண்டாரம். 'இப்பத்தான் வெள்ளைக்காரன் ரேடியேஷனைக் கண்டுபிடிச்சிருக்கான். ஆனா நம்ம சித்தர்களுக்கு அதுக்க பிரயோசனம் தெரிஞ்சிருக்கு. சந்திரகாந்தக் கல்லுண்ணு கேட்டிருப்பீக. என்ன அது? இயற்கையா ரேடியேஷனோட இருக்கிற கல்லுதான் அது. தோரியம் கலந்த கல்லு. இண்ணைக்கு நாம அதில தோரியத்தைப் பிரிச்சு விக்கிறோம். அதை பலவிதமான மருந்துகள் தயாரிக்க சித்தர்கள் பயன்படுத்தியிருக்காங்க. நம்ம ரெசவாத முறையில சக்தியான சந்திரகாந்தக் கல்லும் பாதரசமும் வேணும்னு எல்லாச் சித்தரும் சொல்லியுருக்காங்க. சந்திரகாந்தக் கல் பாதரசத்தைப் பாதிச்சு கறுப்பா ஆக்கிடும். அது ரேடியேஷன் வழியா பார்ட்டிக்கிள் எண்ணிக்கை கூடுறதுதான்...'

'அரைகுறை சயன்ஸு பேசுறவங்களுக்கு இருக்கிற தர்க்கம் மத்தவங்ககிட்டே இருக்காது...' என்றான் கோலப்பன்.

‘நீரு பண்டாரம். உமக்கு என்னத்துக்குவே தங்கமும் பொன்னும்?’ என்றார் பாட்டா.

‘எனக்கு ஒரு துண்டு தங்கம் வேண்டாம். ஆனா இது ஞானம். ஞானம்னா என்ன? எம்பெருமான் கந்தன்கிட்டே நம்மைக் கூட்டிட்டுப் போற பாதை. அஞ்ஞானத்தோட கதவை மூடி வைச்சு நம்மை அவன்கிட்டேருந்து மறைச்சு வைச்சிருக்கு பாசம். ஒரு சயன்ஸ் கண்டுபிடிப்பு ஒரு கதவு திறக்கிறதுக்குச் சமம். முருகா ஞானபண்டிதா!’ என்றார் பண்டாரம். ‘இப்ப தம்பி சொன்னாரே ஒரு பொருளை இன்னொண்ணா மாத்த முடியாதுண்ணு. மாத்த முடியும். இப்ப நான் சொல்லுதேன் எண்ணைக்கானாலும் ஒருநாள் மனுஷன் எல்லாப் பொருளையும் எல்லாமா மாத்தத்தான் போறான். அண்ணைக்கு மண்ணையும் கல்லையும் அவன் எரிப்பான் தம்பி. கரும்பாறையைச் சீனியாக்கித் திம்பான். சயன்ஸ் போற வழி அதாக்கும்...’

பண்டாரம் கைகளைப் பிரித்துப் பார்த்தார். ‘பாட்டா நீங்க சொன்னது எனக்குப் புரியாம இல்ல. நான் இதைத் தொடங்கி முப்பது வருஷமாவுது. எவ்வளவு கேட்டிருப்பேன், எவ்வளவு கண்டிருப்பேன். தங்கம்தேடி வாழ்க்கையை அழிச்சுக்கிட்டவங்க தலைமுறை தலைமுறையாக் கூடிக்கிட்டே இருக்காங்க... ஆயிரம், லெட்சம்... ஆனா ஒருநாளைக்கும் இந்த அலைச்சல் நிக்காது பாத்துக்கிடுங்க... இதைமட்டும் ஏன் சொல்லுறீங்க? பசியில்லா உடலுக்காக, வானத்திலே பறக்கிறதுக்காக, சாவில்லா வாழ்வுக்காக, மனுஷன் காலம்தோறும் தேடித்தேடி அலைஞ்சிட்டுதானே இருக்கான்? அந்த அலைச்சலை அந்தந்தக் காலத்திலே எத்தனை லெச்சம் பேர் கிண்டல் செய்திருப்பாங்க? எத்தனை குடும்பங்கள் அவனுக கூடச் சேந்து அழிஞ்சிருக்கும்? இது ஒருமாதிரி தீயாக்கும் தம்பி. இது நம்ம மேல பிடிச்சுக்கிட்டா பின்ன விடாது. எரிஞ்சி எரிஞ்சு நம்மைச் சாம்பலாக்கிப்போடும்... ஆனா இப்பிடி எரிஞ்சு சாம்பலாகிப்போறதில ஒரு சொகம் இருக்கு. ஜென்ம சாபல்யமே இதிலே இருக்கு தம்பி. இது நான் சொன்னா உங்களுக்கு யாருக்கும் புரியாது... நீங்க பைசா குடுக்காட்டி நான் பிச்சை எடுப்பேன், திருடுவேன், கொலை செய்வேன்... என் உசிரு இருக்க காலம்வரை இந்தச் சோதனையை விடமாட்டேன்...’

‘இது கஞ்சா கேஸு... திருந்தாது’ என்றபடி கோலப்பன் எழுந்து போனான்.

பாட்டா, ‘குத்தாலம், மாயை மாயைண்ணு சித்தாந்தம் படிக்கோம். ஆனா நாம அதைச் செரியாப் புரிஞ்சுகிடுறதில்ல பாத்துக்க. கண்ணுமுன்னால அது இப்டி பூதம் மாதிரி வந்து நிக்கிறப்ப பயமா இருக்குலே...’ என்றார். ‘பைசாவைக் குடுத்துப் போடு. நாளைக்குப் பின்ன வழியே போற பெண்டுக தாலிய அறுத்தாண்ணா என்ன செய்வே? எப்போ நமச்சிவாயா... நடுவு வலிக்கிடே...’

பாட்டா போனபின் பிள்ளை பண்டாரத்துக்கு ரூபாய் கொடுத்தார்.

‘அம்பிடு கதையும் இதுக்குத்தான். பைசா வாங்காமப் போக மாட்டானே... காலைச் சுத்தின சனி!’ என்றாள் நாகலட்சுமி.

பண்டாரம், ‘சும்மாச் சொல்லல்ல... இதுதான் நான் செய்த கடைசீ சோதனை. இதில ஒரு மயிரளவுக்குக்கூடப் பழுது இல்லை. இண்ணைக்கு தங்கம் சிரிக்கும்யா... காலைல வந்து பாருங்க...’ என்றார்.

பிள்ளைக்கு திடாரென்று ஓர் ஆழமான பரிதாப உணர்ச்சி ஏற்பட்டது. அவர், ‘செரி பாப்பம்’ என்று மட்டும் சொன்னார்.

காலையில் கோயில்வளைவைக் கூட்டிப்பெருக்கும் சுடலைக்கண் அலறிப் புடைத்து ஓடிவந்து முற்றத்தில் நின்று கூவ, பால் கறப்பதை மேற்பார்வையிட்டபடி தொழுவில் நின்ற பிள்ளையும் தூங்கிக்கொண்டிருந்த கோலப்பனும் பதறி வந்தனர். பண்டாரம் இரவில் கோயில் முற்றத்து மாமரத்தில் தூக்கு போட்டுக்கொண்டு இறந்திருந்தார்.

ஆற்றுக்கு அப்பால் கிராமங்களிலிருந்தும் பண்டாரத்தின் சாவைக் கேட்டு ஆட்கள் கூடினார்கள். காவி மேல்துண்டில் சுருக்கிட்டு, கழுத்து இறுகி, நாக்கு பற்களால் கடிபட, கைகள் முஷ்டி பிடித்து இறுகி நீண்டிருக்க, அரைவாசி விழித்த கண்களுடன் பண்டாரம் மண்ணிலிருந்து இரண்டடி உயரத்தில் வலிந்து நெடுகிய கால்கள் காற்றில் ஆடிச்சுழல நின்றிருந்தார். மலஜலம் பிரிந்து துணியை நனைத்திருந்தது. கீழே உதறப்பட்ட செருப்புகள். ஏதோ தவறு செய்துவிட்டு தலை குனிந்து நிற்பது போலிருந்தது.

பண்டாரம் இரவெல்லாம் காய்ச்சிய ரசாயனக் கலவை, அவராலேயே உதைத்து உடைத்துச் சிதறப்பட்டு மணலில் வற்றிக் கிடந்தது. வெற்றிலை எச்சில் போல ஒரு காவி நிறக்குழம்பு. கண்ணாடிக் குடுவைக்குள் அது மஞ்சளாக இருந்தது.

'அவன் நேத்து பேசின பேச்சே செரியில்ல கேட்டியா?' என்றார் பாட்டா. 'எனக்கு அப்பமே ஒரு சந்தேகம். ராத்திரி எனக்கு நல்ல உறக்கம் இல்ல. ரெண்டு தடவை எந்திரிச்சுப் பாத்தேன். பண்டாரம் நல்ல உற்சாகமா பாட்டெல்லாம் பாடீட்டு காய்ச்சிட்டிருந்தார். எப்ப இப்பிடிச் செஞ்சாரோ...'

'செரியா வரல்லைண்ணு தெரிஞ்ச வேகத்தில தூக்குல ஏறிட்டார்... பாவம்தான்' என்றார் பொன்னம்பலக் குருக்கள்.

'அந்தச் சட்டி பானை எல்லாத்தையும் சிதையில வையுங்கலே... இந்த ஊருக்கு வந்த பீடை இதோட போச்சுண்ணு வைங்க...'

பண்டாரம் எரிவதைக் கூட்டம் கூட்டமாக நின்று பார்த்தார்கள். பலபடியாக அனுதாபப்பட்டுப் பேசிக்கொண்டார்கள். அவர்களுக்கு உண்மையிலேயே துக்கமா இல்லை அது வெறும் பரபரப்பா என்று கோலப்பனுக்குப் புரியவில்லை. அவர்கள் கிளர்ச்சியடைந்திருந்தார்கள். பெரும்பாலானவர்கள் தங்கள் அனுபவம் அல்லது கேட்ட அனுபவம் என்று பொய்களைச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். பண்டாரத்தின் மரணம் அவர்களுக்கு ஒருவிதமான நிறைவைத்தான் அளிக்கிறது என்று கோலப்பனுக்குப் பட்டது. அந்தக் கதை அப்படி முடியத்தான் அவர்கள் உள்ளூர விரும்பினார்கள். அவர்கள் அதற்காகக் காத்திருந்திருக்கலாம்.

கசப்புடன் கோலப்பன் திரும்பினான். அவரது மரணத்துக்கு அவனுடைய சொற்களும் ஒருவகையில் காரணம் என்று அவனுக்கு உள்ளூரத் தெரிந்தது. மாமரத்தைப் பெருமூச்சுடன் நோக்கினான். இனி அது பேய்மரமாகி விடும். யார் கண்டது அடியில் பண்டாரம் ஒரு குட்டிச்சாமியாக அமர்ந்து பலிகேட்க ஆரம்பித்தாலும் ஆச்சரியமில்லை.

கோயில் மதிலோரம் பண்டாரத்தின் செருப்புகள் கிடந்தன. தையல்கள் போடப்பட்ட ஆணிகள் அடிக்கப்பட்ட பழைய முரட்டு டயர் செருப்பு. அதில் ஒன்றில் பண்டாரம் காய்ச்சிய அந்த ரசாயனம் முன்பக்கம் பாதிப்பங்கு நனைத்து உலர்ந்து வயலெட் நிறமாகப் படர்ந்திருந்தது. பண்டாரம் அதைக் காலில் மாட்டியபடி குடுவையை உதைத்திருக்கவேண்டும். காலால் அதைப் புரட்டிப் பார்த்தவன் மனம் கணம் நின்று இயங்கியது. அமர்ந்து கையால் சுரண்டி நெருடிப் பார்த்தான். செருப்பில் முன்பக்க ஆணிகளில் ஒன்று மின்னியது. இழுத்து எடுத்தான். தோலுக்குள் இருந்த பகுதி இரும்பாகவும் வெளியே இருந்த தலை பொன்னால் ஆனதாகவும் இருந்தது.

6. உற்றுநோக்கும் பறவை

‘**து**வாத்மர்கள்’ என்ற பெயர் அநேகமாக இன்று பழைய திருவிதாங்கூர்-பிரிட்டிஷ் ராணுவ ஆவணங்களில் மட்டும் உள்ள ஒரு சிறிய வரலாற்றுக் குறிப்பு மட்டுமே. பிற்கால வரலாற்றாசிரியர்களான என். சிவசங்கரன் நாயர், இளங்குளம் குஞ்ஞன் பிள்ளை, எம்.கெ. ராஜப்பன் நாயர் ஆகியோரின் எழுத்துகளில் இவர்கள் மேற்கு மலையடிவாரத்தில் சரல்கோடு என்ற ஊரில் வாழ்ந்த ஒரு பழைய மாடம்பி வம்சம் என்று மட்டுமே சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களுடைய அட்டூழியம் எல்லை மீறிப் போனமையால் பிரிட்டிஷ் ரெசிடண்ட் மேஜர் எஸ். கல்லன் இரு பீரங்கிகளும் முந்நூறு பேரும் கொண்ட ஒரு சிறிய படையை அனுப்பி இவர்களுடைய கோட்டையை உடைத்து இவர்களைத் தோற்கடித்தார். எவரையுமே கைதுசெய்ய இயலவில்லை. மண்ணால் கட்டப்பட்டு மேலே ஓலைக்கூரை போடப்பட்ட கனத்த கோட்டைக்குள் வாழ்ந்த எண்பத்தியொரு பேரும் கடுமையாகப் போராடி வீரமரணம் அடைந்தார்கள். உண்மையில் இவர்கள் ஆங்கிலேயர் எண்ணியதுபோல ஒரு வம்சமோ குடும்பமோ அல்ல; உருவாகிவந்த ஒரு புதிய மதத்தைச் சேர்ந்தவர்கள்.

துவாத்ம மதத்தைப் பற்றி இப்போது தகவலேதும் இல்லாதது ஆச்சரியமல்ல. அம்மதத்தை ஒரு கெட்ட கனவாக மறக்கவே அக்கால மக்கள் அனைவரும் முயன்றிருப்பார்கள். ஆவணங்கள் உண்மை என்றால் இவர்கள் மிக மிகக் கொடூரமான மனித மிருகங்கள். எந்தவிதமான அறவுணர்வோ கருணையோ இல்லாதவர்கள். இவர்கள் தேடிய முக்தி என்பது மனிதத் தன்மையிலிருந்து விடுபட்டு மிருகங்களின் எல்லையில்லா உளச் சுதந்தரத்தை அடைவதுதான் போலும். மேற்கு மலையடிவார இடையர் கிராமங்களில் இவர்கள் நடத்திய கொலை, கொள்ளைகளுக்கு அளவே இல்லை. இவர்களுடைய மிருகத்தன்மையே இவர்களை அச்சமேயில்லாத பெரும் போர் வீரர்களாக ஆக்கியிருந்தது. மறுபக்கம் இவர்களைப் பற்றிய பேரச்சம் அனைவர் மனத்திலும் இருந்தது. ஆகவே கூட்டம் கூட்டமாகச் சிங்கங்கள் வேட்டைக்கு இறங்குவதுபோலவே இவர்களைப் பற்றி மக்கள் கருதிவந்தனர். இவர்களைப் பற்றி மகாராஜாவுக்கு மீண்டும் மீண்டும் முறையீடுகள் சென்றன. மகாராஜா அனுப்பிய சிறிய படைகள் மூன்று முறை முற்றாகத் தோற்கடிக்கப்பட்டு துரத்தப்பட்டன.

மெல்ல, போர் வீரர்களிடையே ஒரு நம்பிக்கை பரவியது, இவர்கள் மனிதர்களே அல்ல என்று. துவாத்மர்கள் உண்மையில் கோட்டைக்குள் தவத்தில் ஆழ்ந்திருக்கும் ரிஷிகள். அவர்கள் தங்களைப் பாதுகாக்க பூதகணங்களைக் காவல் நிறுத்தியிருக்கிறார்கள். அப்பூதகணங்களே சிலசமயம் கட்டுமீறி ஊருக்குள் புகுந்து பேரழிவினைச் செய்கின்றன. பல இடங்களில் மக்களும் வீரர்களும் பூதங்களுக்கு ஆடுமாடுகளைப் பலியிட ஆரம்பித்தனர். மந்திரத் தகடுகளும் தாயத்துக்களும் பரபரப்பாக விற்கப்பட்டன. அரச படைகளும் அஞ்சியபிறகு அவர்களை எவராலும் தட்டிக்கேட்க இயலவில்லை. ஒருமுறை கீழ்க்கிராமமான கிடாரம்தோப்பு என்ற ஊரில் புகுந்த துவாத்மர்கள், முப்பது பேரை பிய்த்துக் கொன்று, பதினெட்டு பெண்களை தூக்கிச்சென்று புணர்ந்துவிட்டு, கொன்று, துண்டுகளாகச் சிதைத்து ஒரு குகையருகே சிதறிப் போட்டுவிட்டுச் சென்றனர்.

அச்செய்தி திருவனந்தபுரத்தை அடைந்தபோது மகாராஜா, ‘பத்மநாபா!’ என்று கூவியபடி கோயிலுக்கு ஓடிவிட்டார். ‘நான்சென்ஸ்!’ என்றார் கல்லன் துரை. அவருக்குக் கர்த்தரிலும் நம்பிக்கையில்லை; பேய்களிலும் நம்பிக்கை இல்லை. ஆனால் அவர்களைக் கொன்று மீண்ட

படைவீரர் சொன்ன கதைகளைக் கேட்டபோது தர்க்கத்துக்குக் கட்டுப்படாத ஏதோ ஓர் அம்சம் அவர்களிடம் இருப்பதாகத் தோன்றாமலில்லை. அதை அவர் தன் நாட்குறிப்பில் பிரிட்டிஷ் மிதத்தன்மையுடன் சொல்லியிருக்கிறார். 'ஐயத்துக்கு இடமான ஒரு கூறு அவர்களிடம் இருந்தது. அவர்களுக்கு, பொதுவாக மனிதர்களிடம் இருக்கும் பல இயல்புகள் அறவே இல்லை என்று அஞ்சவேண்டியிருக்கிறது.'

நான் முதலில் கவனித்தது இந்த வரியைத்தான். இதன் விநோதத்தன்மை என்னை புது வாசனை கிடைத்த வேட்டை நாய்போல நிம்மதியிழக்கச் செய்தது. ஆனால் எனக்கு ஆவணங்களேதும் கிடைக்கவில்லை. அக்காலத்தில் முறையான அரசு ஆவணங்கள் தொகுக்கப்படவில்லை. பல வருட அலைச்சலுக்குப் பின்பு நான் தேடலைக் கைவிட்டிருந்த நாள்களில் ஒருமுறை தற்செயலாக ஒரு நூல் என் கவனத்துக்கு வந்தது. இது கேப்டன் எட்வர்ட் வைட்வுட் என்பவர் எழுதிய நாட்குறிப்பு. அதைத் தன் குடும்பச் சேகரிப்பில் இருந்து எடுத்து அவரது பேத்தி கிறிஸ்டினா நீஃபோல்ட் பதிப்பித்திருந்தாள். அது தென்னிந்தியாவைப் பற்றியது என்று இணையத்தில் பார்த்தமையால் வாங்கி வாசித்துப் பார்த்தேன். எனக்கு மகிழ்ச்சியான ஆச்சரியத்தை அளித்த அந்த நூல் முழுக்க முழுக்க தென் திருவிதாங்கூரைப் பற்றியது. துவாத்மர்களைப் பற்றிய விரிவான குறிப்புகள் அதில் இருந்தன. கேப்டன் எட்வர்ட் வைட்வுட், கல்லன் துரையின் கீழே இரு படைத்தலைவர்களில் மூத்தவராகப் பதினெட்டு வருடம் பணிபுரிந்தவர். துவாத்மர்களை ஒடுக்கிய படையெடுப்பு இவர் தலைமையில்தான் நடந்தது.

கேப்டனின் குறிப்புகளில் துவாத்மர்களைப் பற்றி விரிவாகவே சொல்லப்பட்டிருந்தது. முக்கியமான விஷயம், கேப்டன் தன் ஐயங்களையும் அறிதல்களையும் எவரிடமும் சொல்லவில்லை என்பதே. அவருக்குக் கீழை மதங்களில், குறிப்பாக தந்திர மதங்களில், ஏற்கெனவே ஈடுபாடு இருந்தது. சாக்தேய மதத்தின் பல்வேறு சடங்குகளைப் பற்றியும் பூசைகளைப் பற்றியும் அரிய குறிப்புகள் எடுத்திருந்தார். கிறிஸ்தவத்துக்கு முன்பு இங்கிலாந்தில் இருந்த பாகன் சடங்குமுறைகளுடன் அவற்றை ஒப்பிட்டு ஓர் ஆய்வுநூல் எழுதத் திட்டமிட்டிருந்தார். அந்நூலிலேயே அவர் கொடுங்கல்லூர் கோயில் மற்றும் மண்டைக்காட்டுக் கோயில் பற்றி எழுதியிருந்த சித்திரங்கள் அருமையானவை. கேப்டன், துவாத்மம் ஒரு தனியான மதம் என்பதை தெளிவாகவே குறிப்பிட்டிருந்தார். அவரது குறிப்புகளைச் சுருக்கமாகத் தருகிறேன்.

துவாத்ம மதத்தை நிறுவியவர் காலன்சாமி என்றழைக்கப்பட்ட முன்னாள் போலீஸ்காரர். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் அன்றைய தென்திருவிதாங்கூர் பகுதியான இன்றைய குமரி மாவட்டத்தில் அருமநல்லூர் என்ற ஊரில் பிறந்த மாதேவன் பிள்ளை, திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்து முடித்து மன்னரின் தனிப்போலீஸ் படையில் சேர்ந்தார். அன்றெல்லாம், 'போக்கற்றவன் போலீஸ்; விதியற்றவன் வாத்தியார்' என்ற வழக்கம் நிலவியது. மாதேவனின் குடும்பம் சுசீந்திரம் வட்டப்பள்ளி மடத்துக்கு பாத்தியதைப்பட்ட நிலங்களைக் குத்தகை விவசாயம் செய்து வந்தது. அதில் கடுமையான நஷ்டமும் பட்டினியும் வாட்டியமையால் உண்மையிலேயே போக்கற்றுத்தான் திருவனந்தபுரத்துக்கு ஓடிப்போய் போலீஸ் ஆனார்.

ராட்சத உருவம் இருந்தாலும் இயல்பிலேயே பெரும் கோழையான மாதேவன் சேர்ந்த சில நாள்களிலேயே வேளி அருகே ஒரு கலவரத்தை ஒடுக்க அனுப்பப்பட்ட சிறு படையில் சேர்க்கப்பட்டார். சண்டையில் அவரது ஏட்டு வாமதேவன் நாயரும் மூன்று கான்ஸ்டபிள்களும் படுகொலை செய்யப்பட்டார்கள். களத்தில் அவருக்குக் காளியின் அருள் கிடைத்ததாகவும் அக்கணமே அவர் பெரும் வீரராக ஆகி தனியாகக் கேடிகளை எதிர்த்துச் சண்டையிட்டுத் துரத்தி நான்கு பேரைக் கொன்று மூன்று பேரை வெட்டிக் காயப்படுத்திவிட்டு காலில் ஆழமான வெட்டுக்காயத்துடன் களத்தில் காயம் பட்டுக் கிடந்த ஒரு போலீஸ்காரரைத் தூக்கி படகில் போட்டு தனியாகத் துழாவி காலையில் அகத்துமுறி

துறைக்கு வந்துசேர்ந்ததாகவும் சொல்லப்பட்டது. அது அன்று பரபரப்பான ஒரு கதையாக வாய்கள் தோறும் படர்ந்தது.

அத்துடன் மாதேவன் போலீஸ் பெரும்புகழ் பெற்றார். அவரும் ஆளே மாறிப்போனார். எந்தக் கொடூரத்துக்கும் அஞ்சாதவர் ஆனார். அரிவாள் மீசையும் கரிய ராட்சத உடலும் ரத்தம்போலச் சிவந்த கண்களும் கையில் தெரச்சிவால் சாட்டையுமாக மாதேவன் போலீஸ் ஆரியசாலைத் தெருவில் நடந்தால், கேடிகள் ஊடுசந்துகள் வழியாக ஓடிமறைவார்கள். எந்தக் கடைக்காரனைச் சுட்டி சுண்டுவிரலை அசைக்கிறாரோ அவர் அன்றைக்குத் தேவையான அனைத்தையும் கொடுத்துவிடவேண்டும். மனைவி, குடும்பம் என்று ஏதுமில்லை. எந்தப் பெண் சாயங்காலம் கண்ணில் படுகிறாளோ அவள் அன்று துவம்சம் செய்யப்படுவாள். அந்தப் பெண்களில் பெரும்பாலானவர்கள் அதன்பின் நடக்க ஆரம்பிக்க வெகு காலமாகும். சுருக்கமாக அவர் காலன்போலீஸ் என்று அழைக்கப்பட்டார்.

திடீரென்று ஒருநாள் எவருமே நம்பமுடியாத சேதி வந்தது. காலன்போலீஸ் துறவு பூண்டு பேச்சிப்பாறை அருகே மலைச்சரிவில் வாழ்ந்துவந்த குட்டன்சாமியின் சீடர் ஆகிவிட்டார். குட்டன்சாமி எங்கிருந்தோ வந்து காட்டில் கிழங்கும் காயும் பறித்துத் தின்று, குடில் கட்டி முப்பது வருடமாக வாழ்ந்துவந்தார். காலன்போலீஸுக்கு எப்படி அவருடன் உறவு ஏற்பட்டது என்று எவருக்கும் தெரியவில்லை. காலன்போலீஸுக்கு அப்படி ஒரு முகம் உண்டு என்ற தகவல் மெல்ல வெளியாயிற்று. அவர் பல சமயங்களில் ஆரியசாலை பிரம்மசக்தி அம்மன் கோயிலுக்கு நள்ளிரவில் வந்து விடியும்வரை தியானம் செய்வதுண்டு என்றார்கள். அவர் தன் வீட்டில் இரவெல்லாம் தியானம் செய்வதை வேலையாள்கள் கண்டிருக்கிறார்கள். பல கதைகள் பரவின. மாயமந்திரக் கதைகள்தான் அதிகமும். மெல்ல அவர் மறக்கப்பட்டார்.

குட்டன்சாமி இறந்தபோது மரணப்படுக்கையில் அவரிடம் காஷாயம் வாங்கி காலன்சாமி அவரது குடிலிலேயே தங்க ஆரம்பித்தார். மெல்ல அவரது புகழ் பரவி சீடர்கள் திரள ஆரம்பித்தார்கள். அப்பகுதியில் முதலில் அவர்கள் ஒரு சிறு பகுதியை மரவேலி கட்டி வளைத்தெடுத்தார்கள். பிறகு அது மண்கோட்டை ஆகியது. அவர்கள் தங்களை துவாத்மர்கள் என்று சொல்லிக் கொண்டனர். ஊருக்குள் வந்து தகுந்த இளைஞர்களைச் சந்தித்து தங்கள் மதக் கோட்பாடுகளை பரப்பினார்கள். காலன்சாமியின் சீடர்கள் பக்கத்து கிராமங்களைக் கொள்ளையடிக்க ஆரம்பித்தபோதுதான் மீண்டும் அவர் பேசப்பட்டார். அதற்குள் அவர் ஒரு பெரும் சக்தியாக உருமாறியிருந்தார்.

கேப்டன் எவருக்கும் தெரியாமல் ஒளித்துவைத்திருந்த ரகசியம் ஒன்று உண்டு. அவர் துவாத்மர்களைத் தாக்கி வென்றபோது உள்ளே உயிருடன் இருந்த ஒரு துவாத்மரைப் பிடித்தார். போர் முடிந்து பிணங்களைத் திரட்டியபடி அவர்கள் அப்பகுதி முழுக்க நடந்தனர். காலன்சாமி முதிர்ந்து தளர்ந்திருந்தாலும் போரிட்டு இறந்தார். எவருமே எஞ்சவில்லை. விசித்திரமான கோட்டை அது. கோட்டைக்குள் வட்டவடிவமான ஒரு பெரிய கட்டிடம். அதன் வெளிமுற்றத்தில் போர்ப்பயிற்சிச் சாலைகள் இருந்தன. வெளித்திண்ணையில் பயங்கரமான போர்க்களக் காட்சிகளும் ரத்தவெறி கொண்ட பூதங்களின் படங்களும் வரையப்பட்ட சுதைச்சுவர்களின் கீழ் ஆயுதங்கள் குவிந்துகிடந்தன.

நேர்மாறாக உள்ளறைச் சுவர்கள் மென்மையான நிறம் பூசப்பட்டிருந்தன. அவற்றில் இனிய தியான ஓவியங்களும் மலர்களும் பறவைகளும் இருந்தன. எங்கும் ஆழமான அமைதி நிறைந்து கிடந்தது. உள்ளறைகளில் மான்தோல் ஆசனங்களையும் ஜெபமாலைகளையும் தியானலிங்கங்களையும் கேப்டன் கண்டார். அங்கு பூசையும் தியானமும் செய்தவர்கள் எங்கே என்று வியந்து அறைகள்தோறும் தேடினார். நிலவறைகளில் அவர்கள் ஒளிந்திருக்கக் கூடும் என்றெண்ணி கட்டிடத்தின் தரையையே கெல்லி நோக்கினார். எவருமேயில்லை; உள்ளறையில் ஒரு மரப்பெட்டிக்குள் தியானத்தில் அமர்ந்திருந்த ஒரே ஒரு சடாதாரியைத் தவிர.

அவரை ரகசியமாகக் கட்டி இழுத்துவந்து தன் மாளிகையில் லாயத்தில் சங்கிலியில் பிணைத்து வைத்தார் கேப்டன். அவரை நுட்பமாக விசாரணை செய்தார். அவர் உடல் போர்வீரர்களுக்கான திடத்துடன் இருந்தது. கைகளில் வாட்பயிற்சி பெற்றமைக்கான வடுத்தடங்கள் இருந்தன. ஆனால் அவர் முற்றிலும் சாந்தியும் கனிவும் பெற்று முழுமைகொண்ட மனிதராக, கண்டவர் மனம் குனிந்து வணங்கத்தக்க முனிவராக இருந்தார். அவர் தன்பெயர் நரபாகன் என்றார். இருபதுவருடங்களுக்கு முன்பு ஒரு விறகுவெட்டியாக இருந்தவரை காலன்சாமி சந்தித்து துவாத்மராக ஏற்றுக் கொண்டார். அங்கு அவர் காலன்சாமி வகுத்த சாதனாமுறைமையைக் கைக்கொண்டு யம நியமங்களை செய்து பூசைகள் வழியாக தியானத்தை நோக்கி நகர்ந்து நான்காண்டுகளாக ராஜயோகம் பயின்று வருகிறார். கையில் இருந்த வடுக்கள் எப்படி வந்தன என்று தெரியவில்லை, பூர்வாசிரமத்தில் ஏற்பட்டவையாக இருக்கலாம் என்றார்.

நரபாகன் ஆசிரம அமைப்பை விரிவாக விளக்கினார். அங்கே காலன்சாமி உட்பட மொத்தம் எண்பத்திரண்டு பேர் கடைசியாக இருந்தனர். அவர்களில் நாற்பத்தியொரு பேர்தான் தவம் செய்பவர்கள். பிறர் பாதுகாவலர்கள். தவம் செய்பவர்களை சுக்லர்கள் என்றும் காவலர்களை சியாமர்கள் என்றும் அமைப்பு வகுத்திருந்தது. சியாமர்களிடம் சுக்லர்கள் விரிவாக உரையாடுவது தடைசெய்யப்பட்டிருந்தது. அவசியமானால் மட்டும் தங்கள் தேவைகளைத் தெரியப்படுத்தலாம். சியாமர்கள் மனிதர்களேயல்ல; கிட்டத்தட்ட மிருகங்கள் என்றார் நரபாகர். அவர்கள்தான் ஆசிரமத்தில் உள்ள எல்லா வேலைகளையும் செய்பவர்கள். உணவு தேடிக்கொண்டுவந்து சமையல் செய்து பரிமாறுவது முதல் பூசைக்குரிய இடங்களை அணி செய்வதுவரை அவர்கள்தான். மந்திரத்தால் கட்டப்பட்ட பூதங்களைப் போலத்தான் அவர்களும் என்றார் நரபாகர்.

நரபாகர் சொன்னது முற்றிலும் உண்மை என்று பலவகையான குறுக்கு விசாரணைகள் மூலம் கேப்டனால் உறுதி செய்துகொள்ளப்பட்டது. அவரைச் சித்திரவதைகூடச் செய்து பார்த்தார். அப்பழுக்கற்ற தவசீலர் அவர் என்று உணர்ந்தபோது கேப்டன் அவரது சீடராக ஆகும் மனநிலைக்கு வந்தார். மனித மனங்கள் நரபாகருக்குக் கண்ணாடி வெளிபோலத் துல்லியமாகத் தெரிந்தன. பிறரது ஆழங்களை, அங்கே கூடிக்கிடந்த துயரங்களைத் தன் கனிந்த கண்களால் அவர் கண்டார். அவற்றை மெல்லிய விரல்களால் தொட்டெழுப்பி இளைப்பாறச் செய்தார். அவரது அகத்தில் நிறைந்திருந்த ஆனந்தமும் ஒளியும்தான் அப்படிப் பிற மனங்களில் பிரதிபலிக்கின்றன என்று அறிந்தார் கேப்டன்.

'.. ஒருவகையில் அவர் ஒரு கிறிஸ்து. எல்லையே அற்ற பெருங்கருணையின் மனித வடிவம். இப்பூவுலகையே ஆசீர்வதிக்கும் ஆன்ம வல்லமை கொண்ட மாமனிதர்...' என்று கேப்டன் எழுதினார். கேப்டனின் குறிப்புகள் நரபாகரைப் பற்றிச் சொல்லும்போது உணர்ச்சிப் பரவசத்தின் எல்லைக்கே செல்கின்றன. '...மனிதர்கள் இறைசக்தியின் பெருங்கருணைக்குப் பாத்திரமாகும் அளவுக்கு ஆதலையே நான் ஆன்மிக மலர்வு என்று எண்ணியிருந்தேன். அவர்களே அந்தப் பெருங்கருணையாக மாறமுடியும் என்பதை அம்மனிதரைப் பார்த்தபிறகுதான் அறிந்தேன்... இம்மண்ணில் இன்னும் அற்புதங்கள் சாத்தியம்தான். ஆம், இவரது கனிந்த கைகளால் ஓர் அப்பத்தை ஓராயிரம் பேருக்குப் பங்கிட முடியும். தன் அழகிய பார்வையால் அவர் தண்ணீரைப் பழரசமாக ஆக்கமுடியும்...'

ஆனால் கேப்டனைக் குழப்பிய கேள்வி ஒன்று இருந்தது. பிற சுக்லர்கள் எங்கே? இறந்த சியாமர்கள் எண்ணிக்கை ஏன் இருமடங்காக இருந்தது? அது நரபாகருக்குத் தெரிந்திருக்கவில்லை. லாயத்தில் சங்கிலிக் கட்டிலும் பின் தன் தனியறையிலும் அவர் பெரும்பாலான நேரம் ஆழ்ந்த தியானத்தில் ஒளிவிடும் முகத்துடன் இருந்தார். அவரைக் கட்டுகளில் இருந்து விடுவித்தார் கேப்டன். பிற சுக்லர்களைத் தேடி அப்பகுதியில் அலைந்தார். எந்தத் தகவலும் சிக்கவில்லை.

ஆனால் பதிமூன்றாம் நாள் கேப்டனின் வினாவுக்கு விடை கிடைத்தது. அன்று அமாவாசை. மாலை இருள்வதுவரை நரபாகர் தியானத்தில் இருப்பதை அவரே கண்டார். இரவு கனத்து இருள் பரவி தோட்டம் மறைந்தபோது திடீரென்று அறைக்குள் வேறு ஒரு குரல் கேட்டது. அவர் பாய்ந்தெழுந்து அறைக்குள் சென்றார். அதற்குள் உள்ளே பாய்ந்துசென்ற அவரது மெய்க்காவலன் பயங்கரமாக அலறினான். உள்ளே வெறிகொண்ட மிருகம் போல தசைபுடைக்க நின்ற நரபாகர் அவனைப் பிடித்து, அவன் கரங்களை முறுக்கி, சுள்ளியை ஒடிப்பது போல ஒடித்து மூலையில் வீசிவிட்டு, ஓநாய் போலச் சீறும் முகமும் இளித்த பற்களுமாக அவரை நோக்கி வந்தார். கேப்டன் பாய்ந்து வெளியே வந்து கதவைச் சாத்திவிட்டார். கதவில் மிருகம் போல மோதி அறைந்து கூக்குரலிட்டு அறைக்குள் அமளி செய்தார் நரபாகர். ஜன்னல் வழியாகப் பார்த்த கேப்டனால் என்ன நடந்தது என்றே ஊகிக்க இயலவில்லை. அறைக்குள் இருந்த மனிதர் முற்றிலும் வேறானவர். குரல், அசைவுகள், பார்வை அனைத்துமே வேறு. அது மனிதரே அல்ல, ஒருவகை மிருகம்!.

மறுநாள் பசித்தபோது உணவுதரும்படி அவன் கூவினான். மிகவும் பசிக்கவிட்டு சிறு கவளங்களாக உணவை அளித்து அவனிடம் விசாரணை செய்தார் கேப்டன். அவன் தன் பெயர் வாகடன் என்றான். தன்னை துவாத்ம ஆசிரமத்தைச் சேர்ந்த ஒரு சியாமனாக அடையாளம் சொன்னான். இருபது வருடங்களுக்கு முன்பு ஒரு விறகுவெட்டியாக இருந்தவனை காலன்சாமி சந்தித்து துவாத்மராக ஏற்றுக்கொண்டார். அங்கு அவன் ஆசிரமக் காவலனாகப் போர்ப்பயிற்சி எடுத்துக்கொண்டு அத்தனை வருடங்களாக வேலைசெய்கிறான். அதன் பிறகு எத்தகவலும் அவனிடமிருந்து கிடைக்கவில்லை. இருநாள் கழித்து கதவை உடைத்துத் தப்பிய அவன் ஒரு பணிப்பெண்ணையும் சேவகனையும் கழுத்தை முறித்துக் கொன்றான். முற்றத்து மாமரம் மீது ஏறித் தப்பமுயன்ற அவனை கேப்டன் சுட்டுக் கொல்ல நேரிட்டது. அத்துடன் அந்த மர்மமும் முற்றாக அழிந்தது. ஏதோ ஒரு மந்திர வித்தை மூலம் மனிதர்களை பூதங்கள் போல ஆக்கி, வேலை வாங்கியிருக்கிறார் காலன்சாமி என்று தெரிந்தது. கேப்டன் தன் குறிப்புகளில் அதைக் கீழ்த்திசையின் மர்மங்களில் ஒன்றாகத்தான் சொல்கிறார்.

நான் அந்தக் குறிப்புகளால் பலநாள்கள் தூக்கம் இழந்தேன். எவரிடமும் அதைப் பகிரவும் இயலவில்லை. ஓர் எண்ணம் தோன்றி தொகுப்பாசிரியை கிறிஸ்டினா நீஃபோல்ட்டுக்கு எழுதினேன். கேப்டன் வேறு ஏதாவது எழுதியிருக்கிறாரா என்று கேட்டேன். அவள் ஆச்சரியத்துடன் எனக்குப் பதில் எழுதினாள். அத்தனை நாள்களில் அந்நூலுக்கு பொருட்படுத்தி எதிர்வினையாற்றிய இருவரில் நான் இரண்டாமன். முதல் ஆள் திருவனந்தபுரத்தைச் சேர்ந்த உளவியல் ஆய்வாளர் பங்கஜாட்சன் தம்பி. கேப்டனின் வேறு எந்தக் குறிப்பும் இப்போது எஞ்சவில்லை என்று சொன்னாள். நான் பங்கஜாட்சன் தம்பியின் விலாசத்தைப் பெற்று அவரைக் காண்பதற்காக அனுமதி பெற்றுச் சென்றேன்.

தம்பி எழுபது வயதான முன்னாள் உளவியல் மருத்துவர். பிள்ளைகள் அமெரிக்காவில் இருக்க தன் வளர்ப்புமகள் வீட்டில் வாழ்ந்தார். புரியாத ஆய்வுகள் செய்யும் விசித்திரமான மனிதராக அவர் அறியப்பட்டார். இருபது வருடம் முன்பு தன் மருத்துவப் பணியைத் துறந்து உளவியல்சார்ந்து மக்களிடையே விழிப்புணர்ச்சியை உருவாக்கும் ஓர் அமைப்பை நிறுவி நடத்திவந்தார். அவருக்கு நான் எழுதிய கடிதத்துக்கு, ‘நிறுவனர், ஆதார உளவியல் பயிற்சி மையம் [Basic Psychosomatic Training Center], தைக்காடு, திருவனந்தபுரம்’ என்ற விலாசத்திலிருந்து பதில் வந்தது.

இளமழை தூறிய ஒரு காலையில் திருவனந்தபுரம் தைக்காட்டில் வரிசையாக உயர்நடுத்தர வர்க்க வீடுகள் கார்களுடன் வரிசை வகுத்த ஸ்ரீமூலம் காலனியில் நான் அவரைத் தேடிச்சென்ற போது முன்திண்ணையில் சூரல் நாற்காலியில் கையில்லா பனியன் போட்டு அமர்ந்து மாத்ருபூமி படித்துக் கொண்டிருந்தார். நரைத்த தலை அடர்த்தியாக இருந்தது. மெலிந்த, சற்றுக் கூன்விழுந்த நெடிய உடல். சிவந்த சிறிய உதடுகள். என்னை வரவேற்று மகளிடம்

காப்பி கொண்டுவரச் சொன்னார். பொதுவான அறிமுகத்துக்குப் பின் துவாத்மர்கள் பற்றிப் பேச ஆரம்பித்தோம். தன் அறைக்கு இட்டுச்சென்று, தான் சேகரித்த தகவல்களைக் காட்டினார்.

துவாத்மர்கள் வாழ்ந்த சரல்கோடு இன்று சாரோடு என்று அறியப்படுகிறது. அதனருகே உள்ள கல்லுப்பொற்றை என்ற கிராமம்தான் தம்பியின் சொந்த ஊர். அவர்கள் அப்பகுதியில் அறியப்பட்ட நிலக்கிழார்கள். மகாராஜா ராமவர்மா பெண் எடுத்தமையால் 'தம்பி' பட்டம் பெற்ற குடும்பம். அவர்களில் ஒருவர் காலன்சாமியின் சீடராகி துவாத்ம மடத்துக்குச் சென்று கடைசிப் போரில் கொல்லப்பட்டார். அரசகோபம் வரும் என்பதால் அச்செய்தியை அவர்கள் அப்படியே மறைத்துவிட்டார்கள். அவர் பெயர் பல்குனன் தம்பி. அவருக்கு சம்ஸ்கிருத ஞானமும் வேதாந்தக் கல்வியும் இருந்திருக்கிறது. வேதாந்த மாலிகா என்று மலையாளத்தில் காகளி விருத்தத்தில் ஒரு நூலும் எழுதியிருக்கிறார். அவர் தனக்கு காலன்சாமி அளித்த மெய்ஞானத்தைப் பற்றி சம்ஸ்கிருத-தமிழ் மணிப்பிரவாள மலையாளத்தில் எழுதிய சுவடிக் குறிப்புகள் பலகாலம் வீட்டில் பாதுகாக்கப்பட்டு குடும்பம் பாகம் பிரிக்கப்பட்டபோது பங்கஜாட்சன் தம்பியிடம் கிடைத்தன. அப்போது அவர் நீண்டநாள் மருத்துவசேவை முடிந்து ஓய்வு பெற்றபின் சும்மா இருந்த காலம். அக்குறிப்புகளை அக்கறையில்லாமல் வாசிக்க ஆரம்பித்தவர், அதில் ஒரு மாய வாசல் திறப்பதைக் கண்டார். அவர் அதுநாள் மிகுந்த ஆர்வத்துடன் ஆராய்ந்த ஒரு விஷயமே அதிலும் வேறு ஒரு கோணத்தில் பேசப்பட்டிருந்தது.

தம்பி முப்பதுவருடமாக மனப்பிளவு [Schizophrenia] *நோயைப் பற்றி ஆராய்ந்துவந்தார். பிரபலமான டைரோசினுக்குப்* [Tyrosine] *பதிலாக சக்ரமூலி என்ற கற்றாழை வகையான ஆயுர்வேத மூலிகைச் செடியைப் பயன்படுத்தலாம் என்று கண்டுபிடித்து உலகப்புகழ் பெற்றிருந்தார். அச்செடியை அவரது மூதாதையரில் ஆயுர்வேத மருத்துவம் செய்துவந்த சிலர் பயன்படுத்தியிருந்தார்கள். பிற்பாடு துவாத்மர்களின் காலகட்டத்தில் அச்செடிக்கு திடீரென்று அதிகமான தேவை ஏற்பட்டு அவர்களின் தோட்டத்தில் விரிவாகப் பயிர் செய்யப்பட்டிருக்கிறது என்பது அவரது கவனத்துக்கு வந்தது. தோட்டத்தைக் கவனித்துக்கொள்ளும் ஊழியர்கள் சிலர் அச்செடியின் வாசனைக்கு மயங்கி அதன் வசப்பட்டு மெல்ல அதைப் போதைக்காக பயன்படுத்த ஆரம்பித்தார்கள். அவர்கள் பெரும்பாலும் சில வருடங்களிலேயே மனச்சிதைவுக்கு ஆளானார்கள். அவர்களைப் பற்றிய பல கதைகள் குடும்பத்தில் இருந்தன.*

'சக்ரமூலி நம் மூளையில் உள்ள டோபாமினை மிக அதிகமாகப் பெருக வைக்கிறது. மூளையின் ரசாயனப் பரிமாற்றமும் உயிர்மின்னூட்டமும் பலமடங்கு அதிகரிக்கிறது. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் நடந்துகொண்டிருக்கும் மூளை சட்டென்று உக்கிரமாக ஓட ஆரம்பிக்கிறது. மூளையின் வேகம் அதிகரிக்கும்போது அதைக் கட்டுப்படுத்தும் தர்க்க அமைப்பு அதற்குப் போதாமலாகிறது. விளைவாக சக்ரமூலியை உள்ளே எடுத்துக்கொண்டால் நம் செயல்பாடுகள் கட்டுக்கடங்காதனவாக மாறிவிடுகின்றன. அதேசமயம் மூளையின் செயல்பாடுகள் மந்தமடைந்துவிட்டவர்களுக்கு அது அமுதம் போல' என்றார் டாக்டர் தம்பி.

'அதை துவாத்மர்கள் கொள்முதல் செய்தார்கள் அல்லவா?' என்றேன்.

'ஆம். அது ஊகிக்கக்கூடியதுதான்...'

'ஏன்?'

'சக்ரமூலி மூளையில் டோபாமினைப் பெருமளவில் ஊறச் செய்கிறது என்று சொன்னேனே? மனப்பிளவு நோய் கொண்டவர்களின் மூளையை ஆராய்ந்தால் முக்கியமான தடயமாகக் கிடைப்பது அங்கு டோபாமின் அசாதாரணமாகப் பெருகியிருப்பதுதான்...' என்றார் டாக்டர் தம்பி. 'துவாத்மர்கள் ஒரு மனப்பிளவுச் சமூகம்... மனப்பிளவைத் திட்டமிட்டு

உருவாக்கிக்கொண்டவர்கள் அவர்கள். அதற்குத்தான் சக்ரமூலி பயன்படுத்தப்பட்டிருக்கிறது...'

நான் அயர்ந்து போனேன். 'துவாத்மர்கள்... இரட்டை ஆத்மாக்கள்... இதுதானா அதன் பொருள்?' என்றேன்.

'ஆம். நீ என் தாத்தா பல்குனன் தம்பியின் குறிப்புகளைப் படிக்கவேண்டும். காட்டுகிறேன்...' என்றார்.

குறிப்புகளை என்னால் நேரடியாகப் படிக்க முடியவில்லை. தம்பி அவற்றை ஆய்வுசெய்து பொதுவாக எழுதியிருந்த தகவல்களைப் படித்தேன். ஒட்டுமொத்தமாக இவ்வாறு தொகுத்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

மாதேவன் போலீஸின் தனிப்பட்ட ஆளுமையிலிருந்து தொடங்குவது நல்லது என்று படுகிறது. அவர் இயல்பில் ஒரு பெரும் கோழை என்று கதைகள் கூறுவது உண்மையே. ஆனால் வேளி சந்தையில் நடந்த சண்டையின்போது உயிர்தப்பும் ஆவேசத்தில் ஒருவனை வெட்டினார். அவனது மரண அலறலும் துடிப்பும் தன்னுள் உக்கிரமான உவகை ஒன்றை ஊறச்செய்வதை உணர்ந்தார். அதன் பின் அவரை அவராலேயே கட்டுப்படுத்த முடியவில்லை. அச்சம் அகன்றது. கோபம்கூட இல்லாமலாயிற்று. அச்செயலில் இருந்த மகிழ்ச்சியின் காரணமாகவே அவர் போரிட்டார்; வெட்டினார்; குத்தினார்.

சண்டைகளில் ஒருவரின் உடல் மற்றும் உள வலிமையில் பெரும்பகுதியைக் கோபமும் பதற்றமும் வெறியும் சேர்ந்து குடித்துவிடுகின்றன என்பதை வன்முறையில் சிறிதளவாவது அனுபவம் உடையவர்கள் அறிவார்கள். புலன்கள் கூர்மழுங்கி கால் கை தசைகள் கட்டுப்பாட்டை இழந்து அவன் மிதமிஞ்சி வேகம் கொண்டபிறகு சரசரவென தளர்ந்து தொய்ய ஆரம்பிக்கிறான். சண்டைக்குப் பழகிய ஒரு நோஞ்சான் புதிய பலசாலியை எளிதில் வென்றுவிடுவான். சண்டைப் பயிற்சிகள் என்பவை உண்மையில் சண்டையில் ஒருவகை முன்னனுபவத்தை அளித்து உடலையும் மனதையும் கட்டுப்படுத்தக் கற்றுத் தருகின்றன. அதேபோல ஆழமான நம்பிக்கை, மதம் அல்லது கோட்பாடு மூலம் உருவாகும் நம்பிக்கையை முக்கியமாகச் சொல்லலாம். வன்முறையை உள்ளூர நியாயப்படுத்தி நிதானத்தை அளிக்கிறது. அன்று மாதேவனில் கூடிய அந்த நிதானம் அவர் மனத்தைக் கூர்மை அடையச் செய்தது. அவரை அந்தக் கூட்டமே அஞ்சியது. அவர் வென்றார்.

பிறகு தன் மனத்தை அவர் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தார். அந்த ஆர்வமே அவரை தியானப் பயிற்சிகளை நோக்கி இழுத்தது. அந்த ஆழமான பயிற்சிகள் மூலம் மனித மனத்தின் முக்கியமான இயல்பொன்றை அவர் கவனித்தார். மனம் எப்போதும் பிரிந்து பிரிந்துதான் இயங்குகிறது. காலன்சாமியின் உதாரணம் இது. 'மரத்தைத் தறிக்க வேண்டுமென்றால் மனம் உளியாகவும் சுத்தியலாகவும் ஒரே சமயம் மாறும்.' தன் மனம் ஒரு செயலைச் செய்யும்போது அச்செயலை வேறு ஒரு மனம் வேடிக்கை பார்க்கிறது என்று அவர் கண்டார். எந்தப் பதற்றத்திலும் எந்த அச்சத்திலும் அது வேடிக்கை பார்க்காமல் இருப்பதில்லை. அந்த மனத்தைக் கூர்ந்து கவனித்தார் மாதேவன். எத்தகைய கொடூரத்தைத் தான் செய்யும்போதும் தன்னில் ஒரு பகுதி அதில் ஈடுபடுவதில்லை என்பதை மீண்டும் மீண்டும் அறிந்தார்.

அந்நாள்களில்தான் ஒரு கொலைவழக்கு விஷயமாக பேச்சிப்பாறை மலைப்பக்கமாகச் சென்ற மாதேவன் அங்கே குட்டன்சாமியின் ஆசிரமத்துக்குச் செல்ல நேர்ந்தது. அவரைக் கண்டதுமே குட்டன்சாமி தாடியை நீவியபடி, 'ஒரு கிளி பழம் தின்கிறது; பிறிதொன்று பார்த்திருக்கிறது!' என்ற உபநிடத ஆப்தவாக்கியத்தைச் சொன்னார். காலன்போலீஸுக்கு அது ஓர் அடி போல இருந்தது. அவர் நிலைகுலைந்துபோய் சாமியின் காலடியில் பணிந்தார். அங்கேயே சாமியின் சீடராக அமர்ந்தார். அவரிடமிருந்து யோகமுறைகளைக் கற்றார்.

யோகமுறைகளில் காலன்சாமி அறிந்த முக்கியமான விஷயம் தியானத்தில் மனம் கொள்ளும்

இரட்டைநிலைதான். ஒருமனம் முனைகொண்டு ஆழம் நோக்கிச்செல்லும்போது அதிலிருந்து பிரிந்ததுபோல இன்னொரு மனம் பரவி விரிந்து செல்கிறது. மனத்தின் ஒவ்வொரு செயல்பாடும் அதற்கு நேர் எதிரான இன்னொரு செயல்பாட்டால் தடுக்கப்படுகிறது. மனத்தின் விசையின் பெரும்பகுதியை மனமே உண்டுவிடுகிறது. மனம் ஓயாது மனத்துடன் போரிடுகிறது. மனம் மனத்தை முடிவின்றி உண்டுகொண்டிருக்கிறது. யோகமரபில் தன் வாலைத் தான் விழுங்கும் பாம்பு உருவமாக அதை அமைத்திருக்கிறார்கள் என்று கண்டார் காலன்சாமி.

யோகத்தின் முதற்கட்டத்தில் குவிய யத்தனிக்கும் மனத்தைக் குலைக்கும் குறுக்குவாட்டு நகர்வுகளுக்கு எதிராகப் போராடிப் போராடிக் களைக்கிறான் சாதகன். பின்பு பயிற்சியின் விளைவாக காலப்போக்கில் மனச்செயல்பாடு குவிந்து உக்கிரம் கொள்ளும்போது அதன் விசையால் மனவெளியின் ஆழம் அடியற்ற இருண்ட புலம்போலத் திறந்துகொள்கிறது. அங்கே உக்கிரமான விசையுடன் உள்நோக்கி விரையும் மனத்தை அதே உக்கிர விசையுடன் சிதறடிக்கிறது மனத்தின் பிற பாதியின் நேர் எதிர் விசை. மனம் பொருளற்ற கோடிகோடிப் பிம்பங்களாகவும் தொடர்பற்ற அறிதல்களாகவும் சிதறிப் பரந்து கொந்தளிக்கிறது. அந்நிலையை யோகமரபில் மெய்மையை நோக்கிய பாதையை ஊடறுக்கும் கரிய நதி என்கிறார்கள். தொட்ட விரலை அறுத்தோடும் வேகவதி அது. அந்தர்வாகினியான சரஸ்வதி அதன் குறியீடு. அது அபாயகரமானது. சாதகன், தகுந்த குருவும் நல்ல உடல் மற்றும் உள்ளத் திறனும் உடையவனாக இல்லாவிட்டால், அவன் சிதறி அழிந்துவிடக்கூடும். அது ஒருவகைப் பைத்திய நிலை. பெரும்பாலான சாதகர்கள் அஞ்சி விலகும் இடம் அது. முரட்டுத்தனமாக முயல்பவர்கள் பைத்தியமாகிவிடுவதும் சாதாரணம்.

‘அது மனப்பிளவுக்கு மிகமிக ஒத்துவரும் நிலை. சொல்லப்போனால் அது ஒருவகை மனப்பிளவேதான். யோகமரபை அறியாத ஒரு மருத்துவன் அதை மனப்பிளவுப் பிரமைநிலை [Paranoid Schizophrenia] என்று தீர்மானித்துவிடுவான்...’ என்றார் டாக்டர் தம்பி. ‘காலன் சாமி அந்த நிலையைத் தாண்ட ஒருவழியைக் கண்டுபிடித்தார். கணிசமான மனப்பிளவு நோயாளிகள் தாங்களாகவே அந்தத் தீர்வுக்குச் செல்வதுண்டு. மனப்பிளவை ஆளுமைப்பிளவாக [Dual Personality] மாற்றிக்கொள்ளுதல்...’

‘புரியவில்லை’ என்றேன்.

‘மனப்பிளவு என்றால் என்ன? அதற்கு முதலில் நாம் மனம் என்றால் என்ன என்று புரிந்துகொள்ளவேண்டும். மனம் என்பது ஒரு தொடர் நிகழ்வு. பலவிதமான மூளைச் செயல்பாடுகள் முறைப்படி ஒன்றுடன் ஒன்று இணைந்து செயல்படுவது. மனப்பிளவின்போது மூளையின் பல்வேறு செயல்பாடுகளுக்கு இடையேயான ஒத்திசைவு இல்லாமலாகிறது. புலனறிதல்கள் ஒன்றோடொன்று இணைவதில்லை. தர்க்கமனமும் உணர்ச்சிமனமும் பரஸ்பர இசைவை இழக்கின்றன. கற்பனையும் யதார்த்தமும் பொருந்துவதில்லை. நோயாளிக்கு, இல்லாத குரல்கள் கேட்கும். கற்பனைகள் உண்மையாக நிகழும். இட கால உணர்வு குழம்பும். தன்னை இன்னொரு இடத்தில் இன்னொருவனாக உணரக் கூடும். தன்னை வேறொருவராக நோக்கக் கூடும். இந்தப் பிரமைகளுக்கு எதிராக அவன் மனம் போராடும். இதன் விளைவான மூளைக் கொந்தளிப்பே, சுருக்கமாகச் சொன்னால் மனப்பிளவு நோய்.’

டாக்டர் தம்பி தொடர்ந்தார். ‘மனப்பிளவு என்பது மிக மிகக் கொடுமையான ஒரு நிலை. டோபாமின் கொப்பளிப்பினால் மூளையின் திறன் பலமடங்கு அதிகரிக்கிறது. ஆனால் அந்த வல்லமை முழுக்கப் பலதிசைகளிலாகச் சிதறிப் பரவுகிறது. அந்த வலியைத் தாங்கும்பொருட்டு நோயாளி தன் மனத்தை சில சமயம் இரண்டாகப் பகுத்துக்கொள்கிறான். தன்னை இரு ஆளுமைகளாக அவன் பிரித்துக்கொள்ளும்போது அவன் மனத்துக்குள் பல கூறுகளுக்குள் நிகழும் உள்போராட்டம் இல்லாமலாகிறது. அது ஒருவகையான விடுதலை. யோக

சாதனையின் மனப்பிளவுக் கட்டத்தை வெல்ல காலன்சாமி இயல்பாகக் கண்டடைந்த முறை அதுதான்...'

காலன்சாமி தன்னை சுக்லன் (வெண்ணிறமானவன்) என்றும் சியாமன் (கருமையானவன்) என்றும் இரண்டு தனிநபர்களாகப் பகுத்தார். வளர்நிலவுக் காலகட்டத்தில் அவர் சுக்லன். தேய்நிலவில் சியாமன். சுக்லன் முன்னகரும் சக்தி. சத்வ குணம் மட்டுமே கொண்டவன். அனைத்து வகையான நன்மைகளுக்கும் உறைவிடமானவன். சியாமன் நிலைச்சக்தி. தமோகுணமும் ரஜோகுணமும் கொண்டவன். காமம் குரோதம் மோகம் என்னும் முக்குணங்களும் நிறைந்தவன். அப்பகுப்பை நிகழ்த்தி அதைப் பயின்று முழுமை செய்யும்தோறும் உக்கிரமான விளைவுகள் உருவாவதை அவர் கண்டார். சியாமனுக்கு எந்தவகையான சிதறலும் இல்லாமல் தியானம் கைகூடியது. வெறும்வெளியில் ஒளிபோல அவன் மனம் முடிவின்மைநோக்கிப் பாய்ந்து சென்றது. அதையே ஒரு யோகமுறையாக ஆக்கினார் காலன்சாமி. அதற்கு துவாத்ம முறை என்று பெயரிட்டார். அவரது முறை ஒரு சமூகமாக மாறியது. ஒரு மதமாக வளர்ச்சி காண முனைந்தது.

'மனப்பிளவை ஒரு பயிற்சியாக முறைப்படுத்தி ஆற்றினர் துவாத்மர்கள். செயற்கையான முறையில் மூளையில் டோபாமினை உயர்த்த சக்ரமூலி பயன்படுத்தப்பட்டது' என்றார் டாக்டர். 'துவாத்மர்கள் பதினைந்து நாள் சுக்லர்கள். மீதிப் பதினைந்து நாள் சியாமர்கள். சுக்லர்களாக இருக்கும்போது அவர்களின் தியான சக்தியைத் தடுக்கும் எந்த அம்சமும் அவர்களிடம் இருக்கவில்லை. அதேபோல சியாமர்களாக இருக்கும்போது அவர்களுக்குள் கொந்தளித்த காமத்தையும் வன்முறையையும் கட்டுப்படுத்தும் எந்த விஷயமும் இருக்கவில்லை. மனிதனின் தீமை நாட்டத்துக்கு எல்லையே இல்லை. அவன் போகக்கூடிய தூரம் முடிவின்மைக்கும் அப்பால். அதை நிரூபித்தனர் துவாத்மர்கள்...'

என்னால் மூச்சை நிதானமாக விட முடியவில்லை. நெஞ்சுக்குள் ஒரு கனம் அழுத்தியது. 'நல்லவேளை... அந்த மதம் உலகில் வேரூன்றியிருந்தால்..' என்றேன்.

சட்டென்று தம்பி விசித்திரமான ஆவேசத்துடன் பேச ஆரம்பித்தார். '...இதோ பார், ஓர் உளவியலாளனாக நான் ஒரு விஷயத்தைத் திட்டவட்டமாகச் சொல்வேன். எல்லா மதங்களும் அடிப்படையில் ஒரு மனப்பிளவுத் தன்மை கொண்டவைதான். அதிலும் குறிப்பாக நம்பிக்கையை முதன்மைப்படுத்தும் மதங்கள் தங்கள் விசுவாசிகளைக் கிட்டத்தட்ட மனப்பிளவு நோயாளிகளாகவே ஆக்குகின்றன. ஆனால் அது குறியீடுகள் மூலம் எல்லையிட்டுக் கட்டுப்படுத்தப்பட்ட மனப்பிளவு... நமது தெய்வங்களைப் பார்! ஒரு கையில் ஆயுதம், மறுகையில் அபய முத்திரை. ஆம், அன்பையும் கருணையையும் போதிக்காத மதம் உலகில் இல்லை. அதேசமயம் லட்சக்கணக்கில் உயிர்ப்பலி வாங்காத மதமும் எதுவும் இல்லை. ஒரு மதநம்பிக்கையாளன் கண்டிப்பாக ஆளுமைப்பிளவின் கூறுகளைக் கொண்டிருப்பான். ஒரு பக்கம் அன்பாலும் மறுபக்கம் வெறுப்பாலும் அவன் ததும்பிக் கொண்டிருப்பான்... மதம் அவனை இரண்டாக உடைக்கும். ஒரு பகுதியை மதத்தின் ஒளிமிக்க பக்கம் எடுத்துக்கொள்ளும்... இன்னொன்றை இருள்மிக்க பக்கம். மதவிசுவாசி இடைவிடாது தன்னுடைய இரட்டைநிலையை அஞ்சுவான்... அதைத் தன்னிடமிருந்தே மறைக்க வேடம் போடுவான். உக்கிரமாக ஓயாமல் பிரார்த்தனை செய்வான்... கடுமையான நோன்புகள் மூலமும் பயங்கரச் சடங்குகள் மூலமும் தன்னை தண்டித்துக் கொள்வான். ஒரு தருணத்தில் எக்களிப்பின் உச்சத்தில் இருப்பான். மறுகணம் சோர்விலும் தன்னிரக்கத்திலும் உழல்வான்... அவனுக்குச் சமநிலையே இருக்காது... தீவிர மதநம்பிக்கையாளனுக்கும் மனநோயாளிக்கும் ஒரேவிதமான உளவியல் நடத்தைகள்தான் இருக்கும். நீ அதைக் கவனித்திருக்கலாம்...'

தம்பியின் ஆவேசம் எனக்கு வியப்பை அளித்தது. விழித்து வாய்திறந்து கேட்டிருந்தேன். 'துவாத்மர்கள் தங்கள் மதத்தை அன்றாட வாழ்க்கையில் இருந்து பிரித்துக்கொண்டதுதான் தவறாகப் போயிற்று... அவர்களின் காலகட்டமும் தவறு. ஆகவே அவர்களால் வேகமாகப்

பரவ முடியவில்லை. யோசித்துப் பார், அவர்கள் மத்திய காலகட்டத்தில் வாழ்ந்து தங்கள் மிருக வலிமை மூலம் ஒரு சில நாடுகளை வென்றிருந்தால் இன்று அவர்களுக்கும் லட்சக்கணக்கில் கோடிக்கணக்கில் விசுவாசிகள் இருந்திருப்பார்கள். அந்நிலையில் அவர்களை எளிதில் முழுக்க அழித்துவிட முடியாது. ஆகவே உலகம் அவர்களை ஏதோ ஒருவகையில் ஏற்றுக்கொள்ளவும் அவர்களுடன் சேர்ந்துவாழவும் பழகியிருக்கும். அதற்கான வழிமுறைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும். கோட்பாடுகள் உருவாக்கப்பட்டிருக்கும். உலகத்தை அந்த மதம் புற்றுநோய்க்கட்டி போல அழித்துக்கொண்டிருந்தாலும் அதை ஒன்றும் செய்ய முடியாது...'

நான் ஒன்றும் சொல்லவில்லை. என் மனம் அச்சொற்களால் அச்சம் கொண்டிருந்தது. இல்லை, பிரமித்துச் செயலற்றிருந்தது. தம்பியின் முகத்தில் தெரிந்த கோப வெறியை அர்த்தமின்றி பார்த்துக்கொண்டிருந்தேன்.

வெகுநேரம் கழித்தே என் மனதில் அடுத்த கேள்வி எழுந்தது. 'ஆனால் துவாத்ம மடத்தில் ஒரே ஒரு சுக்லர்தான் இருந்தார் என்று கேப்டனின் குறிப்புகள் சொல்கின்றனவே... பிறர் எங்கே?'

'அது ஊகிக்கக்கூடியதுதான். என் தாத்தாவின் குறிப்புகளில் அதற்கான சில அடையாளக்கூறுகள் உள்ளன. துவாத்ம மடத்தில் மெல்ல மெல்ல சியாமர்களின் கை ஓங்கியது. அவர்கள் தங்கள் கால அளவைத் தாண்டியும் சியாமர்களாக நீடித்தார்கள். கட்டுப்படுத்தும் சக்தி ஏதுமில்லாததனால் அவர்களின் வளர்ச்சி மேலும் மேலும் தீவிரமடைந்தது. மறுபக்கம் சுக்லர்கள் வலிமை இழந்தார்கள். நல்லியல்பு என்பது தீய இயல்பைக் கட்டுப்படுத்துவதன் மூலமே செயல்பட முடியும். அப்படிக் கட்டுப்படுத்த தீய இயல்பு இல்லாத தூய நிலையில் நல்லியல்பு செயல்பாடு இல்லாமல் தேங்கி இல்லாமலாகிறது... அப்படித்தான் இருக்க இயலும். நன்மை என்பது என்ன? கொல்லாமை, பிறன்மனை விழையாமை, திருடாமை, தீநெறி செல்லாமை - எல்லாமே எதிர்மறையானவை. தீமையை எதிர்ப்பதே நன்மை. தீமை இல்லாத இடத்தில் நன்மை என்பதே இல்லை... ஒரு கட்டத்தில் துவாத்ம மடத்தில் ஒரே ஒரு சுக்லர்தான் எஞ்சினார். அவர்தான் நரபாகர்...'

'அப்படியானால் காமமும் குரூரமும்தான் மனிதனின் இயல்பான நிலைகளா?' என்றேன்.

'ஃப்ராய்டிலிருந்து தொடங்கும் மேலைநாட்டு உளவியல் அப்படித்தான் சொல்கிறது. பதினெட்டு வருட மனமருத்துவ அனுபவம் அதைத்தான் எனக்குப் புரியவைத்தது...' என்றார் தம்பி. 'என் ஆய்விலும் அனுபவத்திலும் நான் உறுதியாக அறிந்த முடிவு ஒன்றுதான். மனிதனின் மன அமைப்பைத் தீர்மானிப்பவையாக இன்று உள்ள பெரும் சக்திகள் மதங்களே. மனிதகுலம் இன்றுவரை தேடியடைந்த தத்துவம், கலைகள், குறியீடுகள் எல்லாமே மதங்களின் வடிவில்தான் தொகுக்கப்பட்டுள்ளன. மனிதமனம் இன்று சுதந்தரமாக இல்லை. நம்மைச் சுற்றியுள்ள மனித மனங்கள் அனைத்துமே அபாயகரமான அளவுக்கு மனப்பிளவுக் கூறு கொண்டவை. ஒருவேளை ஆதிவாசிகள், மிக எளிய விவசாயிகள், மந்தபுத்தி கொண்டவர்கள் விதிவிலக்காக இருக்கலாம். ஆமாம், இங்கு எவருமே மகிழ்ச்சியாக இல்லை. பலவிதமான உளச் சிக்கல்கள், உள மோதல்கள், ஆளுமைத் திரிபுகள். அதன் விளைவான பூசல்கள், பகைமைகள், வன்முறைகள். நம் வாழ்க்கைச் சூழல் வன்முறை மிகுந்ததாக மாறியபடியே வருவதை நீ கவனித்திருக்கலாம். எந்த அளவுக்கு நாம் கல்வியும் நாகரிகமும் அடைகிறோமோ அந்த அளவுக்கு மனப்பிளவு அதிகரிக்கிறது. ஆம், நாம் இன்று வாழும் இது, உண்மையில் ஒரு மாபெரும் மனப்பிளவுச் சமூகம்தான்...'

'ஆம்' என்றேன். என்னால் வாதாட இயலவில்லை.

'மதங்களின் பிடியிலிருந்து மனிதனை விடுவிக்காதவரை அவனுக்கு மீட்பு இல்லை. மதம் மனிதனுள் வாழும் விஷம்...' என்று தம்பி சொன்னார். 'இங்கு நாத்திகனும் பகுத்தறிவாளனும் கூட மதத்துக்குள்தான் வாழ்கிறார்கள். மதத்தை வெறுமே அறிவுபூர்வமாக நிராகரிப்பதனால்

ஒருவன் மதத்தைத் துறக்க முடியாது. அதற்கு முறையான படிப்படியான உளப்பயிற்சி பெறவேண்டும். மதம் உருவாக்கிய ஆழ்மனப் படிமங்களில் இருந்தும் அக நம்பிக்கைகளில் இருந்தும் விடுதலை பெறவேண்டும். 1979-ல் நான் உருவாக்கிய 'ஆதார உளவியல் பயிற்சி மையம்' அதற்கான பயிற்சியை அளிக்கும் அமைப்பு. தைக்காடு-நெடுமங்காடு சாலையில் தலைமை அலுவலகமும் பயிற்சிப் பள்ளியும் இருக்கிறது. இப்போது எங்களிடம் கிட்டத்தட்ட நாலாயிரம்பேர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். எழுபது பேர் அங்கே நிரந்தரமாகப் பயிற்சி கொடுப்பவர்களாக இருக்கிறார்கள்...'

தம்பி ஒரு புத்தகத்தையும் சில துண்டுப் பிரசுரங்களையும் தந்தார் 'ஓய்வாகப் படித்துப் பார். ஒருநாள் தலைமை நிலையத்துக்கு வா... எல்லாவற்றையும் பார்க்கலாம். இப்போது நாங்கள் ஒரு சின்ன அமைப்பாக இருக்கலாம். ஆனால் வரப்போகும் அறிவியல் யுகத்துக்கு உரிய மாதிரி மனிதர்களை இங்கே உருவாக்குகிறோம். இவர்களில் இருந்து ஒரு புதிய யுகம் மலரப் போகிறது...'

'நீங்கள் என்ன பயிற்சி கொடுக்கிறிர்கள் அப்படி?'

'இது ஒருவகை கூட்டு உளப்பயிற்சி. பலவிதமான நவீன மின்னணுக் கருவிகளைப் பயன்படுத்துகிறோம். இருபது வருடங்களாக நாங்கள் படிப்படியாக வளர்த்து எடுத்த அறிவியல்பூர்வமான பயிற்சிமுறை இது. வெற்றிகரமானதாக ஐயத்துக்கு இடமில்லாமல் நிரூபிக்கப்பட்டது. முதலில் மதம்சார்ந்த அனைத்தையும் தெளிவாக அடையாளப்படுத்துகிறோம்... நம்பிக்கைகள், சிந்தனைகள், கலை, இலக்கியம், அன்றாட வாழ்க்கை அனைத்திலிருந்தும் அவற்றைப் பிரித்துக்கொள்கிறோம். பிறகு அவற்றுக்கு நேர் எதிராக நகர்வதற்கும் அந்நிலையில் இயல்பாகச் செயல்படுவதற்கும் மனத்தைப் பயிற்றுவிக்கிறோம். இப்படிச் சொல்கிறேனே.. நாம் மதத்தை நம் பிரக்ஞையில் இருந்து எளிதில் அகற்றிவிடலாம். ஆனால் அதை நனவிலியில் இருந்து அகற்றமுடியாது. நனவிலி, மதத்தாலேயே கட்டப்பட்ட ஒன்று. இங்கே நாங்கள் படிப்படியாக நமக்குள் சிறுவயதுமுதல் உருவாகியுள்ள நனவிலியை அகற்றி புது நனவிலியைக் கட்டியெழுப்பிக் கொள்கிறோம்.'

நான் திடீரென்று ஓர் ஐயத்தை அடைந்தேன். 'டாக்டர், நீங்கள் இதில் சக்ரமூலியை பயன்படுத்துகிறீர்களா?'

'ஆமாம். இந்தப் பயிற்சிக்கு அன்றாடத் தேவையைவிட பலமடங்கு அதிகமான உளச்சக்தி தேவை. சக்ரமூலி டோபாமினை ஊற்றெடுக்கச் செய்கிறது. நாங்கள் அதைக் கட்டுப்படுத்துவதில் முழுவெற்றி அடைந்திருக்கிறோம்... எல்லாவற்றையும் நீயே நேரில் வந்து பார்க்கலாம்.'

நான் பதற்றம் நிரம்பியவனாக அவரிடம் விடைபெற்றேன். பேருந்தில் வரும் வழி எங்கும் எனக்குத் தூக்கித் தூக்கிப் போட்டது. நான் தைக்காட்டுக்குச் செல்லவில்லை.

என் மனம் அஞ்சியது சரிதான். ஒருவருடம் கழித்து டாக்டர் தம்பியின் 'ஆதார உளவியல் பயிற்சி மைய'த்துக்குள் ஆயுதப் போலீஸ் புகுந்தது.

7. நம்பிக்கையாளன்

திடீரென்று ரேடியோ கிர்ர் என்றது. அறைக்குள் இருந்த ஆழ்ந்த அமைதியை அது கிழிக்க அத்தனை பேரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தனர். இளைஞன் தகாதது செய்ததுபோன்ற சிறு உடற்குன்றலுடன் அதை நிறுத்தினான்.

'இறைமறுப்பாளர்களின் கருவி' என்றார் குழுத்தலைவர் வெறுப்புடன். 'அது இறையடியார்களுக்கு ஒருபோதும் உரிய காலத்தில் உதவியது இல்லை.'

'சாத்தானின் நாக்கு!' என்றார் இன்னொருவர்.

'ஆனால் இப்போது நமக்கு வேறுவழியில்லை. வெளியுலகத் தொடர்புக்கு இதுமட்டும்தன் இருக்கிறது.' இளைஞன் திடம் பெற்று மெல்லச் சொன்னான். அதை அவன் மீண்டும் மீட்டினான். வெறும் ஒலி மட்டும்தான் கேட்டது.

'இந்த ஒலியைக் கேட்டு சொர்க்கத்துக்கா போகப் போகிறாய்?' என்றார் ஒருவர். பிறர் புன்னகை செய்தனர்.

சாலமோன் காலத்தையது என்று நம்பப்பட்ட குகை. பாலைவன நடுவே மணற்பாறையில் குடையப்பட்டது. வெளியே எரிந்த கடுமையான பாலைவன வெப்பம் உள்ளே வருவதில்லை. போர்க்கொத்தளமாக ஆக்கப்பட்டபிறகு கனத்த வெளிச்சுவர்களும் இரும்பு கான்கிரீட் கதவுகளும் பொருத்தப்பட்டு நன்றாக மூடப்பட்டது. உள்ளே அறைகளில் ஏராளமான ஆயுதங்கள், வெடிபொருட்கள், பல வருடங்களுக்குப் போதுமான பாதுகாக்கப்பட்ட உணவு, குடிநீர். அது மெய்யிறைப் போராளிகளின் முக்கியமான மறைவிடங்களுள் ஒன்று. அங்கிருந்த ஒன்பதுபேரும், ஒரு முதிய மதகுரு உட்பட, தேர்ச்சிபெற்ற போர்வீரர்கள். பத்து வருடங்களுக்கும் மேலாக நடந்துவந்த உலகப்போரில் ஒவ்வொரு நாளும் ஈடுபட்டவர்கள்.

ரேடியோ சட்டென்று மசாகி மொழியில் குழற ஆரம்பித்தது. அனைவரும் அதைச் சூழ்ந்தனர். சொற்கள் ஆங்கங்கே சிதைந்து உரு இழந்திருந்தன. உலோக ஒலி கொண்ட குரல்.

'எல்லையற்ற கருணை கொண்ட இறைவனின் திருப்பெயரால் வாழ்த்துகிறோம். முழுமுதல் நாயகன் நாமம் வாழ்க! அவன் அடியார் வெல்க!' குரல் உணர்ச்சிப் பெருக்குடன் கூவியது.. 'நாம் தோற்கவில்லை. நாம் இன்னமும் எஞ்சுகிறோம். எவராலும் வெல்லமுடியாத நம் போராளிகள் பல இடங்களில் பதுங்கியிருக்கிறார்கள். இறையருள் நம்முடன் இருக்கையில் நாம் எவராலும் வெல்லப்பட முடியாதவர்கள். இறுதி வெற்றிக்குரியவர்கள் நாமே... மெய்யிறை மார்க்கம் தோற்க இயலாது. அவர்களுக்கு வெற்றி இறைவனால் ஆணையிடப்பட்டுள்ளது...'

குகையறைக்குள் முழங்கிய உரத்த குரல்களில் அவர்கள் தங்கள் வாழ்த்தொலியையும் போர்க்குரலையும் எழுப்பினர்.

'நல்ல சேதி!' என்றார் தலைவர், பெருமூச்சுடன். 'நாம் காத்திருப்போம்...'

'ஆம். நாம் வெல்வோம்' என்றார் இன்னொருவர்.

'ஆனால் வெளியே என்ன நடக்கிறதென்று தெரியவில்லையே..' இளைஞன் சொன்னான்.

'பொறு கேட்போம்.'

வெகுநேரம் போர்க்குரல்களே ஒலித்தன. 'நாம் ஆங்கிலத்தில் ஏதேனும் செய்தி உள்ளதா என்று பார்க்கலாம்' என்றான் இளைஞன்.

'வாயை மூடு!' என்றார் தலைவர். 'அவர்கள் கக்கும் பொய்களை நாம் ஏன் கேட்கவேண்டும். இறைவன் அங்கீகரித்த ஒரே மொழியான மசாகி அல்லாத அனைத்துமே பொய் மொழிகள்தான்...'

இளைஞன் ஒன்றும் சொல்லவில்லை. ரேடியோவையே பார்த்துக்கொண்டிருந்தான். ஒருவர் ரொட்டி பரிமாறினார். அவர்கள் மௌனமாக உண்டனர். மெல்லும் ஒலி மட்டும் கேட்டது.

மீண்டும் இயக்கப்பட்டபோது ரேடியோ ஒலி மாறுபட்டது. மெய்யிறைப் போராளிகளின் தலைமை நிலைய அறிவிப்பு என்று குரல் எழுந்தது. பிறகு அவரது மெல்லிய இனிய குரல் ஒலித்தது.

'ஒரே இறைவனின் திருப்பெயரை வாழ்த்துவோம். அவனது அளவிலாக் கருணையும் எல்லையற்ற வல்லமையும் நமக்குத் துணையிருக்கும். அனைவருக்கும் குதா-அலா-சமீஷ் போராளிகள் அமைப்பின் வாழ்த்துகள். நாம் மிக மிகச் சிக்கலான நிலையில் இருக்கிறோம். நமது போர் முக்கியமான திருப்புமுனையை அடைந்துள்ளது. இறைமறுப்பாளர்களான பொருள்வெறிகொண்ட அற்பர்கள் நம் மீது சாத்தானின் மகத்தான ஆயுதத்தால் தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். இதுவரை இருபது ஹைட்ரஜன் குண்டுகள் வெடிக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. இப்பூமியின் மையமான புனித சா-உம்-துல்மீது நடந்த தாக்குதலில் அப்பகுதியே முழுமையாக அழிந்தது என்று தகவல்கள் சொல்கின்றன. இறைநம்பிக்கையாளர்களின் நாடுகள் அனைத்தும் குறிவைத்துத் தாக்கப்பட்டுள்ளன. அங்குள்ள மக்கள் ஏறத்தாழ அனைவருமே முழுமையாக அழிக்கப்பட்டிருக்கலாம் என்று தெரிகிறது. பெரும் புகைப்படலத்தால் பூமி முழுமையாக மூடப்பட்டுள்ளது. தூசியாலான வானளாவிய நாய்க்குடைக் கோபுரங்கள் மட்டுமே எங்கும் தெரிகின்றன. வானம் இளஞ்சிவப்பு நிறமாகவும் கருமை கொண்டும் காணப்படுகிறது. நாள்கள் இருண்டு விடியவில்லை. பாதுகாப்பு அறைகளுக்குள் எஞ்சிய சிலர் மட்டுமே பிழைத்திருக்கிறோம். நமது கடமை என்ன, பெருங்கருணையாளனாகிய இறைவன் நம்மிடம் எதிர்பார்ப்பதென்ன என்று தெரியவில்லை. நாம் அவன் சொற்களுக்காகக் காத்திருப்போம்... இந்தப் போருக்கு ஒரே முடிவுதான். நம் இறைவனின் ஆட்சி உலகில் நிறுவப்படுதல். இப்பூமியை அவன் ஆகத்-சும்-ஆவ் ஆக மாற்றுதல். இந்தப் போருக்கு ஒரே ஒரு முடிவுதான் இருக்க இயலும். இறையாட்சி வருகை. இறைநம்பிக்கையாளர்கள் முழுவெற்றி அடைந்து இறைமறுப்பாளர்களை முற்றிலும் அழித்தல். இறைவனுக்கான போரில் சமரசமே பெரும் பாவம் என்று நம் புனித மறை அறைகூவுகிறது. ஆகவே நாம் தோற்கமாட்டோம். நாம் அடங்க மாட்டோம். நாம் இன்னும் இன்னும் இன்னும் போராடுவோம்... ஆம் தோழர்களே, நமக்கு இன்னும் போர் முடியவில்லை. காத்திருப்போம்...'

ஒலி தேய்ந்தது.

பெருமூச்சுகளுடன் அனைவரும் தொய்ந்தனர்.

'அப்படியானால் உண்மைதான். புனித சா-உம்-துல் அழிந்தது. சாத்தானின் ஏவலாட்கள் அதைச் சாதித்துவிட்டனர்...'

'அதை நம் புனித மறைநூல் தெளிவாகவே முன்கூட்டிச் சொல்லியிருகிறது' என்றார் முதிய மதகுரு. அவர் குரல் நிதானமாகவே இருந்தது. '...நாற்பத்தியெட்டாம் அத்தியாயம் முழுக்க பூமியின் அழிவைப் பற்றி விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. கைசாமத் ஃபலவா என்றால் இறுதி நாளின் அடையாளம். பத்து முக்கிய அடையாளங்கள் தென்படும் என்று புனிதமறை சொல்கிறது. முன்னோடிகளான மூன்று தீர்க்கதரிசிகள் விண்ணிலிருந்து மண்ணுக்குத் திரும்புவார்கள். ஒரே மாதத்தில் மூன்று சந்திரக் கிரகணங்கள் தோன்றும்... ஒன்று மேற்கில்,

ஒன்று கிழக்கில், ஒன்று புனித சா-உம்-துல் மீது...' கிழவர் சொன்னார். '...அதை நாம் கண்களால் கண்டோம் நம்பிக்கையாளர்களே. சென்ற மாதம் சந்திரன் இருண்டு மறைவதை நானே இருமுறை கண்டேன்...'

'ஆமாம்... ஆமாம்...' குரல்கள் ஒலித்தன. 'இறைவனுக்கு மகிமை! புனிதநூலுக்கு மகிமை!'

இளைஞன் மெல்லிய குரலில், 'அது அவர்களின் பெரும் வேவுகோள்கள் உருவாக்கிய நிழல் மறைப்பு...' என்றான்.

'எப்படியானாலும் நாம் கண்டது கிரகணம்தானே?' தலைவர் கேட்டார்.

இளைஞன் பெருமூச்சு விட்டான்.

'இப்படிச் சொல்லப்பட்டுள்ளது... அதன் பிறகு இனிய சொற்கள் பேசும் கொடூரமான மன்னன் ஒருவன் பெரும்படையுடன் கிளம்பி நம் சா-உம்-துல் மீது படையெடுப்பான். அவனுக்குத் துணையாக நரகத்திலிருந்து ஊறிவரும் கருநீலப்புகை ஒன்று பூமிமீது பரவும். அப்புகையை ஆயுதமாகக் கொண்டு அவன் இறைநம்பிக்கையாளர்களை முழுமையாகத் தோற்கடிப்பான்... அதன்பின் புனித சா-உம்-துல் அழிக்கப்படும்...'

'இப்போது நடந்திருப்பது அதுதான்' என்றார் தலைவர். 'பெரும் புகை!'

மதகுரு தொடர்ந்தார். '...இனி நடப்பதும் சொல்லப்பட்டுள்ளது. புனித சா-உம்-துல் அழிந்ததும் பூமிமீது கற்பூர மணம் ஒன்று பரவும். பட்டுச்சல்லா போன்ற இனிய குளிருள்ள ஓர் அலையாக அது வீசும். அது கடும் விஷத்தின் அலை. இறைநம்பிக்கையாளர்கள் ஒருவர்கூட எஞ்சாமல் அதில் அழிவார்கள். நம் இறைவனின் பெயரைச் சொல்ல ஒருவர்கூட எஞ்சமாட்டார்கள். கடைசி இறைநம்பிக்கையாளன் அழிந்ததும் இப்பூமி முற்றிலுமாக இறைமறுப்பாளர்களால் ஆனதாக ஆகிவிடும். உடனே இறைமன்னிப்பின் வாசல் மூடிவிடும். அதன்பிறகு கொள்ளும் இறைநம்பிக்கையால் எந்தவிதமான பயனும் இருக்காது. மறுநாள் தொடங்கி நூற்றிஇருபது நாள் சூரியன் உதிக்காது. எங்கும் அரை இருளே சூழ்ந்திருக்கும். இறைமறுப்பாளர் தங்கள் அறிவால் அதை வெல்ல முயல்வார்கள். அதில் அவர்கள் தோல்வி அடைவார்கள். அவர்கள் செய்வதறியாது விழிப்பார்கள். அப்போது மண்ணுக்குமேல் உள்ள கிசாபத் அம்னா என்ற நரகத்திலிருந்து கொடும் சாபம் ஒன்று பூமிமீது விழும். மண்ணுக்கு அடியில் உள்ள சமாபத் அம்னா என்ற நரகத்திலிருந்து இன்னொரு பெரும்சாபம் மக்கள் மீது எழும். அப்போது எல்லா உலக நியதிகளும் நிலைமாறும். ஒட்டகங்களுக்குப் பைத்தியம் பிடிக்கும். ஆறுகளில் நெருப்பு ஓடும். கடல்கள் எல்லைகளை இழக்கும்.' மதகுரு மெல்லிய குரலில் அவ்வரிகளைப் பாடினார்.

'பின்பு கிழக்குத் திசையிலிருந்து கடுமையான சுவாலை கொண்ட நெருப்பு அலையலையாகக் கிளம்பிவந்து உலகை மூடும். அது இப்பூமியின் எஞ்சியுள்ள அனைத்தையும் முற்றாக அழிக்கும். ஒரு உயிர்கூட மிஞ்சாது. அதன்பிறகு சொர்க்கத்தின் வாசல்கள் திறக்கும். நம் இறுதி இறைத்தூதர் தன் நீதியின் உருவிய உடைவாளுடன் மீண்டும் கிளம்பிவருவார். அன்று கல்லறைகள் திறக்கும். இறந்த அனைவரும் எழுவார்கள். அவர்முன் தங்கள் பாவ புண்ணியங்களுடன் அனைத்து மக்களும் நிற்பார்கள். நம் அருமறை இறுதிநிற்றல் என இதை விளக்குகிறது தோழர்களே. நாம் தேடியவை நமக்களிக்கப்படும். பாவங்களைத் தேடியவன் நரக நெருப்பை அடைவான். நற்செயல்களைத் தேடியவன் சொர்க்கத்தை அடைவான். கூலி இல்லாத செயல் என்று இப்பூமியில் ஏதுமில்லை என்கிறது புனித மறை.'

அறைக்குள் அனைவரும் கைகளை மேலே தூக்கி இறைவனை நோக்கி அடைக்கலம் கோரிக் கூவினார்கள்.

மதகுரு கண்மூடி தியானத்தில் ஆழ்ந்தார்.

இளைஞன் மெல்ல ரேடியோவைத் தூண்டினான். அது கரகரவென ஒலித்தபடியே இருந்தது.

‘ஏன் அப்படிக் கத்துகிறது சைத்தானின் பெட்டி?’

‘வானமெங்கும் கதிர்வீச்சு இருக்கிறது’ என்றான் இளைஞன்.

ரேடியோ மெல்ல உயிர்பெற்றது. ஆங்கிலக்குரல் குழறிக் குழறிப் பேசியது ‘ஆம், உலகம் முழுக்க வாழும் மக்களுக்கு இது கடுமையான துயரத்தை அளிக்கக்கூடும் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் ஜனநாயகத்துக்காகவும் மனித உரிமைக்காகவும் சமத்துவத்துக்காகவும் போராடும் மனிதாபிமானச் சக்திகளுக்கு வேறு வழியே இருக்கவில்லை. வல்லமைமிகுந்த நூறு அணுகுண்டுகள் ஏவுகணைகளில் பொருத்தப்பட்டு நம் முக்கிய நகரங்களை நோக்கி ஏவப்படவுள்ளன என்று ஒருங்கிணைந்த பாதுகாப்பமைப்பின் துணைக்கோள் உளவுக் கருவிகள் அடையாளம் கண்டன. அந்த ஏவுகணைகள் கிளம்பியதை உணர்ந்த பிறகே நமது தானியங்கிக் கருவிகள் நமது ஏவுகணைகளைக் கிளம்பச் செய்தன. ஜனநாயகப் பாதுகாப்புக் கூட்டுப்படைகளின் அதிகாரப்பூர்வ அறிவிப்பின்படி பதினேழு உயரழுத்த, மிதக்கதிர்வீச்சு ஹைட்ரஜன் குண்டுகள் வெடிக்கப்பட்டுள்ளன. பேரழிவுகளை உருவாக்கியபடி பத்தாண்டுகளுக்கும் மேலாக நடந்துவந்த மிகக் கொடுமையான போர் இத்தாக்குதலுடன் முழுமையான முடிவுக்கு வந்தது. எதிரிநிலைகள் அனைத்தும் முழுமையாக அழிக்கப்பட்டுவிட்டன. அவர்கள் தரப்பில் போரில் ஈடுபட்ட தேசங்கள் அனைத்துமே அழிக்கப்பட்டுவிட்டன. கடந்த பத்தாண்டுகளாகக் கடுமையான உயிரிழப்பையும் அழிவையும் உருவாக்கிவந்த மாபெரும் உலகப்போர் முடிவுக்கு வந்ததன்மூலம் மீண்டும் சமாதான சகவாழ்வுக்கு வழி பிறந்திருப்பதாகவும் இது ஆறுதலுக்குரிய விஷயம் என்றும் கூட்டு நடவடிக்கைத் தலைவர் குறிப்பிட்டார்…’

‘முட்டாள்கள். இறைவனுடன் அவர்கள் போர் செய்கிறார்கள். அழிவுதான் அவர்களுக்கு…’ - தலைவர் சொன்னார்.

‘இறைவனுக்கு எதிரானவர்களுக்கு ஒருபோதும் வெற்றியும் அமைதியும் இன்பமும் சுவர்க்கமும் இல்லை என்று புனித நூல் சொல்கிறது.’- முதிய மதகுரு சொன்னார்.

ரேடியோவில் எச்சரிக்கைக்கான கருவி மீண்டும் ஒலித்தது. ‘அறிவிப்பு! எச்சரிக்கை! உலகம் முழுக்க உள்ள மக்களுக்குக் கதிரியக்க எச்சரிக்கை. மரணத்தையும் பிற கடுமையான உடற் சீரழிவுகளையும் உருவாக்கும் கதிரியக்கம் உலகம் முழுக்க பரவியுள்ளது. ஏறத்தாழ பதினைந்து நாள்களுக்கு இக்கதிரியக்கம் அபாயகரமாக இருக்கக்கூடும். ஆகவே பாதுகாப்பறைகளில் வாழும் அனைவரும் உள்ளேயே வாழும்படிக் கோரப்படுகிறார்கள். நிலத்தடி நீரை மட்டுமே அருந்தவேண்டும். வெளியுலகக் காற்று நேரடியாக சுவாசிக்கப்படலாகாது. வெளியில் உள்ள எப்பொருளும் தீண்டப்படக்கூடாது. வெளியே உள்ள விளைபொருள்கள் முற்றாகத் தவிர்க்கப்படவேண்டும். உலகின் பல்வேறு நாடுகளில் பாதுகாப்பற்ற வெளிகளில் வாழ்ந்த மக்கள் அழிந்துவிட்டதாகத் தகவல்கள் வந்துள்ளன. ஆனால் பூமிமீதுள்ள பாக்டீரியங்கள் கதிர்வீச்சால் அழிந்துவிட்டமையால் அவர்களின் உடல்கள் அழுக வாய்ப்பில்லை. பலத்த உயிரிழப்பு நிகழ்ந்துவிட்டது என்பது துயரத்துக்கு உரியதேயாகும். ஆனால் வேறு வழியில்லை. உலகில் முழுமையான சமத்துவ சகவாழ்வும் அமைதியும் நிகழவேண்டுமானால் இந்தச் சூழ்நிலையை நாம் சந்தித்தே தீரவேண்டும்… இது தவிர்க்க முடியாத இழப்பு. சமாதானத்துக்காகவும் எதிர்கால நன்மைக்காகவும் நாம் இந்தத் தியாகத்தைச் செய்தேயாக வேண்டியிருந்தது…’

‘அந்தக் கதிர்வீச்சுக்குக் கற்பூரவாசனை இருக்கிறதா?’ என்றார் மதகுரு. அனைவரும் திடுக்கிட்டனர்.

‘அது மென்பட்டுசல்லா போலக் குளுமையானதாக இருக்கும்… நம் புனித நூல் தவறாகச் சொல்லாது’ என்றார் கிழவர் மீண்டும். ‘அதன் பெயர் ஊகாத். இறைவனின் நன்மூச்சு.’

இளைஞன் பெருமூச்சுடன் ரேடியோவைத் திருப்பினான்.

‘மூடு அதை!’ என்றார் தலைவர். ‘நாம் இறைவனைப் பிரார்த்தனை செய்வோம்…’

அவர்கள் மௌனமாகத் தொழுதனர். பிறகு சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொண்டனர்.

பின்னிரவில் மீண்டும் அவன் ரேடியோவை இயக்கினான். மசாகி மொழியில் ஒரு மதகுருவின் குரல் ஒலித்தது. அவனால் அதை உள்வாங்க முடியவில்லை. பிறகு உலகமொழிகள் அனைத்திலும் அதே அறிவிப்பு மீண்டும் மீண்டும் ஒலித்தது. அதற்குள் அனைவரும் விழித்துக்கொண்டனர். மீண்டும் மசாகி மொழி. ‘புனித மறை சொல்லிய இறுதிநிற்றல் நாள் வந்துவிட்டது. கைசாமத் ஃபலவா! கைசாமத் ஃபலவா! கைசாமத் ஃபலவா! இறைநம்பிக்கையாளர்களே, கற்பூர மணமும் மென்பட்டின் குளுமையும் கொண்ட ஊகாத் வீசுகிறது. கைகளைத் தூக்கி நம் படைத்தவனைத் துதித்தபடி நாம் வெளியே இறங்குவோம். வானை நோக்கி அழைத்து அவன் அருளைக் கோருவோம். இனி நம்பிக்கையாளர்கள் எவருமே எஞ்சலாகாது.’

‘இறைவனுக்கு மகிமை. படைத்தவனே பெரியவன்’ என்று அக்குழு உரக்க வீரிட்டது. ‘கிளம்புங்கள்! கிளம்புங்கள்!’.

இளைஞன் நம்ப முடியாது தவித்தான். ‘இல்லை! இல்லை! இது…’ என்று தடுமாறினான் ‘இருங்கள்! இந்த அறிவிப்பு பொய்யாக இருக்கலாம். சாத்தானின் தூதர்களின் சதியாக இருக்கலாம்…’

‘அப்படி இருந்தாலும் அது அவர்களுக்கு அழிவே!’- மதகுரு சொன்னார். ‘இறைநம்பிக்கையாளர்கள் அனைவரும் அழிந்தால் அதன்பின் இப்பூமி ஒருகணம்கூட எஞ்சாது. அது அருமறையில் சொல்லப்பட்ட அழியா வாக்கு… கிளம்புங்கள்…’

‘நாம் போராடுவோம்… ஆம். நாம் போராடவேண்டியவர்கள். நாம் தற்கொலை செய்யக்கூடாது. நாம் போராடுவோம்…’

‘இதோ பார். திருமறையின் கட்டளைக்குக் கட்டுப்படுவதே நமது போராட்டம். கிளம்பு!’ தலைவர் கிளம்பினார்.

‘முட்டாள்தனம். இது கதிர்வீச்சு. பதினைந்து நாளில் சரியாகிவிடும்…’

‘அப்படியானால் நீ வரவில்லையா?’ என்றார் மதகுரு.

‘இல்லை. முடியாது. இது முட்டாள்தனம்..’

‘உன்னை நாங்கள் தடுக்கவில்லை. எங்களைப் பொருத்தவரை மனித ஆயுதங்களால் நாங்கள் இதுவரை நடத்திய புனிதப்போர் முடிந்துவிட்டது. இறைநம்பிக்கையாளனைப் பொருத்தவரை அவன் வாழ்வின் ஒரே நோக்கம், அவனுக்கு அளிக்கப்பட்டுள்ள ஒரே கடமை, இறைமறுப்பாளர்களுடன் போர்புரிவதே… இனி நம்மால் போராட முடியாது. போரிடாமல் நாம் வாழ்வதிலும் பொருள் இல்லை. ஆகவே இனிமேல் செய்வதற்கு ஒன்றுதான். போரை இறைவனே நேரில் நடத்த விட்டுவிட்டு அவன் முன் சரண் அடைவது… ஆம் வேறு வழி இல்லை. உனக்கும் வேறு வழி இல்லை..’

‘புரியாமல் பேசவேண்டாம்… கதிரியக்கம் சீக்கிரமே முடிந்துவிடும்… சொல்வதைக் கேளுங்கள்…’

‘இப்போது உலகம் முழுக்க இறைநம்பிக்கையாளர்கள் வெளியே இறங்கி ஊகாத் காற்றை அனுபவித்து சொர்க்கத்துக்குச் சென்றுகொண்டிருக்கிறார்கள். இன்னும் சில மணிநேரத்தில் இறைநம்பிக்கையாளர்கள் முழுமையாக அழிந்துவிடுவார்கள்… நீ மட்டும் எஞ்சி என்ன செய்யப்போகிறாய்? ஒருவேளை நீ மட்டும் எஞ்சினால் உனக்காக இறைவனின் தாக்குதல் தாமதிக்கக் கூடும். நீ உயிர்வாழும் காலம்வரை இறைவன் காத்து நிற்கக்கூடும். ஆறு மாதமோ, ஒரு வருடமோ, ஏன் ஐம்பது வருடமோ… அதைத்தான் நீ விரும்புகிறாயா? கருணையற்ற

லாபவெறியர்கள் அதுவரை தாங்கள் அடைந்தவற்றைச் சுகித்து வாழ அனுமதிக்கப் போகிறாயா?'

'இதெல்லாமே பைத்தியக்காரத்தனம். இது ஊகாத் அல்ல. கதிரியக்கம்...'

'நீ சாத்தானின் மொழியைப் பேசுகிறாய்...' என்றார் தலைவர். 'இறைவன் உனக்கு நல்வழி காட்டட்டும். உனக்கு அமைதி உருவாகுக!'

அவர்கள் ஒவ்வொருவராக வெளியே சென்றனர். அவன் அவர்களைத் தடுக்கப் பலவிதமாகக் கூவி அரற்றினான். பின்பு அழுதபடி முகத்தைப் பொத்திச் சுருண்டுப் படுத்துக் கொண்டான். ஒரு கணம் எழுந்து பின்னால் ஓடினால் என்ன என்று தோன்றியது. ஆனால் அவனால் முடியவில்லை. அவனுக்கு அக்கணமே இனிய ஒளிமிக்க வானமும் பசுமை பரவிய பூமியும் அகக்கண்ணில் எழுந்து உள்ளம் விம்மியது. தேம்பித் தேம்பி அழுதான். அப்படியே தூக்கமயக்கத்தில் ஆழ்ந்தான்.

பலவகையான பிரமைகளும் குழம்பிய நினைவுகளும் மனத்தை நிறைக்க அர்த்தமின்றி அரற்றி அழுதபடி அவன் குகையறைக்குள் விழுந்துகிடந்தான். அந்த நெருக்கடியைத் தவிர்க்க விழைந்த அவன் மனம் இனிய பகற்கனவுகளைக் கற்பனை செய்துகொண்டது. மென்மையான வெயில் பரவிய பாலைவனக் காடுகளில் அவனும் எட்டு சகோதரர்களும் தந்தையும் மின்னும் துப்பாக்கியுடன் வேட்டைக்குச் சென்றார்கள். வரையாடுகளைச் சுமந்துகொண்டு ஊர் திரும்பினார்கள். இரவுகளில் ஊரே சேர்ந்தமர்ந்து ஒரே ரொட்டியை நாற்புறமும் பிய்த்து உண்டு ஒரே கோப்பையில் சமாக் குடித்தார்கள். அலாங் பாடலைப் பாடி ஆடினார்கள். அவனுடைய தங்கை தன் இனிய சிறுமுகத்தை வெட்கத்தால் சிவக்க வைத்தபடி அவனிடம் ஏதோ சொன்னாள். அவனது பிரியமான ஒட்டகம் துலீன் தாடையை அசைத்தபடி திரும்பித் தன் நிழலை ஆர்வத்துடன் பார்த்து முனகிக்கொண்டது. எங்கோ மயாம்ப் வாத்தியத்தின் இனிய ஓசை. புதிய பாலைக் காற்றின் புழுதி வாசனை... அவனது கிராமம். அங்கு எப்போதுமே வறுமை இருந்தது, ஒருநாளும் ஏற்றத்தாழ்வு இருந்ததில்லை...

விழித்துக்கொண்டபோது அவன் உடனடியாக நாள்களைக் கணக்கிட ஆரம்பித்தான். பகலிரவுகள் தெரியவில்லை. ரேடியோவைத் திருப்பியபடியே இருந்தான். திடாரென்று ஒரு நிலையத்தில் அன்றைய தேதி சொன்னார்கள். இன்னும் ஏழு நாள்கள் கதிரியக்கம் இருக்கும்... ஏழுநாள்கள், ஏழுநாள்கள்... ஏழு பகல்கள், ஏழு இரவுகள்... அதன்பின், அதன்பின், பூமி! வானம்! அவ்விரு சொற்களையும் அவன் உடலின் ஒவ்வொரு செல்லும் அறிந்தது. பாலைவனத்தில் மழைபோல அவனது வறண்ட ஆத்மாமீது அச்சொற்கள் பொழிந்தன. பூமி! வானம்!

அவன் அவ்வப்போது சாப்பிட்டான். வெகுநேரம் தூங்கினான். விழிக்கும்போது அறைக்குள் அவர்கள் இருப்பார்கள், எல்லாம் கனவெனத் தெளியும் என்று எண்ணினான். பின் மனமுடைந்து அழுதான்.

ரேடியோ மீண்டும் மீண்டும் அந்த அறிவிப்பைச் சொல்லிக் கொண்டிருந்தது. அது பதிவுசெய்யப்பட்டு நிரந்தரமாக ஓடவிடப்பட்ட அறிவிப்பு என்று அவன் சில நாள்கள் கழித்துத்தான் புரிந்துகொண்டான். ஐந்து நாள்கள். கடவுளே... நெருங்கிவிட்டது. இன்னும் ஐந்து நாள்கள்...

எழுந்து ரேடியோவைத் திருப்பினான். ஆங்கில உரையாடல் ஒன்றைக் கேட்டான்.

'... ஆம். போர் முடிந்துவிட்டது. அவர்கள் எவருமே எஞ்சவில்லை. ஒருவர்கூட. வரிசை வரிசையாக அவர்கள் தங்கள் இறைவனைநோக்கிக் கைநீட்டிக் கூவியபடி பாதாள அறைகளை விட்டு வெளியே வந்து கதிரியக்கத்தை உண்டு அழிந்தார்கள். வெற்றிதான் இல்லையா? முழுவெற்றி! கொண்டாடவேண்டியதுதான் இல்லையா? டாக்டர் சாம், எதற்காக நான் கொண்டாடவேண்டும்? ஆப்பிரிக்காவிலும் ஆசியாவிலும் குடிசைகளில் வாழ்ந்த

கோடிக்கணக்கான மக்கள் முற்றாக அழிந்துவிட்டார்கள்; புழுக்கூட்டங்கள் போல. கோடிகள். எண்ணிக்கையே அபத்தம். உலக மக்கள்தொகையில் எழுபது சதவீதம் அழிந்துவிட்டது... பூமியின் சுமை குறைந்தது என்று சொல்லும் பொருளியல் நிபுணர்கள் இருக்கக்கூடும்... ஆனால் மிருகங்கள், பூச்சிகள், நுண்ணிய உயிர்கள்... அவை இல்லாமல் உயிர்வாழ்வே நடக்க முடியாதே.. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஏறத்தாழ எல்லா மக்களும் பாதுகாப்பாக இருக்கிறார்கள். கீழை நாடுகளில் அங்கே வாழ்ந்த உயர்குடிகள் மற்றும் அதிகாரவர்க்கம் பாதாள அறைகளில் பாதுகாப்பாக இருக்கிறது. அவர்கள் இதுநாள்வரை ஐரோப்பாவுக்கு விசுவாசமாக இருந்தார்கள். பதிலுக்கு பலமான அறைகளைக் கட்டித் தந்து அவர்களுக்கு நாம் கைம்மாறு செய்தோம்... இதுவரை உலகை ஆண்டவர்கள் இப்போது ஆளப்பட எவரும் இல்லாமல் எஞ்சியிருக்கிறார்கள். பாதாள அறைகளில் கதிரியக்கம் விலகும் நாளை எதிர்நோக்கியிருக்கிறார்கள். அந்நாள் ஒரு புதிய கிறிஸ்துமஸாக இருக்கக்கூடும்... ஆனால் டாக்டர் சாம், இனிமேல் என்ன நடக்கும்? பூமியின் உயிர்ச் சமநிலை என்ன ஆகும்? இந்தக் கதிரியக்கக் கொந்தளிப்பின் பின்விளைவுகள் என்ன? ரசாயன மாறுதல்கள் எப்படிப்பட்டவை? உண்மையான பேரழிவு இனிமேல்தான்... ஆம், இப்போதுதான் அழிவே தொடங்கியிருக்கிறது...'

'நீங்கள் உணர்ச்சிவசப்படுகிறீர்கள், டாக்டர் விஷ்ணு. போர் என்றால் அழிவுகள் இருக்கக்கூடும். அவை நம் நரம்புகளைத் தாக்கக்கூடும்...'

'இருக்கலாம். இன்றைய உலகம் கோரும் எஃகாலான நரம்புகள் என்னிடம் இல்லை என்றே நானும் எண்ணுகிறேன். என்னைப் போன்ற அறிவியலாளர்களுக்கு இன்று குரலே இல்லை. இதேபோல ரேடியோக்களில் புலம்புவதுடன் அவர்கள் நின்றுவிடவேண்டியதுதான். டாக்டர் சாம், 'நாம் பகிர்ந்த ரொட்டி, ரொட்டியைவிட மேலானது.' கான்ராட் ஐக்கென் எழுதிய கவிதை வரி. எனக்கு மிக மிகப் பிடித்த வரி அது. இந்த பூமி பகிரப்படுகையில் இனிதாகும் ஒரு ரொட்டி. ஆனால் பகிரப்படாதபோது அது கொடும் விஷம். அரை நூற்றாண்டாக நாம் அடக்கிச் சுரண்டி வாழும் விதிகளை உண்டுபண்ணி இதை அழித்தோம்... ஆம் அழித்துவிட்டோம்... முற்றாக..'

'என்ன நடக்கும் என்று நினைக்கிறீர்கள்?'

'பூமியின் நுண்ணுயிர்கள் பல அழிந்துவிட்டன. ஆனால் பூமிக்கு அடியில் இன்னும் ஏராளமான நுண்ணுயிர்கள் உள்ளன. அவை பூமிக்குமேல் வந்து பல்கிப் பெருகலாம். காற்றுவெளிக்கு மேலே உள்ள நுண்ணியிர்கள் பூமிக்குவந்து பல்கிப் பெருகலாம். அவை உருவாக்கும் நோய்களை இப்போது கற்பனை செய்வதே சிரமம். வெளிப்புலத்தின் கதிர்வீச்சு சமநிலை மாறுபாட்டால் பலவகையான சக்திக் கொந்தளிப்புகள் நிகழலாம்...'

அவன் பித்துபிடித்த கண்களுடன் அவ்வறையின் முகட்டுவளையை நோக்கி அமர்ந்திருந்தான். மெல்ல அவனுக்குக் கால, இட உணர்வு முற்றாக அழிந்துவிட்டது. அவன் மனம் தன்னைத் தக்கவைத்துக் கொள்வதற்காக அந்தத் தாற்காலிக மனப்பிரமையை உருவாக்கிக்கொண்டது. அவன் இறந்தகாலத்தில் தன் பாலைவனக் கிராமத்தில் உயிர்ப்புடன் வாழ்ந்துகொண்டிருந்தான்.

அவன் விழித்துக்கொண்டபோது வெகுநேரம் ஏதும் புரியவில்லை. பின்பு பாய்ந்து ரேடியோவை எடுத்தான். அதை வெறிகொண்டவன் போலத் திருப்பினான். இன்னும் எத்தனை நாள்... வானமே பூமியே...

இசையும் உற்சாகக் குரல்களும் எல்லாப் புள்ளிகளிலிருந்தும் கொப்பளிக்கக் கேட்டான். ஐரோப்பிய மொழிகளெல்லாம் குதூகலித்துக்கொண்டிருந்தன. லட்சக்கணக்கான மக்களின் களியாட்ட ஒலிகள்...

'...நாடெங்கும் மக்கள் ஒரு கொடும்கனவின் முடிவைக் கொண்டாடுகிறார்கள். இன்று

எவருமே தங்கள் வீடுகளுக்குள் இல்லை. நகரங்களுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதோ என்று தோன்றுகிறது. தெருக்களில் மதுவெள்ளம் ஓடுகிறது. மக்கள் ஆணும் பெண்ணும் குழந்தைகளுமாக நடனமிட்டபடி எங்கும் சுற்றிவருகிறார்கள். கதிரியக்கம் முற்றாக இல்லை என்பதைக் காட்டும் வண்ணமாக நடிகையர் பலர் தெருக்களில் நிர்வாணமாக வந்து நடனமிட்டனர். அதிபர் இரண்டுமுறை மக்களிடையே உரையாற்றினார். தன் வரலாற்றுச் சிறப்புமிக்க பேருரையில், இழப்புகளை நாம் மறக்கலாகாது என்றார் அவர். ‘அவை கசப்பானவை ஆனால் தவிர்க்க இயலாதவை. பூமி முழுக்க சமாதானமும் சமத்துவமும் உருவாக இப்போர் தேவையாயிற்று. இதோ போர் முடிந்து நாம் எஞ்சியிருக்கிறோம். நாம் வென்றிருக்கிறோம். வெற்றியைக் காண நாம் இருக்கவேண்டும் என்பது இறைவனின் ஆணை. விண்ணகங்களை ஆளும் பிதாவின் ஆணையை எந்தச் சக்தியால் வெல்ல முடியும்? நாம் வென்றோம். இரவு என்றால் விடிவும் உண்டு என்பதை நாம் கண்டோம். இந்த நாளை விடியல்நாள் என்று கொண்டாடுவோம். இது சமாதானத்துக்கான நாள். ஒற்றுமைக்கான நாள். இனி இதுவே உலகின் முதல் பெரும் திருவிழா நாள் என்றார். கதிர்வீச்சில் உலகின் உயிர்ச் சமநிலையே மாறிவிட்டது என்றும் பலவகையான அழிவுகள் காத்திருக்கின்றன என்றும் சில அறிவியலாளர்கள் சொல்கிறார்கள். பூமியே அழியக்கூடும் என்றார்கள். அது அறிவியல். நாம் கடவுளின் ஆசியை நாடுவோம். தேவனாலே கூடாதது என்று ஏதுமில்லை என்று நம் புனித நூல் கூறுகிறது. அவர்முன் நாம் மண்டியிடுவோம். அவர் அருளால் சோதனைகளைக் கடந்துசெல்வோம். ஒருபோதும் தோற்கமாட்டோம். ஏனெனில் வெற்றிக்காக தேர்வுசெய்யப்பட்டவர்கள் நாம்...’ என்றார் அதிபர்.

ரேடியோவில் பேரிசை மலையூற்றில் இருந்து நீர் போலப் பீச்சியடித்தது. பல்லாயிரம் மக்களின் உற்சாகக் கூக்குரல்கள். ஆரவாரங்கள். இசை. அதை திருப்பித் திருப்பிக் கேட்டான். எல்லாப் புள்ளிகளும் ஒரேபோல உற்சாகத்தில் அதிர்ந்துகொண்டிருந்தன.

அவன் கண்ணீருடன் தலைகுனிந்து அமர்ந்திருந்தான். திடீரென்று எழுந்து ‘நானா?’ என்றான். ‘ஒருவேளை...’

பின்பு ஆவேசத்துடன் ஓடி, கதவுகளைத் திறந்து வெளியே வந்தான். வெளியே மெல்லிய இருள் இருந்தது. கிழக்குத் திசை இளஞ்செம்மையுடன் சுடர்விட்டது. அதைப்பார்த்தபடி அவன் உடல்நடுங்க நின்றான். பின்பு ஆவேசத்துடன் தன் கைத்துப்பாக்கியை எடுத்தான். வாய்க்குள் நுழைத்து ‘கருணைக் கடலான இறைவா!’ என்று வீறிட்டபடி விசையை இழுத்தான்.

[8. நாக்கு]

கேக் ஒரு பெண்ணின் முகம்போல வடிவமைக்கப்பட்டிருந்தது. அவள் சிவந்த உதடுகள்மீது ஒரு செர்ரி.

கிருஷ்ணன் அந்தச் செர்ரியை எடுத்தபடி 'அப்துல் லதீஃப் அல் பக்தாதியைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?' என்றான்.

நாசர் 'இல்லையே' என்றார். 'நம்முடைய பங்குதாரரா?'

'தொழில்முறையில் மருத்துவர். வேதியியலிலும் ஈடுபாடு இருந்தது. அத்துடன் மத அறிஞரும்கூட' என்றான் கிருஷ்ணன். 'பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.'

'ஓகோ..' என்றார் நாசர் ஆர்வமிழந்து. இறந்தவர்கள் அவரது வியாபாரத்துக்கு உதவமாட்டார்கள்.

'அசல் பெயர் அபூ முவஃபக் அத்தீன் அப்துல் லதீஃப் அல் பக்தாதி. ஹிஜ்ரி 557-ல் பாக்தாதில் பிறந்தார். அதாவது 1162-ல்.'

'ஈராக்கியன்!'

'அப்போது ஈராக் இல்லை' என்றான் கிருஷ்ணன். 'அவருக்கு ஹீப்ரூ உட்பட எட்டு மொழிகள் தெரியும். தன் வாழ்நாள் முழுக்கப் பிரயாணம் செய்துகொண்டே இருந்தார். அவரது முக்கியமான நூல் மனித உடலமைப்பு பற்றிய அவரது விளக்க நூல்தான். பதினாறாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் அதுதான் கல்லூரிகளில் கற்பிக்கப்பட்டது. உண்மையில் ஐரோப்பிய மருத்துவவியல், கிரேக்க மரபைவிட அரபு மரபுக்கு அதிகம் கடன்பட்டது.'

'சுவாரசியமான மனிதர்' என்றார் நாசர். 'இந்த மதுவின் பெயர் சாகூஷ். கெய்ரோவில் ஒரு மதிப்புமிக்க விருந்தினரை உபசரிக்கவேண்டுமானால் இதைத்தான் பரிமாறுவோம்.'

'கடுமையானதா?' என்றபடி கிருஷ்ணன் படிகக் கோப்பையை எடுத்தான்.

'மிக மென்மையானது. சொல்லப் போனால் இது மதுவே அல்ல, குளிர்பானம்' என்றார் நாசர். 'இதை எல்லாரும் தயாரிப்பதில்லை. குறிப்பிட்ட சில நிறுவனங்கள் மட்டுமே தலைமுறை தலைமுறையாக இதன் தயாரிப்பு ரகசியத்தை வைத்திருக்கின்றன. சொல்லப்போனால் குடும்ப ரகசியம்போல..'

'எகிப்திய கோலா!' என்றான் கிருஷ்ணன்.

'கிட்டத்தட்ட..' என்றார் நாசர். 'எப்படி இருக்கிறது?'

'ஆர்வமூட்டும் மணம்; விநோதமான மெல்லிய ருசி...'

'அதுதான் அதன் சிறப்பம்சம். நாலைந்துமுறை குடித்தால் அந்த மணத்துக்கும் ருசிக்கும் அடிமையாகிவிடுவீர்கள்.'

கிருஷ்ணன் நாப்கினால் உதடுகளைத் துடைத்துக்கொண்டான். 'லதீஃப் கிபி 1197-ல் எகிப்துக்கு வந்தார். இங்கே இருந்த அஸ்ஹர் பள்ளியில் ஆசிரியராக இருந்தார். கெய்ரோ அனுபவங்களை, 'அல் இஃபாதஹ் வல் இஃதிபார்' என்ற நூலில் சொல்லியிருக்கிறார். அதில்

மிகமிக விசித்திரமான விஷயம் ஒன்று இருக்கிறது. இந்த கேக்கைப் பார்த்ததும் நினைவுகூர்ந்தேன்...'

'நாம் இறைச்சிக்குச் செல்லலாம்...'

'நான் சைவம்!' என்றான் கிருஷ்ணன்.

'மீன்?'

'ஊன் உணவே சாப்பிடமாட்டோம். தலைமுறை தலைமுறையாக அப்படித்தான்.'

'உங்கள் மத வழக்கமா?'

'இல்லை. எங்கள் இனக்குழு வழக்கம். அல்லது ஒருவகை மனப்பழக்கம் என்று சொல்லலாம். இப்போது நிறையப் பேர் சாப்பிடுகிறார்கள். எனக்கு மாமிசத்தைச் சாப்பிடுவதுபற்றி கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை.'

'விசித்திரமான வழக்கம். கீரை சாப்பிடுவீர்களா? சாலட்?'

'சரி.' கிருஷ்ணன் தொடர்ந்தான். 'என்ன சொல்லிவந்தேன்... கிபி 1200 முதல் 1203 வரை தொடர்ச்சியாக மூன்று வருடம் நைல் முற்றிலும் வறண்டது. எகிப்தைக் கொடுமையான பஞ்சம் பிடித்துக்கொண்டது. அதைப் போன்ற பெரும்பஞ்சங்களை அபூர்வமாகவே காணமுடியும் என்று லதீஃப் சொல்கிறார். பசியால் இறந்தவர்கள் மட்டும் அரசாங்கக் கணக்குப்படி ஒன்றரை லட்சம். மக்கள் உணவுக்காக வெறிபிடித்து அலைந்தார்கள். கண்ணில் கண்ட பச்சைகளை எல்லாம் தின்றார்கள். கொலையும் கொள்ளையும் செய்தார்கள். நாய் நரிகளை எல்லாம் பிடித்துத் தின்றார்கள் புழு பூச்சிகளைத் தின்றார்கள். பிறகு எதுவுமே எஞ்சாமலாயிற்று. எல்லாரும் பட்டினியானார்கள். அப்போதுதான் நரமாமிசம் தின்னும் வழக்கம் உருவாகியது...'

'காய்கறிகள் இங்கே...' என்ற நாசர் நிறுத்தி, கூர்ந்து பார்த்து, 'என்ன?' என்றார்.

'மனிதனை மனிதன் தின்ன ஆரம்பித்தான்.'

'உண்மையாகவா?'

'ஆம். லதீஃப் அவர் பார்த்தவற்றை எழுதிவைத்திருக்கிறார். மிகையாகச் சொல்வது அவரது வழக்கம் இல்லை. அவர் விஞ்ஞானி.'

'யார் சாப்பிட்டார்கள்?'

'எல்லாரும்தான். முதலில் இறந்தவர்களை சிலர் ரகசியமாக சுட்டுத் தின்றார்கள். மெல்ல மெல்ல அது பரவியது. ஆரம்பத்தில் இருந்த தயக்கங்கள் விலகியதும் எல்லாரும் கூட்டம் கூட்டமாகத் தின்ன ஆரம்பித்தார்கள். பிணங்கள் தீர்ந்ததும் வேட்டையாடத் தொடங்கிவிட்டார்கள். கும்பல் கும்பலாகக் கையில் ஆயுதங்களுடன் இறங்கி மனிதர்களைப் பிடித்து, கொன்று உண்டார்கள். அதிகமும் குழந்தைகளையும் முதியவர்களையும். சில நாள்களிலேயே அதில் ருசி கண்டுகொண்டார்கள். விதவிதமாகச் சமைத்து உண்ண ஆரம்பித்தார்கள். தங்கள் தேவைக்கு மிஞ்சியதை விற்றார்கள். அது ஒரு வணிகமாக மாறியது. கடைகளில் வேகவைத்த மனித மாமிசம் விற்கப்பட்டது. மிஸ்ர் என்ற ஊரில் விற்பனைக்காகக் கூடைகளில் பொரித்த குழந்தைகள் வைக்கப்பட்டிருப்பதை லதீஃப் கண்டாராம். மனித மாமிசம் உப்பில் இடப்பட்டு ஜாடிகளில் விதவிதமாக அலங்காரமாக வைக்கப்பட்டது. கூவி விற்கப்பட்டது...'

'நம்ப முடியவில்லை...'

'நம்பியாக வேண்டும்' என்றான் கிருஷ்ணன். 'பிறகு வேறு ஊர்களிலிருந்து உணவு வந்ததும் பஞ்சம் அடங்க ஆரம்பித்தது. ஆனால் ஏராளமான மக்கள் இதில் ருசியும் இத்தொழிலில்

சுகமும் கண்டுகொண்டார்கள். அவர்களை மனித வேட்டையிலிருந்து தடுக்க முடியவில்லை. எகிப்திய அரசாங்கம் அவர்களை ஒடுக்க முனைந்தபோது அவர்கள் ஊர்களுக்கு வெளியே தனிச் சமூகங்களாகக் குடியேறினார்கள். வழிப்போக்கர்களைக் கொன்று தின்றார்கள். கெய்ரோவுக்கு வெளியே அப்படி ஒரு பகுதியை ராணுவம் தாக்கியபோது மலைபோல எலும்புகள் குவிந்து கிடப்பதைக் கண்டார்கள். நோயாளியைப் பார்க்க என்று கூட்டிச்சென்று மருத்துவர்களைக் கொன்று தின்பதும், மதகுருக்களை கூட்டிச்சென்று தின்பதும் சாதாரணமாக இருந்தது… பிறகு மெல்ல இப்பழக்கம் அழிந்தது.'

'படைத்தவனுக்கு நன்றி!' என்றார் நாசர். 'பேரர், சாலட்…'

'ஆனால் என்னுடைய கொள்கைப்படி இத்தகைய பழக்கங்கள் அழியவே அழியாது. ஏதோ ஒருவகையில் உருமாறி அவை நீடிக்கும். நாம் கலாசாரம் என்று சொல்வதெல்லாம் இம்மாதிரி உருமாறிய பழக்கங்களின் தொகுப்பைத்தான்…'

'இப்போதும் மனித மாமிசம் சாப்பிடுகிறார்கள் என்கிறீர்களா?'

'இருக்கலாம். எங்கோ சிலர். மிக ரகசியமாக. சில சமயம் அது ஏதாவது மதச் சடங்கின் ஒரு பகுதியாக மாறியிருக்கும். வருடத்தில் ஒருநாள் சில நிபந்தனைகளுடன் உண்ணலாம். ஏதோ ஒரு வடிவில் கண்டிப்பாக அப்பழக்கம் இங்கே இருக்கும்…' கிருஷ்ணன் சொன்னான், 'ருசி என்பது அப்படிப்பட்டது. அது மொழிபோல. இரண்டுமே நாக்குடன் தொடர்புடையவை. இரண்டுக்கும் மனிதனின் ஆழ்மனதுடன் நேரடியான தொடர்பு உண்டு. பல்வேறு விஷயங்கள் புதைந்து மட்கி உருவான ஒன்றுதான் நம் ஆழ்மனம். மனிதனின் எந்த உணவுப் பழக்கமும் அழிந்துபோகாது. அது ருசியாக மாறி நாக்கில் வாழும். நாக்கு அதைத் தேடியபடியேதான் இருக்கும்…'

'கற்பனையே செய்யமுடியவில்லை' என்றார் நாசர். 'நாங்கள் இங்கே இறைச்சியால் ஆன பலவகை அப்பங்களை விருந்தினருக்கு அளிப்பதுண்டு… ஆனால் மனித மாமிசம்… அய்யோ!'

'அப்படியா?' என்றான் கிருஷ்ணன். 'இறைச்சி இல்லாமல் சூப் கொண்டுவரச் சொல்லுங்கள்.' வாய் துடைத்தபடி, 'நான் தேடிப்பார்க்க விரும்புகிறேன். கெய்ரோவில் இரண்டு வாரம் எனக்கு வேறு வேலை இல்லை. என் கோட்பாடு மெய்யா என்று பார்க்க விரும்புகிறேன். இப்பகுதியில் உள்ள அத்தனை மக்களின் உணவுப் பழக்கங்களையும் சோதிக்கவேண்டும்.'

'பைத்தியக்காரத்தனம். இந்த நூற்றாண்டில்…'

'மனிதர்களின் பழக்கங்களில் பைத்தியக்காரத்தனம் இன்றியமையாத ஓர் அம்சம். கண்டிப்பாக இங்கே யாரோ எங்கோ நரமாமிசம் தின்கிறார்கள். ஏதோ ஒரு வடிவில். அதைக் கண்டுபிடிக்க வேண்டும்.'

நாசர் தலையசைத்தார்.

*

'இனிமையான நாட்கள்!' என்று நாசர் கைகுலுக்கினார். 'இத்தனை நாட்கள் நீங்கள் இங்கு இருப்பீர்கள் என்றும் நாம் இத்தனை நாள் சேர்ந்து சுற்றக்கூடும் என்றும் நான் எதிர்பார்க்கவே இல்லை. என்னைப் பொருத்தவரை இது ஒரு மிகப்பெரிய கௌரவம்…'

கிருஷ்ணன் புன்னைகை செய்தான். 'நீங்கள் மிக நன்றாக உபசரித்தீர்கள் நாசர். நான் கண்டிப்பாக இதை எப்போதும் நினைவுகூர்வேன். அதிலும் இந்த மது… சாக்ஷ்! இதன் ருசிக்கு நான் கிட்டத்தட்ட அடிமையாகிவிட்டேன்…'

'நீங்கள் அமெரிக்கா செல்லும்போது உங்களைத் தேடி இது அங்கே வந்து காத்திருக்கும்' என்றார் நாசர் சிரித்தபடி. 'நான் பத்துநாள் முன்னரே நாற்பது புட்டி சாக்ஷ் அனுப்பிவிட்டேன்…'

‘நன்றி!’ கிருஷ்ணன் வாட்சைப் பார்த்தான். ‘நேரமாகிறது.’

‘இன்னும் பத்து நிமிடங்கள். நீண்ட நாள் நண்பரைப் பிரியும்போது இறுதி விநாடிகளே அந்த நீண்ட நாள்களாக மாறிவிடுகின்றன என்று ஒரு பழமொழி எங்கள் இனக்குழுவில் உண்டு’ என்றார் நாசர்.

‘இந்த சாக்ஷ் மதுவின் ருசியில் எங்கள் ஊரில் உள்ள ஒரு பானத்தின் வாசனை இருக்கிறது. அதை நேற்றுத்தான் கண்டுபிடித்தேன்’ என்றான் கிருஷ்ணன். ‘அதை எங்கள் நிலங்களை வேளாண்மை செய்யும் சில இனக்குழுக்கள் தயாரிக்கிறார்கள். நாங்கள் வருடத்தில் நாற்பது நாள் காளி பூசை செய்வோம். அந்நாள்களில் அதைத் தயாரித்து எங்களுக்குக் கொண்டுவருவார்கள். அதை ஆண்கள் மட்டுமே குடிப்போம். என் சிறுவயதில் சிலமுறை அதைக் குடித்திருக்கிறேன். இப்போது தயாரிக்கிறார்களா என்று தெரியவில்ல்லை. காளி பூசையே இருக்கிறதா என்று தெரியவில்லை.’

‘மாமிசம் சாப்பிடாத இனக்குழு என்றீர்கள்...’

‘நூறு வருடம் முன்புகூட நாங்கள் சாப்பிட்டதுண்டு. ஆனால் உணவாக அல்ல, பூசையின் பகுதியாக. நாங்கள் சாக்தேயர்கள். கடவுளை நாங்கள் மரணமாக, அனைத்தையும் அழிக்கும் சக்தியாக, பெண் வடிவம் கொண்டவளாக வணங்குகிறோம். அவளுக்கு விலங்குகளைப் பலிகொடுப்போம். அந்த ஊனை உண்போம். அதில் மதுவும் ஓர் அம்சம்...’

அறிவிப்புகள் ஒலித்தன.

‘என் கோட்பாட்டை நான் இன்னும் கைவிடவில்லை’ என்றான் கிருஷ்ணன். ‘நாக்கு ஒரு போதும் மறக்காது. அதன் நினைவுக்கு மனித வரலாறைவிட ஆழம் உண்டு..’

‘எகிப்தில் நாம் இனிமேல் எங்கே தேடுவது? அநேகமாக எல்லா உணவுப் பழக்கங்களையும் எல்லாப் பழங்குடிகளையும் ஆராய்ந்துவிட்டோம்...’

‘ஆம். கண்டிப்பாக நீங்கள் சரியான வேலை செய்தீர்கள். ஆனால் ஆய்வுகளைப் பொருத்தவரை எதுவுமே முடிவு அல்ல. நாம் போன பாதை தவறாக இருக்கலாம். நாம் ஏதாவது ஒரு முக்கிய அம்சத்தைத் தவற விட்டிருக்கலாம். நான் மீண்டும் அடுத்த ஜனவரியியில் கெய்ரோ வரக்கூடும்...’

‘ஆனால் நாம் ஆராய்ச்சியாளர்கள் அல்ல. நம் தொழில் அதுவல்ல...’ நாசர் சற்று சலிப்புடன் சொன்னார்.

‘ஆம். ஆகவேதான் நமக்கு அது ஹாபி. ஆராய்ச்சியாளர்கள் ஒருவேளை ஹாபியாக பிஸினஸ் செய்வார்கள்...’ கிருஷ்ணன் சிரித்தான். நாசரும் சிரித்தார்.

விமானம் கிளம்பியது. கிருஷ்ணன் நாசரின் தோளைத் தட்டிவிட்டு சிரித்தபடி கிளம்பினான். ‘நன்றி நாசர். நல்ல நாள்கள். நைல் நதி அழகானது. மாநிறப் பெண்கள் அழகானவர்கள். சாக்ஷ் இனியது.’

‘நன்றி. மீண்டும் வாருங்கள்.’

*

காரை பாரம்பரிய உடையணிந்த ஒரு வயதான பெண் கைகாட்டி நிறுத்தினாள். கார்கள் நிறுத்தும் இடத்திலிருந்து ஒவ்வொரு காராகச் சீறிச் சென்றுகொண்டிருந்தன.

காருக்குள் தலைவிட்டு, ‘ஐயா நான் அவசரமாகச் செல்லவேண்டும். என்னை கெய்ரோ நகருக்குள் இறக்கிவிடுங்கள். எனக்காக கார் வரவில்லை’ என்றாள்

‘சரி, வாருங்கள்!’ என்றார். அவள் ஏறிக்கொண்டாள்.

‘நீங்கள் என்ன இனக்குழு?’

‘வாங்காய் இனக்குழு’ என்றாள் அவள். ‘வெளியூர் போனேன். நான் வருவது என் பெண்ணுக்குத் தெரியும். ஆனால் அவள் வரவில்லை. வரமுடியவில்லை போலும். மிகவும் நன்றி...’

அவள் நகங்கள் மிக மிக நீளமாக இருந்தன; சிப்பிகள் போலச் சுருண்டு.

‘நகம் வளர்ப்பது பொழுதுபோக்கா?’

‘இல்லையில்லை. இது எங்கள் இனக்குழு வழக்கம். நான்கு வருடம்வரை வெட்டாமல் வளர்ப்போம். இப்போது இந்த வழக்கம் இங்கே அதிகமாக இல்லை. ஆனால் கிராமங்களில் நிறையப் பேர் வளர்க்கிறார்கள்...’

‘சடங்குபோல?’

‘ஆமாம். ஆனால் வெறும் சடங்கு அல்ல. நாங்கள் நகங்களை ஏராளமாக வெட்டி ஒரு கலவையில் போட்டு ஆறு மாத காலம் ஊறவைப்போம். அப்படியே கரைந்து கலந்துவிடும். அது மிக மிகச் சுவையான ஒரு மது...’

நாசர் திடீரென்று ஒரு மனவிழிப்பைப் பெற்றார். ‘என்ன அது?’ என்றார்.

‘சாகூஷ்’.

9. தமிழ் இலக்கிய வடிவங்கள்: நேற்று, இன்று, நாளை - ஓர் ஆய்வு

*சா*ன்றோர்களே அன்பர்களே,

இக்கருத்தரங்கில் இதுவரை முன்வைக்கப்பட்ட கட்டுரைகள் அனைத்தும் இன்றுள்ள இலக்கியப் படைப்புகளின் பல்வேறு நுட்பங்களைப் பற்றிப் பேசின. உண்மையில் இலக்கிய நுட்பங்கள் என்னும்போது அவையெல்லாம் இலக்கிய வடிவங்களின் நுட்பங்களையே உத்தேசிக்கின்றன. எல்லாக் காலத்திலும் இப்படித்தான் இருந்துள்ளது; இலக்கிய விவாதங்கள் அனைத்தும் இலக்கிய வடிவம் சார்ந்த விவாதங்களே. இலக்கியப் படைப்பின் உள்ளடக்கம் சார்ந்த விவாதங்கள் உண்மையில் இலக்கியத்துக்கு அப்பாற்பட்ட தளங்களுக்கு நகர்ந்துவிடுவதுதான் வழக்கம். ஆக, இலக்கியத்தைப் பற்றிப் பேசுவதென்றால் இலக்கிய வடிவத்தைப் பற்றியே பேசமுடியும். ஆகவேதான் உருவவியலாளர்கள் இலக்கியம் என்றால் அதன் உருவமேயாகும் என்று வாதிட்டனர்.

ஆனால் இப்படி எதிர்வாதிடலாம், இலக்கிய வடிவங்களைப் பற்றிய விவாதம் என்பது ஒரு கருவியின் அல்லது கட்டடத்தின் அல்லது ஓர் ஓவியத்தின் வடிவத்தைப் பற்றிய விவாதத்திலிருந்து எவ்வண்ணம் மாறுபடுகிறது? அப்போது ஒன்று தெரியும், இலக்கியத்தில் புறவயமான மாறாத ஒரு வடிவம் உண்மையில் கிடையாது. ஓர் இலக்கியப் படைப்பு ஒருவருக்குக் கச்சிதமான ஒன்றாக இருக்கும், பிறிதொருவருக்கு வளவளவென்று இருக்கும். ஒருவரை அது தைத்து ஊடுருவும், பிறிதொருவரைத் தொட்டு உதிர்ந்துவிடும். அதன் வடிவத்தை ஒருவர் அந்தரங்கமாகவே உணர முடிகிறது. அதைப் பற்றிப் புறவயமாக ஒன்றும் சொல்லமுடியாது. ஓர் இலக்கியப் படைப்பின் வடிவச் சிறப்பு இன்னது என்று எவரும் 'காட்டி'விட முடியாது; தன் மனப்பதிவையே சொல்ல முடியும். இன்றுகூட இலக்கியம் சார்ந்த அனைத்துக் கருத்துகளும் கோட்பாடுகளும் நிரூபணத் தளத்துக்கு வெளியேதான் உள்ளன. அவை கருதுகோள்கள் மட்டுமே; பொது உண்மைகள் அல்ல; தகவல்கள்கூட அல்ல.

இலக்கியத்தில் உள்ள வரிவடிவம் அல்லது ஒலிவடிவம் அல்லது மின்வடிவம் அல்லது நுண்வடிவம் என்பது இலக்கியத்தை நிகழ்த்தும் ஒரு முகாந்திரம் மட்டுமே; உணவைப் பரிமாறும் தட்டுபோல. இலக்கியம் நிகழ்த்தப்பட்டுள்ள மொழியமைப்பானது தன்னளவில் எந்த சுயத்துவமும் இல்லாதது. அதை ஒருவர் வாசித்து அர்த்தப்படுத்தும்போதே அது இலக்கியம். வாசிக்கப்படாத எழுத்துகளில் உள்ள இலக்கியம், இல்லாத இலக்கியமேயாகும். ஆகவே இலக்கிய வடிவம் என்பது அகவயமானது; வாசிப்பில் உருவாகி வருவது. ழாக் தெரிதாவைச் சார்ந்து கட்டவிழ்ப்புத் திறனாய்வாளர்களில் ஒருச ர்ரார் இக்கருத்தை ஆழமாக வலியுறுத்தியிருக்கிறார்கள்.

ஆனால் அவர்கள் சொல்வது போல இலக்கிய வடிவம் முற்றிலும் அகவயமானதா என்ன? அப்படி என்றால் எந்த ஒரு படைப்பிலும் ஒரு வாசகன் பேரிலக்கியத்தை வாசிக்க முடியுமே. அது இலக்கியம் என்ற இயக்கத்தையே மறுப்பதாகிவிடுமே. அது உண்மை இல்லை. இன்றைய நவீனப் படைப்புகளில் பேரிலக்கியமாகக் கருதப்படும் சரவணன் சண்முகமணியின், 'இடதுகால் நடனம்' அற்புதமான வடிவநுட்பமும் அழகும் கொண்ட பெரும்படைப்பு என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. சாதாரணப் படைப்பு ஒன்றை எடுத்துக்கொண்டு

அதை இப்படைப்புடன் ஒப்பிட முடியுமா என்ன? ஆக இலக்கிய வடிவம், வடிவம் என்பது 'கண்ணுக்குத் தெரியாதபடி' புறவயமாகவும் இருந்துகொண்டுதான் உள்ளது. கட்டவிழ்ப்பாளர்களுக்கு எதிராகவே அனைத்து அக உருவகங்களும் ஏதோ ஒருவகையில் மூளையின் நரம்பமைப்புடன் தொடர்புடையவை என்ற நரம்பியல் குறைத்தல்வாதம் உருவாகி வந்தது.

அப்படியானால் இலக்கிய வடிவம் சார்ந்த விவாதங்கள் எதைப் பற்றி விவாதிக்கின்றன? ஒரு வசதிக்காக இப்படிச் சொல்கிறேன், அவை இலக்கியம் என்ற நிகழ்வைப் பற்றி விவாதிக்கின்றன. ஒரு மொழி வடிவம் உருவாக்கப்படுவது ஒரு முனை. வாசிக்கப்பட்டு பொருள் கொள்ளப்படுவது மறுமுனை. இந்த நேர் எதிர் முனைகள் சந்திக்கும் புள்ளியில் அவ்வடிவம் நிகழ்கிறது. அந்நிகழ்வின் பல்வேறு சாத்தியங்களைப் பற்றிய விவாதமே இலக்கிய வடிவம் குறித்த விவாதம். அப்படியானால் இலக்கிய வடிவம் குறித்த விவாதம் என்பது தொடர்புறுத்தலின் ஒரு கணம் குறித்தது மட்டுமே.

இதை மேலும் விரிவுபடுத்துகிறேன். இலக்கிய வடிவ விவாதம் என்பது ஒரு மனித மனத்துக்கும் இன்னொரு மனித மனத்துக்கும் இடையேயான தொடர்புமுறை குறித்தது. மூளையைப் பற்றி நாம் எவ்வளவோ அறிந்தபின்னும் அதன் செயல்பாட்டை மனம் என்ற உருவகம் மூலமே சொல்ல முடிகிறது. அத்தொடர்பை நிகழ்த்துவதற்கு ஒரு சமூகம் உருவாக்கித் தரும் பல்லாயிரம் கலாசாரக் குறியீடுகள் மற்றும் அடையாளங்கள் பற்றியது. என்னுடையது உன்னுடையதாக ஆகி நம்முடையதாக ஆகும் விதம் குறித்தது. நானும் நீயும் நாம் என்ற பொதுவெளியில் எப்படி ஒருவரை ஒருவர் உருவாக்கிக்கொள்கிறோம் என்பதைப் பற்றியது.

மொத்தத்தில் வகுத்துச் சொல்லப்போனால் இலக்கிய வடிவ விவாதம் என்பது தனிமனிதர்கள் தங்கள் சமூகமாக உருவாக்கிக் கொள்வதற்காகச் செய்யும் பல்வேறு தளத்திலான செயல்பாடுகளின் சாத்தியங்களைப் பற்றிய விவாதமாகும்.

*

நான் என் தலைப்புக்கு வருகிறேன். இங்கே பேசிய அனைவருமே இலக்கிய வடிவ நுட்பங்களை விவாதித்தனர். பல்வேறு படைப்புகள் எப்படி அந்நுட்பங்களை நிகழ்த்தின அல்லது நிகழ்த்தவில்லை என்பதைப் பற்றிப் பேசினர். நான் இவ்வடிவங்கள் சென்ற சில நூற்றாண்டுகளில் எப்படியெல்லாம் உருவாகி உருமாறி வந்துள்ளன என்பதைப் பற்றிப் பேசலாம் என்று எண்ணுகிறேன். ஒவ்வொரு இலக்கியப் படைப்பும் தன்னளவில் ஒரு வடிவ வளர்ச்சியை நிகழ்த்துகிறது என்றாலும் கண்ணுக்குத் தெரியும்படியான ஒரு வடிவ மாற்றம் பல நூற்றாண்டுகளுக்கு ஒருமுறைதான் காணக் கிடைக்கிறது. நான் ஆரம்பத்திலிருந்தே தொடங்குகிறேன்.

நமது கதைவடிவ இலக்கியப் படைப்புகளின் முதல் வடிவம் நாட்டார் மரபில் உள்ள 'கதைப் பாடல்கள்' என்று சொல்லலாம். இருபதாம் நூற்றாண்டில் நாட்டரியல் தோன்றி நாட்டார் பாடல்களை முறைப்படி தொகுத்து ஆராயத் தொடங்கியபோது நிறுவப்பட்ட கருத்து இது. தமிழைப் பொருத்தவரை ஆறுமுகப் பெருமாள் நாடார், பேராசிரியர் நா. வானமாமலை, கலாநிதி கைலாசபதி, பேராசிரியர் தெ. லூர்து, பேராசிரியர் சக்திக்கனல், பேராசிரியர் பக்தவத்சல பாரதி, பேராசிரியர் அ.கா. பெருமாள் ஆகியோரை நாம் நாட்டாரியலுக்காக நினைவுகூர்கிறோம்.

நமது கதைப் பாடல்கள் பொதுவாக மூன்று வகைப்பட்டவை: வீர கதைப் பாடல்கள், தாய் தெய்வப் பாடல்கள், பலி வழிபாட்டுப் பாடல்கள். பெருவீரன் ஒருவனைப் பொது நினைவில் நிறுத்துவதன் மூலம் அவ்விழுமியத்தை மக்கள் மனத்தில் நிலைநாட்டும் பொருட்டு உருவானவை வீர கதைப் பாடல்கள். பொதுவாக கதைப் பாடல்களில் இவ்வகையே முதன்மையானவை; அதிகமானவை. மிகப் பிற்காலத்தில்கூட நாட்டார் மரபில் இவை

உருவாகியபடியே இருந்துள்ளன. அ.கா. பெருமாள் பதிப்பித்த 'தம்பிமார் கதை', 'இரவிக் குட்டிப்பிள்ளை போர்', சக்திக்கனல் பதிப்பித்த 'அண்ணன்மார் சாமி கதை' முதலியவை இதற்குச் சிறந்த உதாரணங்கள். வீர கதைப் பாடலின் விரிவாக்கப்பட்ட வடிவமே வம்ச கதைப் பாடல். வீரர்களின் பரம்பரை இதன் மூலம் நினைவில் உருவாக்கப்படுகிறது. ராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்கள் மட்டுமல்ல, கந்தபுராணம் போன்ற பிற்கால நூல்களும், சுடலை மாடன் கதை போன்ற நாட்டார் புராணங்களும் இம்மரபைச் சேர்ந்தவைதான். சீவக சிந்தாமணி இவ்வகைப்பட்ட கதையே. இன்றுவரை நீளும் ஓர் அழியாத மரபு இது என்றால் நீங்கள் வியப்படையமாட்டீர்கள்.

இரண்டாவது கதைப் பாடல்முறை, தாய் தெய்வங்களின் புகழைப் பாடுதல். ஆதியில் இது அன்னை தெய்வங்களைப் பாடுதலாக இருந்தது. தாய்மை என்பது நில வளத்துடனும் படைப்புச் சக்தியுடனும் தொடர்புடையதாகக் கருதப்பட்ட புராதன காலகட்டத்தில் இது உருவானது என்று சொல்லலாம். பின்பு கன்னியராக இறந்தவர்கள், அருங்கொலை செய்யப்பட்ட பெண்கள் ஆகியோரைப் பாடுதலும் இதில் சேர்த்துக்கொள்ளப்பட்டது. இம்மரபு சமீபகாலம்வரை தமிழ்நாட்டில் வலிமையுடன் இருந்துள்ளது. வீர கதைப் பாடலை தந்தைமையச் சமூகத்தின் குரலாகவும் தாய் வழிபாட்டுப் பாடலை தாய்மையச் சமூக அமைப்புடனும் தொடர்புபடுத்தலாம். இவற்றில் எது முந்தையது என்பது முடிவிலா விவாதப் பொருள். சிலப்பதிகாரம் தாய்வழிபாட்டு மரபைச் சேர்ந்ததே என்பேன். நல்லதங்காள் கதையையும் இதில் சேர்க்கத் துணிவேன்.

வழிபாட்டுக்காகவும் பலிச்சடங்குகளுக்காக இயற்கைச் சக்திகளையும் கடவுள்களையும் வாழ்த்திப் பாடும் நாட்டார் பாடல்கள் அடுத்தவகை. இவை பொதுவாக, துதிகள். இயற்கையின் நுட்பங்களையும் மர்மங்களையும் புரிந்துகொள்ளும் முயற்சியின் பகுதியாகவும் இயற்கை குறித்த ஞானங்களைப் பகிர்ந்துகொள்ளும் முறையாகவும் இயற்கையைச் சாந்திசெய்யும் சடங்குகளாகவும் இவை உருவாகி வளர்ந்தன. மழை, கடல், புயல் போன்ற பலவகையான இயற்கைக் கூறுகள் தெய்வ வடிவம் கொண்டது இப்பாடல்களின் வழியாகவே. புராதனக் குறவர் பாடல்களும் சரி, ரிக்வேதமும் சரி இவ்வகைப்பட்ட பாடல்களே. இம்மரபு பிறகு பக்தி மரபாக மாறியது. இன்றும் தொடர்கிறது.

இம்மூன்று வகைக் கதைப் பாடல்களும் கலந்து உருவானவையே ஆரம்ப கால இலக்கியப் படைப்புகள் என்றால் அது மிகையல்ல. நமது சங்க இலக்கியப் பாடல்கள் வீர கதைப் பாடல்களின் வளர்ச்சி நிலைகள். 'பாடாண்' திணை நேரடியாகவே அதைச் சுட்டுகிறது. இதன் அடிப்படையிலேயே க. கைலாசபதி அக்காலகட்டத்தை வீரயுகம் என்று சொல்லத் துணிந்தார். அடுத்த கட்டத்தில் உருவான காப்பியங்கள் அல்லது காவியங்கள் பொதுவாக வீர கதைப் பாடல்கள், தாய் தெய்வப் பாடல்கள் ஆகியவற்றின் கலப்பின் விளைவாக உருவானவை. சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, குண்டலகேசி, நீலகேசி முதலியவற்றை உதாரணமாகச் சொல்லலாம். இங்கு குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய ஒன்று நம் மரபில் வீர கதைப் பாடல்களுக்கான இடம் இரண்டாம் பட்சமானதே; நாம் தாய் தெய்வப் பாடல்களுக்கே அதிக இடம் அளித்திருக்கிறோம் என்பது. நாம் அடிப்படையில் தாய்மையச் சமூகமாக இருந்திருக்கலாம். கம்பராமாயணம் ராமனின் வீரத்துக்கா, சீதையின் துக்கத்துக்கா, எதற்கு அதிக இடம் அளித்தது என்ற கேள்வி எளிதில் பதில் சொல்லத்தக்கதல்ல.

காப்பியங்களுக்குப்பின் நம் புனைகதை வடிவில் புராணங்கள் பெரும் செல்வாக்கு செலுத்தின. பலி வழிபாட்டுக் கதைப் பாடல்களையும் வீர கதைப் பாடல்களையும் கலந்து செய்யப்பட்டவை என்று புராணங்களை நாம் உருவகிக்க முடியும். அவை இலக்கிய நயத்தில் பொதுவாகக் காவியங்களின் நிழல்கள் போலக் காணப்பட்டன.

இவற்றின் அடுத்த நிலையாகவே நாம் நவீன காலகட்டத்துக்கு வருகிறோம். தாளும் அச்சும் சேர்ந்து உருவாக்கிய இலக்கியக் காலகட்டத்தையே பொதுவாக நவீன காலகட்டம்

என்கிறோம். நவீன புனைகதை தமிழில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொடங்கியது. சி. சுப்ரமணிய பாரதி, மாயூரம் வேதநாயகம் பிள்ளை, ராஜம் அய்யர், மாதவையா ஆகியோரை முன்னோடிகளாகச் சொல்வது மரபு. இவர்களின் ஆக்கங்களிலும் மரபின் சரடுகள் நீண்டுவருவதை நாம் காணலாம். பாரதியின் 'பாஞ்சாலி சபதம்' (1918) சிலப்பதிகாரத்தின் மறுவடிவமல்லவா? 'பிரதாப முதலியார் சரித்திரம்' (1876) ஒரு வகை வீர கதைப் பாடல். 'கமலாம்பாள் சரித்திர'மும் (1893) 'பத்மாவதி சரித்திர'மும் (1898) நம் மரபில் ஏற்கெனவே உள்ள கன்னியம்மன், பத்தினியம்மன் கதைகளின் நீட்சி நிலைகள்தாமே? கல்கி, சாண்டில்யன் நாவல்களில் உள்ள வீர கதைப் பாடல்தன்மையை விளக்கவேண்டியது இல்லை.

மரபை எதிர்த்தும் உடைத்தும் திரித்தும் எழுதும் நவீனத்துவ எழுத்துகள் உருவானபோது அதுவரை வந்த கதைச் சரடுகள் கண்ணாடிப் பிம்பம் போல தலைகீழாக்கப்பட்டுத் தொடர்ந்தன. தி. ஜானகிராமனின் 'மோகமுள்'ளை (1962) ஒருவகை தாய் தெய்வப் பாடல் என்றால், நான் சுந்தர ராமசாமியின் 'ஜே ஜே சில குறிப்புக'ளை (1984) ஒருவகை வீர கதைப் பாடல் என்றால், நீங்கள் சற்று சிந்திக்காமல் இருக்கமாட்டீர்கள். பலவகையான கதை வடிவங்கள் பரிசீலிக்கப்பட்ட காலம் இது. அப்பரிசீலனைகள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாக நாவல் என்றார்கள். சிறிய வடிவங்களைச் சிறுகதை என்றார்கள். கதையற்ற வடிவங்களும் இவ்வகைமையில் சேர்க்கப்பட்டன.

அவ்வாறாக புராதன கதைப் பாடல்கள் பழங்காலத்தில் காப்பியங்களாகி நடுக்காலகட்டத்தில் புராணங்களாகி நவீன காலகட்டத்தில் நாவல் வடிவம் கொண்டன. இருபத்தொன்றாம் நூற்றாண்டின் நடுவில் நாவல் வடிவம் சிதறி அழிந்தது என்று சொல்லலாம். தமிழைப் பொருத்தவரை நாவல் வடிவின் சிதறலை நிகழ்த்த ஆரம்பித்த படைப்பு சுந்தர ராமசாமியின் 'ஜே ஜே சில குறிப்புகள்'. அவ்வுடைசல்களை வைத்து காப்பியங்களின் வடிவை உருவாக்கிய ஜெயமோகனின் 'விஷ்ணுபுரம்' (1997) உண்மையில் அத்துண்டுகளை அதிகமான அகலத்துக்கு விசிறுவதன் மூலம் அவ்வுடைவை மேலும் அதிகமாக்கியது. உடைத்துச் சிதறடித்தால் மட்டுமே அள்ள முடியக் கூடியவற்றை அது குறிவைத்தது எனலாம். சிக்கலான, முன் பின்னான கதைப்பின்னல் என்ற அம்சம் மூலம் அதன் பிறகு வந்த அவரது நாவல்கள் அனைத்துமே நாவல் என்ற வடிவின் ஒருங்கிணைவை அழித்தன. யுவன் சந்திரசேகர், எஸ். ராமகிருஷ்ணன், சு. வேணுகோபால் போன்றவர்களின் நாவல்களும் இதையே செய்தன. இவ்வழிவின் அழகியலை பொதுவாக மேலைநாட்டில் பின் நவீனத்துவம் என்றார்கள். எனினும் தமிழில் அப்படி ஒரு தனிப்போக்கு உருவாகவில்லை என்றே கூறவேண்டும்.

இக்காலகட்டத்தில் வெளிநாடுகளை விளைநிலமாகக் கொண்டு தமிழில் கணிப்பொறித் துறை வளர்ச்சி பெருமளவில் ஏற்பட்டது. பிற தளங்களில் வளர்ச்சி மந்தித்து நின்ற தமிழ்ச் சமூகத்தில் கணிப்பொறி வளர்ச்சி உருவான வேகம் ஆச்சரியமூட்டுவதே. இரண்டாயிரத்து நாற்பதுகளில் தமிழில் அச்சு ஊடகம் முற்றிலும் இல்லாமலாகியது. நாளிதழ்கள், நூல்கள், கல்விச் சாதனங்கள் அனைத்தும் மின்னணுமயமாயின. இதற்கான சமூக, பொருளியல் காரணங்கள் பல இருந்தாலும் ஒரு வேடிக்கையான முக்கியக் காரணத்தையும் சுட்டிக்காட்ட வேண்டும். உரிமம் பெறாமல் மென்பொருள்களை போலியாகத் தயாரித்தோ பிரதியெடுத்தோ பயன்படுத்தும் வழக்கம் மூலம் மின்னணுத் தொடர்புறுத்தலின் செலவு அச்சு ஊடகத்துடன் ஒப்பிடுகையில் கற்பனை செய்ய முடியாத அளவுக்குக் குறைவாக ஆனது. அதாவது மின்னணு ஊடகம் ஏழைகளுக்குரியதாக ஆயிற்று. அச்சு ஆடம்பரக் கலைப்பொருளாக ஆயிற்று. 2055 வரைகூட பண்டைப் பெருமைகொண்ட தமிழினி பதிப்பகம் (வி. சரவணன்) ஜெயமோகன் நாவல்களைச் சிறிய எண்ணிக்கையிலான கலைப்பொருள் சேகரிப்பாளர்களுக்காகப் பெரும் விலையில் அச்சில் வெளியிட்டு வந்தது. மின்னணு ஊடகம் மூலம் உருவான இலக்கிய வடிவத்தை மின்நவீனத்துவம் என்று குறிப்பிட்டனர்.

*

நண்பர்களே, பரிமாறப்படும் தட்டு, உணவின் இயல்புகளைத் தீர்மானிக்கும் வேடிக்கை எப்போதும் இலக்கியத்தில் நிகழ்கிறது. கதைப்பாடல் வடிவம் முழுக்க முழுக்க பாடிக் கேட்கப்பட்டது. ஆகவே கட்டற்ற நீளமும் மீண்டும் மீண்டும் சொல்லும் தன்மையும் உரத்த உணர்ச்சிகளும் அதற்கு இருந்தது. உடன் வாசிக்கப்படும் வாத்தியங்களே அதன் வடிவைத் தீர்மானித்தன; துள்ளலுக்குத் துடி, தூங்கலுக்கு முழவு என. பின்பு ஏட்டில் எழுதப்பட்டதுமே காப்பியங்கள் உருவாயின. ஓலையின் வடிவம் கவிதையின் வடிவத்தைத் தீர்மானித்தது. அதிகபட்சம் பதினாறு சொற்கள் கொண்ட வரிகளாக துண்டிக்கப்பட்டு கீழ்கீழாக அடுக்கப்பட்ட கவிதை வடிவம் உருவாயிற்று. அதுகூடப் பின்பு நான்கு நான்கு வரிகள் கொண்டதாகக் கிடைமட்டத்திலும் துண்டாக்கப்பட்டது. தாளும் அச்சும் உருவானபோது உரைநடை பிறந்தது. படைப்புகளுக்குத் தலைப்புகள், பத்திகள், அடிக்குறிப்புகள், அத்தியாயங்கள், கதைப் பகுதிகள் என புதிய வடிவச் சிறப்புகளை அச்சு உருவாக்கியது. குறிப்பாக நாவல் என்பது அச்சுக் கலையின் சிருஷ்டி என்றே சொல்லலாம்.

நாவல் அச்சுக் கலையின் சாத்தியங்களை பலவாறாகப் பயன்படுத்திக் கொண்ட ஓர் இலக்கிய வடிவம். அதன் புதிய சோதனைகள் பலவும் அச்சு ஊடகம் தாளில் உருவாக்கிய காட்சிவடிவச் சாத்தியங்களில் இருந்து உருவானவை என்பதை நாம் இப்போது காண்கிறோம். நாவல் ஆரம்பத்தில் அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டது. பின்பு அத்தியாயங்கள் இல்லாமல் எழுதப்பட்டது. பத்திகள் இல்லாமலும், ஒரே வரியாகவும், தனித்தனிக் குறிப்புகளாகவும், அகராதி வடிவிலும் இன்னும் பல்வேறு வடிவிலும் அது எழுதப்பட்டது. ஆனால் அதன் அத்தனை சாத்தியங்களும் புத்தகம் என்ற பருவடிவின் எல்லைக்குள்ளேயே நின்றன. மின்னணு யுகம் ஆரம்பித்தபோது அவ்வெல்லை மீறப்பட்டது. மின்னணு ஊடகங்களில் உருவான இலக்கிய வடிவங்களையும் அவை உருவாக்கிய அடிப்படை மாற்றங்களையும் சுட்டவே மின்நவீனத்துவம் என்ற சொல் புழக்கத்துக்கு வந்தது.

மின்நவீனத்துவத்தின் முதல் சோதனை நாவலில் நிகழ்ந்தது. உள்சுட்டிகள் மூலம் பக்கவாட்டில் திறந்து பல திசைகளில் கொடிவீசிச் செல்லும் அதி(செறிவு)நாவல் என்ற வடிவம் மேலைநாட்டில் 1995-ல் பிறந்தது. ஆரம்பத்தில் அது சிறிய ஆர்வத்தை மட்டுமே உருவாக்கியது. முதல் அதிநாவலான இரா. முருகன் எழுதிய ‘சைபர்னெட் குரல்கள்’ (2013) திண்ணை இணைய இதழில் வெளிவந்தது. அன்று அது ஒரு வேடிக்கையாகவே கருதப்பட்டது. அச்சு ஊடகம் முற்றாக ஒழிந்தபிறகும்கூட மின் ஊடகங்களில் வெகுகாலம் அச்சுமுறை உருவாக்கிய இலக்கிய வடிவங்களே வந்தபடி இருந்தன. நடைமுறை மாற்றங்கள் அழகியலில் பிரதிபலிக்க வெகுநாளாகும். உதாரணமாக மரம் பயன்படுத்தப்படுவது நின்று நூறாண்டுகள் கழித்தும் வீட்டுப் பொருள்கள் மரச் சாமான்கள் போலவே இருந்தன.

இதுவே நாவலுக்கும் நிகழ்ந்தது. கல்வித் துறை நூல்களின் வடிவம் மாற ஆரம்பித்தது. உட்சுட்டிகள் அவற்றில் மிகமிக அவசியமாயின. அவை கலைக்களஞ்சியம் மற்றும் பிறநூல்களை நோக்கித் திறந்தன. அவற்றை சிறுவயது முதலே வாசித்துப் பழகிய ஒரு தலைமுறை உருவானபோது பழங்கால நாவல்களின் நேரடியான முன்னகர்வுதான் அவர்களுக்குச் சிரமம் தருவதாக இருந்தது. அனைத்து நூல்களும் உட்சுட்டிகளின் திறப்புகள் மூலம் முன்னகர்வனவாக ஆயின. அதையொட்டி நாவலின் வடிவமும் நடைமுறையில் மாறியது. பழைய நாவல் வடிவம் முற்றாக வழக்கொழிந்தது. அதிசெறிவு நாவல் வடிவம் மேலும் மேலும் செறிவுகொண்டது. 2065-ல் ‘விஷ்ணுபுரம்’ நாவலை ஆர். ஜீவரத்தினம் சுட்டிகள் மூலம் செறிவுபடுத்தி அதிநாவல் வடிவுக்குக் கொண்டுவந்தது ஒரு திருப்புமுனையாகக் கருதப்படுகிறது. பெரிய நாவல்கள் அனைத்துமே அப்படி உருவமாற்றம் பெற்றன. ஏறத்தாழ எல்லாச் சொற்களிலும் சுட்டிகளுடன் பல்லாயிரம் அடுக்குகள் திறந்துசெல்லும் மாபெரும் அதிநாவலான ‘சின்ன வெங்கடேசன்’ எழுதிய ‘பாய்விரிக் கடல்’ (2072) அதிநாவல் என்ற வடிவின் உச்ச நிறைவுப்புள்ளி. 2088-ல் ‘யாழ் சிவபாலன்’ எழுதிய ‘வெண்குரல்கள்’ தமிழில் உருவான முதல் மின்கதை எனலாம். அதன் பின்பு அவ்வடிவம்

தமிழில் வேரூன்றியது.

ஏறத்தாழ ஐம்பது வருடம் மின்கதை தமிழில் மிகமிகச் செல்வாக்கான இலக்கிய வடிவமாக இருந்தது. மின்கதையின் முக்கியமான சிறப்பம்சம், அது தன் முந்தைய வடிவங்களில் இருந்த முக்கியமான இயல்பொன்றை ரத்து செய்துகொண்டது என்பதே. கதையை குட்டிக்கதை, சிறுகதை, குறுநாவல், நாவல் என்றெல்லாம் பகுக்கும் எல்லை அழிந்தது. ஒரு கதையில் வாசகனே அதன் நீளத்தைத் தன் சுட்டித்தெரிவுகள் மூலம் தீர்மானிக்கிறான் என்பது இவ்வடிவில் உள்ள சிறப்பு. மின்கதை என்ற வடிவின் அடிப்படை விதி 1982-ல் லெஸ்லி ஃபீட்லர் என்பவரால் பின்நவீனத்துவக் கோட்பாடாக முன்வைக்கப்பட்ட அவதானிப்பின் மறுவடிவமே; அதாவது எல்லாக் கதைகளும் சொல்லப்பட்டுவிட்டன; இனிமேல் கதைகளை மீண்டும் சொல்வது மட்டுமே சாத்தியம் என்ற விதி. மின்கதை உண்மையில் கதை சொல்வதில்லை. சொல்லப்பட்ட கதைகளின் பேரடுக்கில் இருந்து துணுக்குகளை எடுத்து கதைகளைப் புதிது புதிதாகக் கோர்க்கிறது. கதைக்கூறுகளின் இணைவுகளினாலான ஆட்டமேமின்கதை எனலாம்.

பிற இலக்கிய வடிவங்களைப் போலவே மின்கதையும் பரிமாறப்பட்ட தட்டினால் வடிவமைக்கப்பட்டது. அதாவது வாத்தியம், ஏடு, காகிதம் போல கணினி மென்பொருள் அப்பணியை ஆற்றியது. முதலில் கதை எழுதுவதற்கான மென்பொருள்கள் பல உருவாகிவந்தன. தமிழில் 2069-ல் ‘அப்துல் ரகுமான்’ வேடிக்கையாக உருவாக்கிய ‘பாட்டி’ என்ற மென்பொருள் இணைய உலகில் உள்ள கதைக்கூறுகளை நிரல்படுத்தி கதைமுடைவுக்கான ஏராளமான சாத்தியங்களை எழுத்தாளனுக்கு உருவாக்கியளிக்கும் எளிய விளையாட்டுப் பொருளாக அறிமுகமாயிற்று. அதைப் பற்றி அக்காலகட்டத்தில் பல நகைச்சுவைக் கதைகள் உலவிவந்தன.அதைக்கொண்டு அரசாங்க வரவுசெலவு அறிக்கையைக் கதையாக மாற்றி ‘ராம்கி-ராமு’ உருவாக்கிய வேடிக்கைக் கதை மிகவும் பிரபலம். ஆனால் ‘பாட்டி’ ஒரு பெரும் புரட்சியின் முன்னோடி. பத்து வருடங்களில் முன்னூறுக்கும் மேற்பட்ட மென்பொருள்கள் சந்தைக்கு வந்தன. ‘கதையன்’, ‘சஞ்சயன்’ ஆகியவை இவற்றில் பெரும் பாய்ச்சல்களை நிகழ்த்தியவை. இருபதாம் நூற்றாண்டு எழுத்தாளனுக்கு பேனா எவ்வளவு முக்கியமோ அந்நிலை மென்பொருள்களுக்கு வந்தது. ‘பாய்விரிக் கடல்’, உண்மையில் ‘வேதாளம்’ மென்பொருளின் படைப்பு என்றால் மிகையல்ல.

மென்பொருள்களின் உதவியுடன் உருவாக்கப்பட்ட கதைகளைப் படிப்பது சிக்கலாக ஆனபோது 2081-ல் சி. விக்டர் சுவாமியப்பன் உருவாக்கிய ‘கண்ணாடி’ என்ற வாசிப்பதற்கான மென்பொருள் சந்தைக்கு வந்தது. மூன்று வருடங்களுக்குள் அதன் இருபத்தைந்தாவது திருத்திய பதிப்பு வந்தது. இலக்கியத் திறனாய்வில் கணிப்பொறி சார்ந்த கலைச்சொற்கள் அதிகமாக ஆயின. இலக்கியத்தின் வடிவம், அர்த்தம் இரண்டுமே முழுக்க முழுக்க கணிப்பொறியியல் சார்ந்தவை என்ற வாதம் ஐசக் கால்டர்ன் என்பவரால் முன்வைக்கப்பட்டது. ஏற்கனவே ழாக் தெரிதா முன்வைத்த மொழியியல் குறைத்தல்வாதம், நோம் சாம்ஸ்கியின் நரம்பியல்குறைத்தல்வாதம் போலவே இதுவும் ஒரு பரபரப்பை உருவாக்கி விரைவிலேயே மறுக்கப்பட்டது. ஆனால் மின்கதை என்ற வடிவம் கதை மென்பொருள்களின் காரணமாக உருவானது என்றால் அது உண்மையே.

மின்கதையை உருவாக்கிய இன்னொரு முக்கியமான காரணி அன்று உருவாகியிருந்த தகவல்வைப்பு எனலாம். அதற்கு முந்தைய காலகட்டங்களுடன் ஒப்பிடுகையில் அது மிகமிக அதிகமானது. 2020-களிலேயே தமிழ் இணையத்தளங்களின் எண்ணிக்கை சில லட்சங்களைத் தாண்டியிருந்தது. 2050-ல் அனைத்து அறிதல் முறைகளும் முற்றிலும் கணிப்பொறி மயமானபோது இது இருபது மடங்காக அதிகரித்தது. இவை ஒவ்வொன்றும் பிரம்மாண்டமான தகவல்வைப்பு கொண்டவை. 2036-ல் சிங்காரவேல் சுந்தரலிங்கம் இவை அனைத்தையும் ஒரே தகவல்வைப்புநிலையாகத் தொகுக்கும் திட்டம் ஒன்றைக் கொண்டுவந்தார். 2038-ல் அது முடிவுற்றது. 2068-ல் ஒரு கட்டுரையில் சாம் சுந்தர்சிங்

குறிப்பிட்டபடி அன்றைய தமிழ் தகவல் வைப்பானது இருபதாம் நூற்றாண்டின் மிகப்பெரிய திடநூலகமான லண்டன் மியூசியம் நூலகத்தினைவிட நாற்பத்தியெட்டாயிரம் மடங்கு பெரிது.

இந்தத் தகவல்வைப்பை கணநேரத்தில் பயன்படுத்தக்கூடிய மென்பொருள்கள் வந்தபோது நூல் என்ற அமைப்பே மாறியது. எழுதப்படவேண்டிய சொற்றொடர்களை அல்லது கருத்துகளைப் புதிதாக உருவாக்குவதற்குப் பதிலாக தகவல்வைப்பில் இருந்து சுட்டினால் மட்டும் போதும் என்ற நிலை உருவானது. ஒரு கட்டுரை என்பது பல்லாயிரம் சுட்டிகளினால் மட்டுமே ஆனதாக இருக்கலாம் என்றானது. தமிழில் 2078-ல் இல.சா. சண்முகசுந்தரம் இப்படி ஒரு கட்டுரையை திண்ணை இணையத்தளத்தில் வேடிக்கையாக உருவாக்கினார். பத்துவருடங்களுக்குள் அதுவே எழுத்துமுறையாக மாறியது. மிக அபூர்வமாக நிபுணர்களால் மட்டுமே நேரடியான கருத்துகளும் சொற்றொடர்களும் உருவாக்கப்பட்டன. கற்பனைத் திறன் அல்லது சிந்தனைத் திறன் அல்லது படைப்புச் சக்தி என்பது புதிய இணைவுகளையும் தொகுப்புகளையும் உருவாக்குவதே என்றானது. இது ஒரு மிகப்பெரிய விடுதலையாக மாறியது. கட்டியெழுப்புதல் என்ற பொறுப்பு இல்லாமலானபோது கற்பனையின் முன்னோக்கிய தடையற்ற பாய்ச்சலே படைப்பு என்று ஆயிற்று.

மின்கதையின் மூன்றாவது காரணியானது காட்சி ஊடகம், கேள்வி ஊடகம் இரண்டும் வாசிப்பு ஊடகத்துடன் இரண்டறக் கலந்ததாகும். 2013-லேயே ‘அம்பலம்’ இணையத் தளத்தில் ‘சுஜாதா’ எழுதிய கதை ஒன்று (காகிதச்சங்கிலிகள்) ஒரு சிறு தகவல்வைப்பில் சேமிக்கப்பட்ட முந்நூறு காட்சிப் படங்கள் மற்றும் ஒலிகளுடன் சுட்டிகள் மூலம் இணைக்கப்பட்டு மூன்று ஊடகங்களும் கலக்கப்பட்டிருந்தன. ஆனால் ஏறத்தாழ ஐம்பது வருடம் அது இயல்பாக நிகழவில்லை. வாசிப்புக்குரிய மென்பொருள்கள் தரமாக வர ஆரம்பித்த பிறகே இது நிகழ்ந்தது. ஒரு மின்கதையில் எல்லாச் சொற்களும் ஒலியாகவும் காட்சிகளாகவும் இயல்பாக மாறும் தன்மைகொண்டவை. அதன் தெரிவை வாசகன் விருப்பத்துக்கு ஏற்ப அந்த மென்பொருள் நிகழ்த்துகிறது. 2093-ல் நிஜக் காட்சித்தன்மை கொண்ட ஒளி ஊடகங்கள் உருவானபோது காட்சிச் சூழலை வாசகன் இருக்கும் அறையையே நிரப்புவதாக அமைக்க முடிந்தது. கடல் என்ற சொல் வாசகனைக் கடல் நடுவே இருக்கச் செய்தது. ஆர்டிக் என்ற சொல்லில் அவன் பனியில் நடுங்கினான்.

இதை இன்று நாம் இவ்வாறு விளக்கலாம். நாய் என்ற சொல்லை வெறுமே எழுதுவதற்குப் பதிலாக அச்சொல் இதுவரை பயன்படுத்தப்பட்ட அத்தனை வடிவங்களும் முறைகளும் சேமிக்கப்பட்டுள்ள தகவல்வைப்பு நிலையில் காணப்படும் அச்சொல்லின் சாத்தியங்கள் மட்டும் எழுத்தாளனால் சுட்டப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்றன. அதாவது அச்சொல் உருவாக்கும் முடிவற்ற அர்த்தங்கள் மற்றும் உணர்வுகளில் அப்படைப்பாளியால் மென்பொருள் மூலம் தெரிவுசெய்யப்பட்டவை மட்டும் அதனுடன் சுட்டிகள் மூலம் இணைக்கப்பட்டுள்ளன. வாசகன் தன் மென்பொருள் மூலம் அதில் சிலவற்றை விரிவாக்கம் செய்துகொள்கிறான். நாயை அவன் பார்க்கவும் கேட்கவும்கூட முடியும். இப்படி ஓர் ஆக்கத்தில் உள்ள அனைத்துச் சொற்களையும் அதன் அடுத்தடுத்த நீட்சிகளையும் தகவல்வைப்பு அளித்தது. மின்கதையின் அடுத்த பரிணாமம் எதிர்பார்க்கக் கூடியதே. மனித மொழியாலான சொற்களுக்குப் பதிலாக மென்பொருள்களால் அடையாளம் காணக்கூடிய மின்குறிகளே போதும் என்றானது. பின்பு மின்குறிகளைச் செறிவுபடுத்தும் முறைவந்தது. 2130-களில் மனித இலக்கியத்தில், மனிதமொழியின், எழுத்துகளின் பயன்பாடு முற்றிலும் இல்லாமலாயிற்று.

2040-களிலேயே மனிதமொழிகளுக்கு இடையேயான மொழியாக்கம் மென்பொருள்களால் மிக இயல்பாகச் செய்யப்பட்டு இலக்கியத்தின் மொழிவேறுபாடுகள் அழிந்துவிட்டிருந்தன. இலக்கியத்தின் மொழியடையாளம் வெறும் கலாசார அடையாளமாகவே இருந்தது. நாய் என்ற சொல் எந்த மொழியிலும் மென்பொருள்களால் உடனடியாக வாசிக்கப்பட்டுவிடும். ஆனால் பைரவ வாகனன் என்ற பொருளானது தமிழ் அடையாளம் கொண்டதாக இருந்தது.

தமிழ் இலக்கியம் என்பது குறிகளைப் பொருள்கொள்ளும் முறையில் உள்ள ஒரு தமிழ்த்தன்மை மட்டுமே என்ற நிலை உருவாகியிருந்தது. அதாவது இப்படிச் சொல்லலாம்; இருபதாம் நூற்றாண்டில் மொழியை வெளிமொழி அகமொழி (லாங் பரோல்) என்று பிரித்திருந்தனர். ஒலிக்குறிப்புகளாலோ எழுத்துகளாலோ வெளிப்படுத்தப்படும் சொற்கள் வெளிமொழி. அதைப் பொருள்படுத்தும் அகக்கட்டமைப்பு அகமொழி. 2040*-களில் மொழியாக்க மென்பொருள்கள் மூலம் வெளிமொழிகள் கலந்து உலகமெங்கும் ஒன்றாக ஆயிற்று. ஆகவே அகமொழி தன் தனித்தன்மையுடன் எஞ்சியது.*

ஏறத்தாழ நூறு வருடங்கள் கழித்து மொழிவடிவின் நேரடிப் பயன்பாடு இல்லாமலானபோது உண்மையில் இந்தக் கலாசார அடையாளம் மேலும் மேலும் வலிமை பெற்றது. ஏனெனில் மொழியின் தனித்தன்மையானது தன்னுடைய சுய வலிமையால் மட்டுமே தன்னை நிகழ்த்திக்கொள்ளவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆகவே அகமொழி மேலும் மேலும் செறிவுபெற்று தனியாக விலகும் தன்மை கொண்டது. மொழிபெயர்ப்பு மென்பொருள்களின் காலம் முடிந்து அகமொழியை மொழியாக்கம் செய்யும் மென்பொருள்களுக்கான தேவை உருவானது. இதை ஒரு விந்தை என்றே சொல்லவேண்டும். இதை நிகழ்த்தியது மின்கதையே. ஒரு தமிழ் மின்கதையை அகமொழியை மொழிபெயர்க்கும் 'சஞ்சயன்', 'புனை' போன்ற மென்பொருள்களின் துணையின்றி ஓர் அராபியன் படிக்கமுடியாது என்ற நிலை உருவாயிற்று. சமூகரீதியாகவும் இதை விளக்கவேண்டும். உலகச் சமூகம் தொழில்நுட்பம் மூலம் இணைந்த காலகட்டம் 2040*-கள் என்றால் தங்கள் தனித்தன்மைகளைத் தக்கவைக்கும்பொருட்டு சமூகங்கள் முற்றாகத் துண்டித்துக்கொண்டு மூடிக்கொண்ட காலகட்டம்* 2130*-கள்.*

2136*-ல் 'கண்ணபிரான்' எழுதிய 'நிலை' என்ற மின்கதையை அவ்வடிவின் உச்சகட்ட சாதனை என்று சொல்லலாம். முற்றிலும் மின்குறிகளால் ஆன அதிசெறிவுமிக்க கோடிக்கணக்கான சுட்டிகளின் தொகை என்று இதைச் சொல்லலாம். இலக்கியத் திறனாய்வாளர் குணசேகரன் தாரமங்கலம் சொல்லிய ஓர் உவமை வேடிக்கையானது. இருபதாம் நூற்றாண்டின் கலைவடிவங்களை வைத்துப் பார்த்தால் அது ஏறத்தாழ நாலாயிரம் திரைப்படங்கள், எழுநூறு நாவல்கள், லட்சத்துக்கும் மேற்பட்ட கவிதைகள், பல லட்சம் பாடல்கள், பல்லாயிரம் இசைக்கோலங்கள், மற்றும் பல்லாயிரம் கதைகளுக்கு நிகரானது. கண்ணபிரான் என்ற பொது அடையாளத்தில் மதுரை பல்கலையைச் சேர்ந்த எண்பது இலக்கிய ஆசிரியர்கள் சேர்ந்து நான்கு வருட உழைப்பின் பயனாக உருவாக்கிய ஆக்கம் இது.* 2170*-களில் மெல்ல மின்கதை என்ற வடிவம் வழக்கொழிய ஆரம்பித்தது. அடுத்தது நுண்கதைகளின் யுகமாக இருந்தது.*

*

மின்கதைகள் வழக்கொழியக் காரணமாக அமைந்தது வழக்கம்போல, பரிமாறப்பட்ட தட்டின் மாற்றமே. 2083*-ல் ஒருங்கிணைந்த ஆப்பிரிக்க அரசு விஞ்ஞானி அ.பெ. மாகெம்பெ புலன்களின் வழியாக அல்லாமல் நுண்ணலைகள் மூலம் நேரடியாக மூளையில் தகவல்பதிவுகளை நிகழ்த்த முடியும் என்பதைக் கண்டுபிடித்தார். நரம்பு நோய்களுக்கான எளிய கதிரியக்கச் சிகிழ்ச்சைமுறையாக இது உருவாக்கப்பட்டது. மூளையில் புற ஸீட்டாக் கதிர்களைச் செலுத்தி, தேர்வுசெய்யப்பட்ட நியூரான்களை மட்டும் அழிக்க முடியும் என்பது முதல் கண்டுபிடிப்பு. இது மனச் சிக்கல்கள், போதைப் பழக்கங்கள் ஆகியவற்றைத் தடுக்கும் சிறந்த முறையாக இருந்தது.* 2097*-ல் இன்னொரு ஒருங்கிணைந்த ஆப்பிரிக்க அரசு விஞ்ஞானியான சாம் அகுலே மூளை நியூரான்களில் புற ஸீட்டாக் கதிர்கள் மூலம் விரும்பிய அளவுக்கு மட்டும் மின்னூட்டத்தை அளிக்கும் கருவியைக் கண்டுபிடித்தார். இதன் மூலம் மனித மனத்தில் உணர்ச்சிகளை வெளியே இருந்து உருவாக்க முடிந்தது. தகவல்தொடர்பில் நடந்த மகத்தான பாய்ச்சல் இது. மனிதன் மொழியை, எழுத்தைக் கண்டுபிடித்ததற்குச் சமானமானது.*

2110-களில் கருவிகள் மூலம் மூளையில் நேரடியாகவே கருத்துகளையும் எண்ணங்களையும் பதிவுசெய்தார்கள். தொடக்கத்தில் இது குற்றவாளிகளிடம் நல்ல எண்ணங்களை வலுக்கட்டாயமாகப் பதிவுசெய்யும் முறையாக இருந்தது. உளநோயாளிகளுக்கும் பயன்பட்டது. 2018 டர்பன் பல்கலை விஞ்ஞானிகள் மூளையிலுள்ள நியூரான்களில் பதிவாகியுள்ள செய்திகளைப் பகுத்துப் பதிவுசெய்யும் மூளைப்பகுப்பு முறைமையை உருவாக்கினார்கள். இருபது வருடங்களுக்குள் மனித மூளையின் அனைத்துத் தகவல்பதிவுகளையும் கணிப்பொறியில் பிரதியெடுக்க இயலும் என்ற நிலை ஏற்பட்டது. தொடர்ந்து ஒரு கணிப்பொறியில் உள்ள அனைத்துத் தகவல்களையும் முறைப்படுத்தி நேரடியாகவே மனித மூளைக்குள் பதிவுசெய்ய முடியும் என்பதும் சாத்தியமாயிற்று. செய்திகளை நேரடியாக மூளைக்குக் கொண்டுசெல்லும் கருவிகள் பலவிதமாக மாற்றமடைந்தன. புற ஸீட்டாக் கதிர்களை உமிழும் ஒரு கருவிக்கு முன்னால் பல மணிநேரம் நின்று மூளைத் தகவல்பதிவைச் செய்யவேண்டியிருந்த நிலை இருபது வருடங்களில் மாறி மூளைக்குள் செலுத்தப்பட்ட ஒரு மிக மெல்லிய பிளாட்டின ஊசியின் மறுநுனியில் கணிப்பொறியின் தொடர்பு தரப்பட்டதும் ஒரு விநாடிக்குள் அனைத்துத் தவல்களும் உரிய நியூரான்களில் பதிவுசெய்யப்படும் நிலை உருவானது.

மேலும் பத்தாண்டுகளில் நெற்றிமையத்தில் செலுத்தப்படும் அதி ஸீட்டாக் கதிர்களினாலான ‘ஊசி’ மூலம் அப்பதிவு நிகழ்த்தப்பட்டது. ஆரம்பத்தில் இது ஆய்வாளர்கள் மத்தியில் நிகழ்ந்தது. பின்பு இளம் குழந்தைகளுக்கு உலகவாழ்க்கையின் அடிப்படைகளைக் கற்றுக்கொடுக்கும் முறையாக வளர்ந்தது. கல்வியில் இம்முறை கடைப்பிடிக்கப்பட்டபோது உடனடியாகக் கலை இலக்கியத்திலும் பரவியது. பல்லாயிரம் வருடங்களாகத் தகவல் தொடர்புக்கு அவசியமாக இருந்த ஒன்று, அதாவது ஊடகம், இல்லாமலாயிற்று. ஓலை, தாள், வானொலி, தொலைக்காட்சி, நுண்கணிப்பொறி என வளர்ந்து வந்த அந்த அம்சம் வழக்கொழிந்தது. ஆரம்பகாலத்தில் மூளையுடன் சிறிய அறுவை சிகிழ்ச்சை மூலம் இணைக்கப்பட்ட வாங்கி மூலம் நுண்ணலைகள் பெறப்பட்டன. பின்பு அதை காதுக்குப் பின் ஒரு சிறிய பொட்டுபோல ஒட்டினால் போதும் என்ற நிலை உருவாயிற்று. கதிர்ப்பரப்பு மையத்துடன் அந்தப் பொட்டுவழியாக நேரடியாகத் தொடர்பு கொண்டிருக்கும் மூளைகள் தாங்கள் விரும்பியதை அவ்விருப்பம் மூலமே தெரிவித்து அக்கணமே அடையமுடியும் என்ற நிலை உருவாகியது.

இம்முறையானது மிக விரைவிலேயே பெரும் பாய்ச்சலை உருவாக்கியிருக்கும் என்பதை எவரும் ஊகிக்கலாம். ஏற்கெனவே உலகின் அனைத்துத் தகவல்தொகைகளையும் ஒருங்கிணைத்து ஒரே தகவல்வெளியாக ஆக்கியிருந்தனர். அத்தகவல்தொகையானது மூளைக்கு வெளியே கணிப்பொறிகளில் இருந்தாலும் எக்கணமும் எண்ணிய உடனே அதிலுள்ள அனைத்தையும் மூளைக்குள் நிரப்பிக் கொள்ள இயலும் என்ற நிலை உருவாயிற்று. அதாவது ஒரு தனி மூளையின் தகவல்திறனானது நடைமுறையில் உலகில் உள்ள அனைத்துத் தகவல்களையும் கொண்டதாக மாறியது. மானுட மூளை என்பது கணிப்பொறிகள் மற்றும் புற ஸீட்டாக் கதிர்களினால் ஆன நரம்புவலையால் இணைக்கப்பட்ட ஒற்றைப் பெரும் மூளையாக உருவானது. அனைத்து செயல்பாடுகளும் உண்மையில் இந்த மாபெரும் ஒற்றைப் பெரும் மூளைக்குள் நிகழ்வதாக ஆயிற்று. இந்த ஒற்றைப் பெரும் மூளை படிப்படியாக உருவாகும்தோறும் நான் ஏற்கெனவே சொன்னபடி மின்கதைகள் வழக்கிழந்தன. அச்செயல்பாடு முழுமையடைந்தபோது நுண்கதை உருவாயிற்று.

நுண்கதை என்பது இந்த ஒற்றைப் பெரும் மூளையால் தனக்குள்ளே நிகழ்த்திக் கொள்ளப்படுவது என்று சுருக்கமாகச் சொல்லலாம். அம்மூளையின் ஓர் அலகான ஒரு மூளைக்குள் உருவாகி அதன் பொதுத் தகவல் கிடங்குக்குள் சேரும் ஓர் ஆக்கம் அது. பழைய முறையில் சொல்வதானால் ஒரு மனித மூளைக்குள் உருவாகும் ஓர் எண்ணம் அல்லது கற்பனை அல்லது கனவுபோல. சில எண்ணங்களை மூளை நீட்டிக்கொள்கிறது. சிலவற்றை

அப்படியே விட்டுவிடுகிறது. ஒன்றை இன்னொன்றுடன் முடைகிறது. இச்செயல்பாடு ஓயாமல் தொடர்ந்து நிகழ்கிறது. ஒருகணத்தில் கோடிகோடி ஆக்கங்கள் நிகழ்ந்துவிடுகின்றன. இக்காலகட்டத்தில்தான் ஆக்கங்களுக்கு ஆக்கியோன் என்பவன் தேவையில்லை என்ற கருத்து உருவாகி ஏறத்தாழ ஐம்பது வருடம் ஆட்சிசெய்திருக்கிறது. காரணம் மானுட மனம் என்பது ஒற்றைப் பேரமைப்பே என்றும் அதன் அணுக்களே ஒவ்வொரு மனமும் என்ற கருத்து சமூகத் தளத்தில் உருவாகி வலுப்பெற்ற காலகட்டம் அது. உலகம் ஒற்றைப் பேரரசாக மாறியது. பூமி மானுடமனம் என்ற ஒற்றை மையத்தால் ஆளப்பட்டது.

ஆகவே நுண்கதைகளை உருவாக்கியவர்களின் பெயர்களும் சரி, அக்கதைகளின் தலைப்புகளும் சரி, இப்போது கிடைப்பதில்லை. கோடிக்கணக்கான செல்கள் கலந்து ஒரு திசுவாகவும் திசுக்கள் இணைந்து ஓர் உறுப்பாகவும் உறுப்புகள் இணைந்து ஓர் உடலாகவும் ஆவதுபோல ஏராளமான நுண்கதைகள் இணைந்து ஒரு வகையான உலகப் பார்வையாக மாறின. அப்பார்வை பூமியில் ஏறத்தாழ இருநூறு வருடம் ஆட்சி செய்திருக்கிறது. இன்று அந்த யுகம், ‘மாபெரும் செயலின்மையின் யுகம்’ என்று அழைக்கப்படுகிறது என நாம் அறிவோம். அந்தக் காலகட்டம் இத்தனை நீள்வதற்குக் காரணம் மெல்ல மெல்ல பூமியில் மானுடமனச் செயல்பாடு மந்தமடைந்தது என்பதே. தனிமூளை தன் செயலை ஆற்றுவதற்கான ஊக்கத்தை இழந்தது. காரணம் தன்னகங்காரம் என்பது இல்லாமலானதே. ஒட்டுமொத்தமாக நிகழ்ந்ததை மீண்டும் நிகழ்த்தியபடி மானுட மனம் சோம்பிக் கிடந்தது. அது உருவாக்கிய புற அமைப்பு - அதை பழைய சொற்களில் அரசு மற்றும் சமூகம் எனலாம் - அச்சோம்பலைப் பிரதிபலித்தது. அது தன் இயல்பான விசையால் இயல்பான செயல்பாடுகளைச் செய்தபடி இருந்தது.

2868-ல் பூமி அதன் சூழல்சீர்கேடுகளினால் அழிந்தது. இன்று வெறும் தகவலாக மாறிவிட்ட இந்நிகழ்வு உண்மையில் இருநூறு வருடங்களாக மிக மெல்ல நிகழ்ந்த ஒன்று. இறுதி நூறு வருடங்களில் பூமியை மீட்க இயலாது என்பது உறுதியாகிவிட்டது. இக்காலகட்டத்தில்தான் மானுடமனத்தின் சோம்பல் யுகம் முடிவுக்கு வந்தது. பலதுறைகளில் கடுமையான நெருக்கடிகளும் அதன் விளைவான பாய்ச்சல்களும் நிகழ்ந்தன. இந்நிகழ்வுகளின் விளைவாக மீண்டும் தனிமனித ஆளுமை அல்லது தனியடையாளம் உருவாகியது. அல்லது தனியடையாளம் உருவானதனால் அச்செயல்வேகம் உருவாயிற்று. இக்காலகட்டத்தில்தான் மீண்டும் நமக்குத் தனியான கண்டுபிடிப்புகள், படைப்புகள், அவற்றை உருவாக்கியவர்களின் பெயர்கள் கிடைக்க ஆரம்பிக்கின்றன. மரபைத் துழாவி பெயர்களைச் சூட்டிக்கொள்ளும் முறை உருவாகியது. உதாரணமாக ஆக்ஸிஜனை அணுக்கூட்டு மூலம் செயற்கையாக உருவாக்குவதைக் கண்டுபிடித்தவர் பழுவேட்டரையர். இது சூட்டிக்கொள்ளப்பட்ட பெயர் என்பதில் ஐயமில்லை. இது இருபதாம் நூற்றாண்டின் தமிழ் நாவலான ‘பொன்னியின் செல்வ’னில் வரும் ஒரு கதாபாத்திரம்.

முதலில் பூமிமீது கடுமையான கதிர்வீச்சுகள் உருவாயின. உயிர் வாழ்க்கை நெருக்கடிக்குள்ளாயிற்று. மெல்ல மெல்ல பூமியைக் கைவிட்டு மனித இனம் பிற கோள்களில் குடியேற ஆரம்பித்தது. இக்கோள்களில் அணுவெடிப்புகள் மற்றும் கதிர்க் கொந்தளிப்புகள் உருவாக்கப்பட்டு ஆக்ஸிஜன், நைட்ரஜன் முதலியவை செயற்கையாக உருவாக்கப்பட்டன. அணு எண் மாற்ற வேதியியல், 2589-ல் ஷேக்ஸ்பியரால் பாதரசத்தைத் தங்கமாக மாற்றியபடி தொடங்கப்பட்டது. அது பெரிய துறையாக வளர்ந்து பருப்பொருள் என ஒன்று இருந்தால் அதிலிருந்து எந்தப் பொருளையும் உருவாக்கிவிடலாம் என்ற நிலை உருவானது. ஆகவே எந்தக் கோளிலும் குடியேறலாம் என்றாயிற்று.

2612-ல் சந்திரகுப்தர் தன் ஆய்வகத்தில் நுண்துகள் எண்ணிக்கை மாற்றம் மூலம் புரோட்டானை உருவாக்க எளிய வழியைக் கண்டுபிடித்தது ஒரு திருப்புமுனை. மனித இனம் முதலில் செவ்வாய்க் கோளில் குடியேறியது. அங்கு ஆக்ஸிஜன் நிரப்பப்பட்ட மூடிய குடியிருப்புகள் கட்டப்பட்டன. அதற்குள் மாவும் சர்க்கரையும் புரோட்டானும் பிற பொருள்களும் செயற்கையாக உருவாக்கப்பட்டன.

2800-களின் இறுதியிலேயே பூமி ஏறத்தாழ கைவிடப்பட்டுவிட்டது. அதை நினைவுகூர்ந்திருந்த தலைமுறை அழிந்தது. அது மெல்ல மெல்ல மறக்கப்பட்டுவிட்டதனால் அதில் ஏற்பட்ட அணுப்பெருவெடிப்பும் முழுமையான அழிவும் மனித மனங்களில் பெரிய அளவில் நேரடிப் பாதிப்பை உருவாக்கவில்லை. இப்போது எட்டு பெரிய நிலவுகளாகவும் பல்லாயிரம் துண்டுகளாகவும் அண்ட வெளியில் சுழலும் அது, அடிக்கடி நினைவுகூரப்படும் ஒன்று அல்ல. காலப்போக்கில் அதன் அழிவு ஓர் உளக்குறியீட்டு நிகழ்வாகவே காணப்பட்டது. மேலும் மானுட இனம் ஏறத்தாழ இருபத்தைந்து கோள்களிலும் துணைக்கோள்களிலுமாகக் குடியேறி மிக விரிவான இடத்தை ஆக்ரமித்துக் கொண்டபின்பு வானில் இருண்ட துணுக்குகளாகத் தென்படும் அந்தக் கோளை, வெளியேறிய பிறகு கருப்பையைத் திரும்பிப் பார்க்கும் மனநிலையுடன்தான் மனிதர்கள் கண்டார்கள். அங்கே மனித இனம் நெருக்கியடித்துக்கொண்டு, மிக மிகக் குறைவான வளங்களுக்காக ஓயாது போர் புரிந்தபடி, இயற்கைச் சக்திகளால் புழுக்கள்போல கோடிக்கணக்காக அழிக்கப்பட்டபடி வாழ்ந்ததைப் பற்றி இன்றைய தலைமுறை சரியாக அறியாது.

ஆனால் கருப்பை அனைவரிலும் கருத்துவடிவில் எஞ்சுகிறது. தாங்கள் வந்து வாழ நேர்ந்த பிரம்மாண்டப் பருவெளி மனிதர்களை அச்சுறுத்தியது போலும். பூமியை விட்டுவிட்டபிறகு புதிய காலக்கணிப்பு உருவாயிற்று. காலம் பூமிவருடம், வெளிவருடம் எனப் பிரிக்கப்பட்டது. பூமியில் இருந்த வாழ்க்கையை மனவெளியில் மீண்டும் அமைத்துக் கொள்ளும் வேகம் உருவாகி இருநூறு வருடம் வலுவாக இருந்தது. நாடுகள், மொழிகள், கலாசாரங்கள், இலக்கிய மரபுகள் அனைத்தும் மீண்டும் உருவகிக்கப்பட்டன. இவை மனித மனம் என்று தொகுக்கப்பட்ட ஒற்றைப் பேரிருப்பில் இருந்து பிரித்து உருவாக்கப்பட்டன. மீண்டும் தனி மனித ஆளுமைகள், தனி மனித மனங்கள் உருவாயின. ஊர்களும் வம்சங்களும் உருவகிக்கப்பட்டன. வீடுகள் உருவாயின. குடும்பம், மனைவி, மக்கள் எனற சமூக அமைப்பு உருவாக்கப்பட்டது. தீபாவளி, பொங்கல் போன்ற கொண்டாட்டங்கள் உருவாயின. மதுரை சண்முகவடிவேல் நாடார் என்ற மனிதர் வெளிவருடம் 112-ல் செவ்வாய் கிரகத்தில் வாழ்ந்த அறிவியலாளர் என்பதை இங்கே உதாரணம் காட்டலாம். இத்தகைய ஒரு பெயரை பூமி வருடம் இருபதாம் நூற்றாண்டில்தான் நாம் காணமுடியும்.

இக்காலகட்டத்தில் மீண்டும் தனிமனிதர்களால் படைப்புகள் உருவாக்கப்பட்டன. மீண்டும் எழுத்தாளனும் வாசகனும் உருவாயினர். ஆனால் அச்சொற்களின் பொருள்களே முற்றாக மாறிவிட்டன. காரணம் எழுத்து, வாசிப்பு இரண்டுமே நிகழாமல் ஆகி நூற்றாண்டுகள் தாண்டிவிட்டிருந்தன. மனித மனங்கள் நுண்கதிர்களின் மூலம் முழுமையாக இணைக்கப்பட்டிருந்தன. ஆனாலும் இவ்வுருவகங்கள் மேலும் மேலும் வலுப்பெற்றன. தமிழ் வாசகன் தமிழ் இலக்கியத்தைப் பற்றி மட்டுமே அறிந்திருப்பதாக உருவகிக்கப்பட்டான். பூமிக்காலத்துப் படைப்புகள் ஏறத்தாழ அனைத்துமே அவற்றின் முழு உரைகளுடன் பதிப்புத் தகவல்களுடன் மீண்டும் தகவல்நிலையின் முகப்புக்குக் கொண்டுவரப்பட்டன. ஏராளமான தமிழ்க் கதைப் பாடல்களும் காப்பியங்களும் நாவல்களும் உருவாயின. சிலப்பதிகாரம், நல்லதங்காள் கதை முதலிய ஏராளமான கதைகள் மீண்டும் படைக்கப்பட்டன. தி. ஜானகிராமன், சுந்தர ராமசாமி, நாஞ்சில்நாடன் போன்ற பெயர்கள் பரபரப்பான பேச்சாக இருந்தன. அக்கால நாடகங்கள், திரைப்படங்கள் ஆகியவையும் மீண்டும் உருவாக்கப்பட்டு ரசிக்கப்பட்டன.

இக்காலத்தைய படைப்புகள் ஆச்சரியமூட்டும் அளவுக்கு பூமிக்காலப் படைப்புகள் போலுள்ளன. கரையூர் அம்மூவனார் எழுதிய ‘விஷ்ணுபுரம் இரண்டாம் பாகம்’, சரவண் எழுதிய ‘பொன்னியின் செல்வன் மறுபகுதி’ ஆகியவை உதாரணங்கள். இக்காலக் கதைக்கருக்களும் பெரும்பகுதி இல்லாதொழிந்த அக்காலகட்டத்தைப் பற்றியவையே. வைகையில் வந்த ஒரு வெள்ளத்தைப் பற்றிச் சொல்லும் ‘பிட்டுமண்’ (குமார் பொன்னம்பலம்), சென்னை நகரத்தில் ஒரு நாளைப் பற்றி விவரிக்கும் ‘தேர்நிலை’ (மதுரை

கணக்காயன்), ஆசிரியப்பாவில் எழுதப்பட்ட நாடகமான ‘ராஜராஜசோழன் உலா’ (சுத்தானந்த பாரதி), கடலூர் வட்டாரத்து மக்களின் வேர்க்கடலை வேளாண்மையைப் பற்றிய சித்திரிப்பான ‘செம்புலப் பெயல்’ (சுந்தரம் கண்ணதாசன்), ஊட்டியில் நடந்த ஒரு கொலையைத் துப்பறியும் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரின் கதையான ‘இரண்டாவது இரவு’ (நல்லந்துவனார்) ஆகியவை வகைக்கு ஒரு மாதிரியாக உதாரணமாகச் சுட்டப்படவேண்டியவை.

இப்போக்கின் உச்சம் புத்தகங்களை அச்சிடுதல் எனலாம். புராதன தகவல்தொகையில் இருந்து நூல்களின் வடிவம் மீட்கப்பட்டு அப்படியே மீண்டும் உருவாக்கப்பட்டது. அவை அரிய பொருள்களாக உற்சாகத்துடன் சேர்க்கப்பட்டன. வீடுகளில் உ.வே. சாமிநாதய்யர் நூலக வெளியீடான ‘என் சரித்திரமு’ம் (1988) தமிழினி வெளியீடான ஜெயமோகனின் ‘பின்தொடரும் நிழலின் குரலு’ம் (2001) அப்படியே வைக்கப்பட்டிருந்தன. அபூர்வமாக அவை அவ்வடிவில் படிக்கவும் பட்டன. இக்காலகட்டத்தில் வீடுகளின் அறைகள் இருபத்தொன்றாம் நூற்றாண்டு தமிழ்நாட்டு வீடுகள்போல வடிவமைக்கப்பட்டிருந்தமையால் நூலகம் என்ற அமைப்பு தேவைப்பட்டது. இந்த அலையின் ஒரு பகுதியாக பழங்கால எழுத்தாளர்களின் நேர்க்காட்சி ஒளிவடிவங்கள் உருவாக்கப்பட்டு அவர்களை மேடையேற்றி அக்கால மாதிரியிலேயே இலக்கியக் கூட்டங்கள் நிகழ்த்தப்பட்டன. இவர்களில் ஜெயகாந்தனின் மேடையுரை அவரது குரல், உடல்மொழி ஆகியவற்றின் காரணமாக மிகப் பரவலாக ரசிக்கப்பட்டது.

இக்காலகட்டத்தில்தான் குடியேறிய கோள்களில் புது வாழ்க்கைமுறையை உருவாக்கும்பொருட்டு கடுமையான உழைப்பும் புதிய ஆய்வுகளும் நிகழ்ந்தன என்பதை இங்கே கணக்கில் கொள்ளவேண்டும். ஒருபக்கம் புற வாழ்க்கை விரிவடைந்தது; மறுபக்கம் அகவாழ்க்கை சுருங்கியது. தமிழ்ப் பண்பாடு மற்றும் வாழ்க்கை முறையுடன் இணைந்து இந்து மதம், குறிப்பாக சைவம் வளர்ச்சி அடைந்தது. காருண்யன் எழுதிய ‘சைவமும் தமிழும்’, டேனியல் பருத்தித்துறை எழுதிய ‘முருகனின் முகங்கள்’, செல்லப்பன் எழுதிய ‘தமிழ்ப் பண்பாட்டுக் களஞ்சியம்’ போன்ற நூல்கள் இக்கால மனநிலைகளைக் காட்டுகின்றன. இதைப் பொதுவாக மீட்பு யுகம் என்று சொல்கிறார்கள். கோள்களில் வாழ்க்கை நன்றாக வேரூன்றிய 230-களில் இப்போக்கு மெல்ல இல்லாமலானாலும்கூட தமிழ்க்கூறு என்பது வெளியுக வாழ்வின் பிரிக்க இயலாத அம்சமாகவே நீண்ட நாட்களாக இருந்தது. மெல்ல மெல்ல மென்கதை என்ற வடிவம் உருவாகி வந்தபோது மீட்பு யுகமும் நினைவுகளாக மாறிவிட்டிருந்தது.

மென்கதை என்ற சொல்லாட்சியானது இருபத்தொன்றாம் பூமி நூற்றாண்டுக் கலைச்சொல்லான மென்பொருள் என்பதன் மறுவடிவம். இலக்கியக் கோட்பாட்டாளரான கலைச்செல்வன் உருவாக்கியது. மனித உடல் வன்பரு என்றும் அதற்குள் நிகழ்வதெல்லாம் மென்கதை என்றும் உருவகிக்கப்பட்டது. கோள்களில் உருவான புதிய வாழ்க்கையைப் பற்றிய தரிசனங்களே மென்கதையின் பெரும்பகுதி எனலாம். மென்கதையானது பூமிக்காலத்துடன் ஒப்பிட்டால் கதை, கவிதை, அறிவியல் கோட்பாடு, வரலாறு, நினைவுகூர்தல் ஆகியவற்றை ஒன்றாக்கிய ஒரு நிகழ்வு. இவ்வேறுபாடுகள் பூமிக்காலத்துக்குப் பிறகு மெல்ல மெல்ல இல்லாமல் ஆகிவிட்டன. மனித இனத்தின் முன் விரிந்து கிடந்த வான்வெளி ஒரு பெரிய அறைகூவலாக இருந்தது. அது சாத்தியங்களினால் ஆன பெருவெளி. அறிதல்களின் முடிவின்மை. ஆரம்பத்தில் அதை அஞ்சி, அதைத் தவிர்த்து, இறந்தகாலத்தில் வாழ முயன்ற மனித இனத்துக்கு மீட்பு யுகப் படிப்புகள் தேவையாயின. அடுத்த தலைமுறையினர் பெருவெளிமீது வெற்றிகள் பெறத் தொடங்கியபோது அதற்குரிய வடிவமாக மென்கதை உருவாகியது.

மனிதர்கள், தமிழர்கள் வாழ்ந்த பகுதிகளின் விரிவும் வேறுபாடும் இவ்வடிவை முக்கியமாகத் தீர்மானித்தன. உலோகங்கள் உருகும் வெப்பநிலை கொண்ட கோளங்கள் முதல் எவ்வித

திரவமும் இருக்க இயலாத அளவுக்கு உக்கிரமான குளிர் கொண்ட கோள்கள் வரை, அதி ஈர்ப்புவிசைக் கோள்கள் முதல் ஈர்ப்பே இல்லாது மனிதர்கள் பறந்தலையும் நிலாக்கோள்கள் வரை அவர்கள் சிதறி வாழ்ந்தனர். ஆனால் அனைவரும் நுண்ணலைத் தொடர்பு மூலம் ஒரே மூளையாக மாறிச் சிந்திக்கும் தன்மையும் கொண்டிருந்தனர். உண்மையில் மனித இனமே ஒரே மூளையாகத்தான் சிந்தித்தது. ஆனால் அதற்குள் தமிழ்மனம் உருவகிக்கப்பட்டது. அதற்குள் சேர சோழ பாண்டிய தொண்டை மண்டலங்கள் உருவகிக்கப்பட்டன. தனி மனித மனமும் அப்படிப்பட்ட ஓர் உருவகமாக இருக்கலாம்தான். இக்குழுக்களுக்குள் நிகழும் மனஅலை என்று மென்கதையைச் சொல்லலாம்.

மென்கதை ஒரு மனத்தில் உருவாகி பிற மனங்களுக்குச் செல்கிறது. அது ஒரு தொடர்ந்த பெரும் உரையாடல். அல்லது சேர்ந்திசை. வளர்ந்து வளர்ந்து பெருகும் அது ஓர் உச்சத்தை அடைந்து மெல்ல இல்லாமலாகிறது. பல்லாயிரம் மனித மனங்கள் அதில் பங்கு பெறுகின்றன. அதன் வடிவம் என்பது ஏறத்தாழ தீ போன்றது. வடிவமில்லாத ஒரு தீவிரம் பொங்கி மேல்நோக்கி எழுந்தணைவது என்று அதைச் சொல்லலாம். 480-கள் வரை மென்கதையை ஆசிரியர் அற்ற ஒரு படைப்பாகக் கொள்ளும் வழக்கம் இருந்தது. மென்கதைகள் இணைந்து இணைந்து இன்று அக்காலகட்டத்தின் நினைவாக ஒரே மாபெரும் மென்கதையாக அது நினைவில் உள்ளது. 480-ல் மலைச்செந்நறவனார் தன்னுடைய ஆக்கத்தில் தன் பெயரைச் சேர்த்தார். அது அவர் பெயரில் வழங்கப்படலாயிற்று. அத்துடன் தனிப்பட்ட படைப்புகள் உருவாக ஆரம்பித்தன. பிற்பாடு ஒரு குழு அதற்கு ஓர் ஆசிரியர் பெயரைப் போட்டுக் கொள்ளத் தொடங்கியது. ‘கண்ணனார்’ என்பது பலர் அடங்கிய ஒரு குழுவேயாகும்.

இதன் அடுத்த கட்ட வளர்ச்சியே இன்று இங்கே பலவாறாகப் பேசப்பட்ட நவீன இலக்கிய வடிவங்கள் என்று சொல்லலாம். சமகால வடிவங்களைப் பற்றி நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை. இன்றைய இலக்கிய வடிவங்கள் மென்கதைக்கும் அதற்கு முந்தைய மீட்புவாதத்துக்கும் இடையேயான சமரசங்கள் என்று சுருக்கமாகச் சொல்லலாம். மென்கதையானது உருவாக்கப்படுவதிலும் உணரப்படுவதிலும் அதன் அனைத்துத் தனித்தன்மைகளையும் தக்கவைத்துக் கொண்டபோதிலும் மேல்தளத்தில் காவியம், நாவல், சிறுகதை போன்ற ஒரு வடிவபாவனை அதற்கு அளிக்கப்படுகிறது இன்று. கணநேர மின்னலாக உருவாகி, அறியப்படும் அருவமான மனநிகழ்வாக இருக்கும் இவ்வடிவங்களை வேறு ஒரு தளத்தில் நாம் தனித்தனியான ஆக்கங்களாகவும் கணக்கு வைக்கிறோம். தனித்தனியாக ஆய்வு செய்கிறோம். இந்த ஆய்வுகளுக்கு பூமி வருடத்து மொழிநடையையும் அலசல் சார்ந்த தர்க்கமுறை ஆகியவற்றையும் கையாள்கிறோம். இக்கட்டுரை, இந்த ஆய்வரங்கு ஆகியவைகூட அத்தகைய ஒரு புறயதார்த்தமாக உருவாக்கப்பட்டவை. இருபத்தொன்றாம் நூற்றாண்டு புகழ்பெற்ற புனைகதையாளரான ‘ஜெயமோகன்’ என்ற பெயரை நான் சூட்டிக்கொண்டிருக்கிறேன். இக்கட்டுரையையும் அவரது மொழிநடையிலேயே அமைத்திருக்கிறேன்.

அறிதல்முறையில் உருவான மாற்றங்கள் இலக்கியம் என்ற இப்பாவனையையும் மாற்றிவருகின்றன. ஒரு மனிதமூளையைப் பிரதிசெய்து, பலநூறு நுண்கணினிகளில் பொருத்தி, வெளியில் மானுடர் வாழும் எல்லா உலகங்களிலும் வைத்து அவற்றை நம் மூளையுடன் தொடர்புபடுத்தி, ஒரே சமயம் அனைத்தையும் அறிந்துகொண்டிருக்கிறோம். ஓர் உடல் இறக்கும்போது மூளை அப்படியே அடுத்த மூளைக்குள் சேர்க்கப்படுகிறது. ஆகவே நமக்கு ஆளுமை மரணம் இல்லை. நம்மைப் பொருத்தவரை இடம், காலம் என்ற சொற்களுக்குப் பொருளே இல்லை. நாம் நம் மூளையின் அனைத்துத் திறன்களையும் வெளியில் ஏவி இப்பெரு விரிவை உள்வாங்க முயல்கிறோம். கால இடவெளி நமக்கு மலைப்பும் அச்சமும் கொடுக்கும் பெரும் அறைகூவலாக உள்ளது. அவ்வறைகூவல் கண்முன் உள்ளதனால் நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கணமும் கடுமையாக உழைத்துக்கொண்டிருக்கிறோம்.

இவ்வுழைப்பின் இடைவெளிகளில் நாம் இலக்கியத்தை நாடுகிறோம். ஆனால் இளைப்பாறுதலுக்காக மட்டுமல்ல. இலக்கியம் என்றுமே இளைப்பாற்றும் முறைமையாக இருந்து வந்துள்ளது உண்மை. ஆனால் அது அதற்கும் ஒருபடி மேல்தான். அது என்ன?

*

சான்றோர்களே அன்பர்களே,

இக்கருத்தரங்கில் இதுவரை முன்வைக்கப்பட்ட இக்கருத்துகளை இவ்வாறு தொகுத்துக்கொள்ள விழைகிறேன். தமிழ்மரபின் தொடக்க காலத்தில் சங்க இலக்கியங்கள் உள்ளன. அவற்றை ஆராய்ந்த அக்கால அறிஞர்கள் அவை மறைந்து இல்லாமல்போன ஒரு மாபெரும் பண்பாட்டின் இடிபாடுகளில் இருந்து எஞ்சிய துணுக்குகள்போல உள்ளன என்று சொல்லியிருக்கிறார்கள். குமரிக் கண்டம் என்று சொல்லப்படும் ஒரு நிலப்பரப்பும் அங்கு ஒரு பெரிய பண்பாடும் இருந்துள்ளது என்ற கருத்து வலிமையாக இருந்துள்ளது. சங்கப் பாடல்களில் வரும் ஏராளமான தொல்லியல் பாவைகள் - அவை சங்க கால மக்களுக்கே தொல் தெய்வங்களாக இருந்தன - பூதங்கள் முதலியவற்றை நாம் இவ்வாறாகத்தான் புரிந்துகொள்ளமுடியும். அழிந்து மறைந்த அப்பண்பாடு எங்கே போயிற்று? அது அவர்களுடைய ஆழ்மனத்தில், நனவிலியில் உறைந்தது. அவர்கள் மொழியில் அது புதைந்து கிடந்தது. அவர்கள் உருவாக்கிய கலை, இலக்கியம், வாழ்க்கை முறை அனைத்திலும் அது மீண்டும் மீண்டும் புது வடிவம் கொண்டு பிறந்தது.

சங்க இலக்கியங்களைப் பிற்கால வாசகன் ஒருவன் வாசிக்கும்போது அவன் ரசிப்பது என்ன? நண்பர்களே, அக்காலத் திறனாய்வாளர்கள் சொல்லிவந்த 'ஆழம்' என்பது என்ன? ஒரு படைப்பு அது சொல்லியவற்றைவிட அதிகமாக ஊகிக்க வைக்கும்போது அது ஆழமானது என்று சொல்லப்பட்டது. அப்படி நிகழ்த்தப்படும் ஊகமே இலக்கிய இன்பம் என்று கொள்ளப்பட்டது, ரசிக்கப்பட்டது. எப்படி ஒரு படைப்பு ஊகிக்கவைக்கிறது? பிற்கால உளவியலாளர்கள் அக்காலத்தில் வகுத்ததை வைத்துப் பார்த்தால் ஒரு படைப்பின் மொழியாட்சி, படிமம் முதலியவை எங்கே ஆழ்மனத்தை, நனவிலியைத் தீண்டி எழுப்புகிறதோ அப்போதுதான் கற்பனை நிகழ்கிறது. படைப்பின் ஆழம் என்று சொல்லப்பட்டது அதனுள் புதைந்துள்ள ஆழ்மனக்கூறுதான். வாசகனின் ஆழ்மனத்தை அது சென்று தொடுவதையே இலக்கிய அனுபவம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு குறி அல்லது படிமம் என்பது ஆழ்மனத்தின் ஒரு கூறைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஓர் அடையாளமே ஆகும். சங்ககால மனத்தில் அதற்கு முந்தைய அழிந்துபோன பண்பாடுதான் ஆழ்மனமாக மாறித் தேங்கியிருந்தது.

அப்படியானால் வாசிப்பு என்பது வெறுமே ஆழ்மனமாக உறையும் பண்பாட்டின் இறந்தகாலத்துக்குச் செல்லும் கனவுப் பயணம் மட்டும்தானா? ஒரு படைப்பை நாம் வாசிக்கும்போது நம் அன்றாட நடைமுறை வாழ்க்கையுடன் அது கொள்ளும் தொடர்பும் நமக்கு மிக முக்கியமானதாக உள்ளது. அப்படிப்பட்ட ஒரு தொடர்பை முற்றிலும் உருவாக்காத படைப்பை நாம் ரசிப்பதில்லை. அதேபோல நம் மனத்தில் எதிர்காலம் குறித்து ஊறிக்கொண்டிருக்கும் கனவைத் தீண்டும் படைப்பும் நமக்கு மிக்க மனத்தூண்டலை அளிக்கிறது. ஆகவே இப்படிச் சொல்லலாம் - இறந்தகாலத்தின் முடிவில்லா ஆழத்தை நிகழ்காலத்துடனும் எதிர்காலத்தின் முடிவின்மையுடனும் ஒரே செயல்மூலம் இணைக்கக்கூடிய ஓர் அக நிகழ்வே இலக்கிய வாசிப்பு என்பது.

நம் முன்னோர்கள் பூமியில் வாழ்ந்த காலம் இத்தனை தகவல்பதிவுகள் இருந்தும் இன்று நம்மால் அறிய முடியாததாக உள்ளது. ஆனால் அன்று இருந்த எதுவும் அழியவில்லை. அவை உருமாறி நம் ஆழ்மனமாக மாறிவிட்டன. இன்று நம்முள் மாபெரும் குறியீட்டு, படிம வெளியாக உள்ளது அக்காலம். நமது மொழியின் ஆழம், நம் கனவுகளின் நிலம் அதுவே. நம் படைப்புகள், குறிகள் மற்றும் படிமங்கள் மூலம் நம் ஆழ்மனத்தைத் தூண்டி ஒரு கனவை

மீட்பதுபோல அவற்றை மீட்டெடுக்கின்றன. அவற்றை நமது இன்றைய யதார்த்தத்துடனும் நாளை குறித்த கனவுகளுடனும் பிணைக்கின்றன. நாளை நாம் நட்சத்திர மண்டலங்களில் குடியேறலாம். நமக்கு அருவ உடல்கள் மட்டும் இருக்கலாம். நாம் ஒளிவேகத்தை மிஞ்சிப் பயணம் செய்யலாம். அப்போதும் இலக்கியம் மூலம் நாம் இந்த முக்கால இணைப்பைச் செய்தபடியே இருப்போம் என்றே சொல்ல விழைகிறேன். இலக்கிய வடிவங்களின் ஆதி நோக்கம் இதுவே. அத்தேவை இருக்கும் வரை இலக்கியம் இருந்தபடியேதான் இருக்கும் - மனிதகுலம் உள்ளவரை.

நன்றி.

குறிப்புகளுக்காக

---

* Chariots of the Gods?, Erich von Däniken

விசும்பு அறிவியல் : புனைகதைகள் Visumbu: Ariviyal Punaikadhaigal
ஜெயமோகன் Jeyamohan ©

This digital edition published in 2016 by

Kizhakku Pathippagam

177/103, First Floor, Ambal's Building,

Lloyds Road, Royapettah,

Chennai 600 014, India.

Email: support@nhm.in
Web: www.nhmreader.in

First published in print in December 2010 by Kizhakku Pathippagam

All rights reserved.

Kizhakku Pathippagam is an imprint of New Horizon Media Private Limited, Chennai, India.

This e-book is sold subject to the condition that it shall not, by way of trade or otherwise, be lent, resold, hired out, or otherwise circulated without the publisher's prior written consent in any form of binding or cover other than that in which it is published. No part of this publication may be reproduced, stored in or introduced into a retrieval system, or transmitted in any form or by any means, whether electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of both the copyright owner and the above-mentioned publisher of this book. Any unauthorised distribution of this e-book may be considered a direct infringement of copyright and those responsible may be liable in law accordingly.

All rights relating to this work rest with the copyright holder. Except for reviews and quotations, use or republication of any part of this work is prohibited under the copyright act, without the prior written permission of the publisher of this book.